# கர்நாடக சங்கீதம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
**www.nie.lk**
**info@nie.lk**

# கர்நாடக சங்கீதம்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**


**அழகியற் கல்வித் துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**
**இலங்கை**
**www.nie.lk**
**info@nie.lk**

**கர்நாடக சங்கீதம்**

தரம் - 10

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு : 2014

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

அழகியல் துறை

மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

***பதிப்பு:***

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# பாட அறிமுகம்

வளர்ந்து வரும் நாகரிக வளர்ச்சிக்கேற்ப சமூகத்திலும் பல மாற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதற்கிணங்க பாடசாலை கலைத்திட்டத்திலும் மாற்றியமைக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். அந்த வகையில் தற்கால தேவைகளிற்கமைய பாடசாலை கலைத்திட்டமானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது என்பது கல்வியலாளர்களின் ஒருமித்த கருத்தாகும்.

இசைக்கலையானது நடைமுறையில் உள்ள பாடசாலை கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெறுகின்றது. இசையைக் கற்பதால் மாணவரிடையே உள்ளத்தில் காணப்படும் இரசித்தல் திறன், ஆக்கத்திறன், விமர்சிக்கும் திறன் என்பன வெளிக்கொணரப்படுவதுடன் ஒருவரின் சமநிலை ஆளுமை வளர்ச்சிக்கு இத்திறன்கள் யாவும் விருத்தி செய்யப்படல் அவசியமாகும்.

அன்பு, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு பிறரை மதித்தல் சகோதரத்துவம் பிறநாட்டு இசைகளையும், மக்களின் உணர்வுகளையும் மதிக்கும் பண்பு போன்ற நற்குணங்களை கொண்ட பிரஜைகளை உருவாக்குவதில் இசை முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இரசித்தல் ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் கற்றற் பேறு அடைவதற்கான கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கமைய இக்கலைத்திட்டத்தின் வடிவமைப்பிற்கமைய 2015 ஆம் ஆண்டு தரம் 6, 10 இற்கான கர்நாடக சங்கீத புதிய கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

மாணவர்கள் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களிற்கு ஏற்றவாறு கற்றற்பேற்றை அடைவதற்காக மாணவர்களிடம் உள்ள இயற்கையாக உள்ள திறன்களை உபயோகித்து கற்றல் கற்பித்தல் அணுகுமுறையும் செயற்பாடுகளும் அமையும் முறை, மிகவும் முக்கியமானதாகும்.

**பணிப்பாளர்**
அழகியற் கல்வித்துறை
தேசியகல்வி நிறுவகம்
மஹரகம.

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | - | கல்விசார் அலுவல்கள் சபை |
| **செயற்றிட்ட இணைப்பாளர்** | - | செயற்திட்ட அதிகாரி<br>ஞானஸ்ரீ B. கமகே<br>விரிவுரையாளர்<br>அழகியற்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவம் |
| 1. திரு. வை. கணேசலிங்கம் | - | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு. |
| 2. திருமதி. வி. நாகேஸ்வரன் | - | உதவிக் கல்விப்பணிப்பாளர்<br>வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம். |
| 3. திருமதி. க. ஜெயபாலசிங்கம் | - | உதவிக் கல்விப்பணிப்பாளர்<br>வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். |
| 4. திருமதி. க. ஸ்ரீஸ்கந்தராஜா | - | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு. |
| 5. திருமதி. இ. சண்முகலிங்கம் | - | உதவிக் கல்விப்பணிப்பாளர்<br>வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு. |
| 6. செல்வி. க. சந்திரிக்கா | - | ஆசிரியர்<br>யா/சென்ற் ஆன்ஸ் கல்லூரி<br>மானிப்பாய் |
| 7. திரு. அ. கிருஷ்ணானந்தன் | - | ஆசிரியர்<br>யா/ஹாட்லிக் கல்லூரி<br>பருத்தித்துறை |
| 8. திருமதி. ம. கலைவாணி | - | உதவிக் கல்விப்பணிப்பாளர்<br>வலயக்கல்வி அலுவலகம், கண்டி. |
| **மொழி மேற்பார்வை** | - | திரு. து. ராஜேந்திரம்<br>சிரேஸ்ட விரிவுரையாளர் கல்விப்பீடம் (ஓய்வு)<br>திறந்த பல்கலைக்கழகம். |
| | - | திருமதி. யூ. விவேகானந்தன்<br>ஆசிரியர், திக்ஒய வித்தியாலயம், திக்ஒய |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 10 இற்கான கர்நாடக சங்கீத பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமாக நடாத்துவதற்கு துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனை பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

- பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக நேர முகாமை செய்தல்.

- 5 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறை தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்த தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விரைந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

- தாமே ஒரு செயற்பாடுகளை செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனமெடுப்பது பயனுடையதாகும்.
    - அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப் பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரை பாடத்தின் பால் ஈர்த்தல். முன்னறிவை, மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
    - மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலை கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
    - முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள் ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்த பாடத்தை நிறைவு செய்தல்.
    - இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேலும் செழுமைப் படுத்திக் கொள்ளலாம்.

- அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படை யாகக் கொண்டு தட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

- பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் :<br>1.1.1, 2.1.1, 3.1.1, 3.1.2, 3.3.1, 4.1.1, 3.4.1 4.1.2, 4.2.1, 4.3.1, 5.1.1, 5.2.1 | செயற்பாட்டு இலக்கம் :<br>1.2.1, 2.2.1, 3.1.3, 3.2.1, 4.2.2, 4.2.3, 4.3.2, 4.4.1, 4.5.1, 5.1.2 | செயற்பாட்டு இலக்கம் :<br>1.3.1, 2.3.1, 3.1.3, 3.2.2, 3.5.1, 3.6.1, 4.1.3, 4.2.4, 4.3.3, 4.4.2, 5.2.2 |

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| அறிமுகம் | v |
| பாடத்திட்டக்குழு | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vii |
| உள்ளடக்கம் | viii |
| பாடத்திட்டம் | ix - xix |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | |
| தவணை I | 01 - 30 |
| தவணை II | 31 - 56 |
| தவணை III | 57 - 81 |
| ஏனைய உதவிகள் | 82 |

# பாடத்திட்டம்

# அறிமுகம்

நடைமுறையிலுள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தில் கர்நாடக சங்கீதமும் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இடைநிலை வகுப்புக்களில் இப்பாடத்தைத் தெரிவு செய்து கற்கும் கணிசமான மாணவர்கள் உளர். இரசனையையும், ஆக்கத்திறனையும், ஆற்றுகையையும் வெளிக்கொணரக்கூடிய, கர்நாடக சங்கீத பாடத்தினூடாக நிறைவு செய்யப்படும் சமூகப்பணி குறிப்பிடத்தக்கதாகும். மாணவர் ஒருவரின் ஆளுமை வளரச்சிக்குக் கர்நாடக சங்கீத அறிவு இன்றியமையாததாகும். 2012ஆம் ஆண்டு பாடத்திட்ட மறுசீரமைப்பின் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது.

- நடைமுறையிலுள்ள தேர்ச்சியும் தேர்ச்சிமட்டமும்.
- கர்நாடக சங்கீதம் கற்பிக்கின்ற ஆசிரியர்களிடம் பெறப்பட்ட கருத்துக்கள்.
- பரீட்சையில் அவதானிக்கப்பட்ட விடயங்கள்.

நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்திலுள்ள சில பாடப் பகுதிகளைக் குறித்த பாடவேளைகளில் நிறைவு செய்ய முடியாத குறைபாடு கர்நாடக சங்கீதம் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், வளவாளர்கள், விரிவுரையாளர்கள் என்போராற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கமைவாக, சில பாடப்பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. இப்பாடத்துக்குரிய ஐந்து தேர்ச்சிகளிலும் இதுவரை இருந்த செயற்பாடுகளிற் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, செய்முறை விடயங்களில் உள்ள சில உருப்படிகளிற்குப் பதிலாகப் புதிதாகச் சில உருப்படிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களிற்கு ஸ்வரஞானத்தை ஏற்படுத்துவதற்காக ஸ்வரக் கோர்வைகளை ஆக்கிப்பாடும் பாடப்பகுதி ஆக்கத்திறன் விடயத்திற் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அறிமுறை தொடர்பான தேர்ச்சியுடன் இதுவரை காலமும் உள்ளடக்கப்பட்டிருந்த வாக்கேயகாரர் சரித்திரம் என்ற பகுதி கலாசாரப் பின்னணி என்ற தேர்ச்சிக்கே பொருத்தமாக அமைவதால் அத்தேர்ச்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தரம் 6 - 9 வரையான வகுப்புக்களில் கர்நாடக சங்கீதத்திற் கற்றுக்கொண்ட விடயங்களை மாணவர்கள் தரம் 10, 11 இலும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது அவசியமாகும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுடாகக் கர்நாடக சங்கீதம் பாடத்தினைக் கற்றுக்கொள்ள ஊக்கமளித்தல் விரும்பத்தக்கதாக எதிர்பார்க்கப்படும் பாட அடைவினை மாணவர் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடத்திட்டம் உதவும் என நம்புகிறோம்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.



2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## பாடக் குறிக்கோள்கள்

1. கர்நாடக சங்கீதத்துக்கான அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வர்.
2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வர்.
3. படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வர்.
4. கலைகளையும், கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவர்.
5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்ச்சிக்கும் திறனைப் பெறுவர்.
6. சிறந்த இசைக் கலைஞராக விளங்குவதற்கான சமநிலை ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வர்.

## கர்நாடக சங்கீதம் - தரம் 10

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 0 1 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார். | 1 . 1 சாஸ்திரிய இசை உருப்படிகளை இரசித்து விமர்சிப்பார் | • பதம்.<br>• வர்ணம்.<br>• சாஸ்திரிய இசை உருப்படிகளுள் பதம், வர்ணம் ஆகியவற்றை இனங்காணல்.<br>• அங்கவேறுபாடுகள்<br>• உருப்படிகளின் சிறப்பியல்புகள்<br>• உருப்படிகளின்<br>• இராகம்<br>தாளம்<br>இயற்றிய மகான்கள்<br>உதாரணங்கள். | • பதம், வர்ணம் ஆகிய உருப்படிகளின் சிறப்புக்களைக் கூறுவர்.<br>• இவற்றின் இராகம், தாளம் ஆகியவற்றைக் கூறுவார். | 0 2 |
| | 1 . 2 வாத்திய இசையை இரசித்து விமர்சிப்பார். | • புல்லாங்குழல்.<br>• வீணை.<br>• மிருதங்கம்.<br>• அமைப்பு<br>• ஒலி வேறுபாடு<br>• வாத்தியப் பிரிவு<br>• வாத்தியத்தின் தனித்துவமான அம்சங்கள்<br>• கச்சேரிகளில் இவ்வாத்தியத்தின் பங்கு<br>• பிரபல்யமான கலைஞர்கள். | • புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் அமைப்பை விளக்குவர்.<br>• இவ்வாத்தியங்களின் ஒலி வேறுபாடுகளைத் தனித்துவமான அம்சங்களைக் குறிப்பிடுவர்.<br>• இவ்வாத்தியத்தின் சிறப்புக்களையும், இவ்வாத்தியத்திற் பிரபல்யமான கலைஞர்களையும் குறிப்பிடுவார். | 0 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.3 கிராமிய இசையை இரசித்து விமர்சிப்பார். | • வில்லுப்பாட்டு<br>• கதையை நிகழ்த்தும் தன்மை.<br>• பயன்படும் இசைக்கருவிகள்.<br>• நிகழ்ச்சியின் தன்மை.<br>• வில்லுப்பாட்டு இசைக்கலைஞர்கள். | • வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் இடம்பெறும் கதையைச் சுவையுடன் கூறுவர்.<br>• நிகழ்ச்சியில் இரசித்தவற்றைக் குறிப்பிடுவார். | 02 |
| 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். | 2.1 வில்லுப்பாட்டு ஒன்றினைத் தாமே தயாரிப்பார். | • வில்லுப்பாட்டு<br>• கதை.<br>• கதைக்கேற்ற பாடல்கள்.<br>• வில்லுப்பாட்டுக்கேற்ற கருவிகள்.<br>• வில்லுப்பாட்டுத் தயாரித்தல். | • வில்லுப்பாட்டுக் கதை ஒன்றினைத் தயாரித்து கதைக்கேற்ற பாடல்களை ஆக்குவர்.<br>• இந் நிகழ்ச்சியினைத் தாமே செய்து காட்டுவார். | 03 |
| | 2.2 தத்தம் இயல்பிற்கு ஏற்ப சிறிய பாடல்களை ஆக்கி மெட்டமைத்துப் பாடுவார். | • சிறுவர் பாடல்களைத் திஸ்ர, சதுஸ்ர நடையில் ஆக்கம் செய்து விரும்பிய இராகத்தில் இசையமைத்துப் பாடுவர். | • விரும்பிய இராகத்தில் திஸ்ர சதுஸ்ர நடையில் சிறிய பாடல்களை ஆக்கம் செய்வர்.<br>• ஆக்கம் செய்த பாடல்களுக்குஇசையமைத்துப் பாடுவார். | 02 |
| | 2.3 ஸ்வர ஸஞ்சாரங்களைச் சிறிய தாளங்களில் ஆக்கம் செய்து பாடுவார். | • சங்கராபரண இராகத்தில் ஸ, ரி, க, ம ஸவரங்களைக் கொண்டு ஏகம், ஆதி, ரூபக தாளங்களில் குறில் நெடில் ஸ்வரங்களில் ஸஞ்சாரங்களை ஆக்கி இசைப்பார். | • சங்கராபரண இராகத்தில் ஸ,ரி,க,ம ஸ்வரங்களைக் கொண்டு ஏகம், ரூபகம், ஆதி தாளங்களில் குறில், நெடில் ஸ்வரங்களில் ஸ்வர சஞ்சாரங்களை ஆக்குவர்.<br>• ஆக்கம் செய்த சஞ்சாரங்களை உரிய இராகத்திற் குறிப்பிட்ட தாளங்களிற் பாடுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 3 . 0 இசை உருபபடிகளைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார். | 3.1 அப்பியாச கான உருப்படிகளை அப்பியாசம் செய்வார். | • அலங்காரம்.<br>• அடதாளம்.<br>• கீதம்<br>• சிவபெருமானே - மத்தியாமாவதி.<br>• வர்ணம்<br>• முருகா எனதாருயிரே- இராகம் : மத்தியமாவதி தாளம்-ஆதி | • அடதாள அலங்காரத்தை உரிய முறையிற் பாடுவர்.<br>• "சிவபெருமானே" என்னும் கீதத்தைச் சுருதி, தாளத்துடன் பாடுவர்.<br>• "முருகா எனதாருயிரே என்னும் ஆதிதாள வர்ணத்தைச் சுருதி தாளத்டன் பாடுவார். | 21 |
| | 3.2 சுருதி உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார். | • கீர்த்தனை<br>• இனி நமக்கொரு. இராகம், பிலஹரி தாளம் - ஆதி<br>• உள்ளம் இரங்கிவந்து, தாளம் ஆதி இராகம் - ஹம்சத்வனி. | • "இனி நமக்கொரு" என்னும் 1, "உள்ளமிரங்கி" என்ற ஹம்ஸத்வனி இராகக் கீர்த்தனை என்பவற்றைச் சுருதி தாளத்துடன் முறையாகப் பாடுவார். | 10 |
| | 3.3 தேவாரத்தினை பண்முறைக்கேற்ப பாடுவார.<br><br>3.4 திருவிசைப்பாவைப் பண்முறைக்கேற்ப பாடுவார்.<br><br>3.5 திருப்பல்லாண்டினைப் பண்முறைக்கேற்ப பாடுவார். | • தேவாரம்<br>- உற்றுமை சேர்வது பண்- பழம்பஞ்சரம் ஆதி தாளம்.<br><br>• திருவிசைப்பா (விரும்பியது) இராகம் - ஆனந்தபைரவி.<br><br>• திருப்பல்லாண்டு (விரும்பியது) இராகம் -ஆனந்தபைரவி | • தேவாரம், திருவிசைப்பா, திருப்பால்லாண்டு திருப்புராணம் ஆகிய உருப்படிகளைப் பண்முறைக்கேற்ப பாடுவார். | 0 2<br><br>0 2<br><br>0 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.6 திருப்புராணத்தைப் பண்முறைக்கேற்ப பாடுவார். | • திருப்புராணம் (விரும்பியது) இராகம் - மத்தியமாவதி. | | 0 2 |
| 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். | 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். | • அரும்பத விளக்கம் - அப்பியாசகானம், சபாகானம்.<br>• ஜன்னிய இராகப் பிரிவுகள் - உபாங்கம், பாஷாங்கம் - வர்ஜம் - வக்ரம் - நிஷாதாந்திய - தைவதாந்திய - பஞ்சமாந்திய இராகங்களின் விளக்கம்.<br>• ஷடங்கம்.<br>• முப்பத்தைந்து தாள விவரம் | • அப்பியாசகானம், சபாகானம் என்பவற்றின் வரைவிலக்கணத்தைக் கூறுவார்.<br>• ஜன்னிய இராகத்தின் பிரிவுகளை விளக்குவார்.<br>• தாளத்தில் வரும் ஷடங்கம் பற்றிக் கூறுவார்.<br>• முப்பத்தைந்து தாளங்கள் ஏற்பட்ட விதத்தினை விளக்குவார். | 02<br>0 4<br>0 3 |
| | 4.2 இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார். | • இராக இலட்சணம்<br>தோடி<br>கல்யாணி<br>ஹரகரப்பிரியா<br>மத்தியமாவதி | • இராகங்களின் இரட்சணங்களை விளக்குவார்.<br>தோடி - கல்யாணி -கரஹரப் பிரியா - மத்தியமாவதி இலட்சணங்களைக் கூறுவார். | 0 8 |
| | 4.3 இசைக்கருவிகளின் அமைப்பு பயன்பாடுகள் பற்றி விளக்குவார். | • இசைக்கருவிகள் வீணை, புல்லாங்குழல், நாதஸ்வரம். | • இவற்றின் பயன்பாடுகளை விளக்குவார். | 0 6 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 4.4 உருப்படிகளின் இலட்சணங்களை விளக்குவார். | • இசை உருப்படிகள்<br>- வர்ணம் (தானவர்ணம், பதவர்ணம்).<br>- பதம். | • வர்ணம், பதம், ஆகியவற்றின்இலட்சணங்களை விவரிப்பார். | 02<br>02 |
| | 4.5 பண்ணிசையின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார். | • பண்ணிசை<br>- பண்களும் இராகங்களும்<br>- பண்களின் வகைகள் (பகல்பண், இராப்பண், பொதுப் பண்) | • பண்ணிசையின் இலட்சணத்தைக் விளக்கி பண்களின் வகைக்குரிய இராகங்களையும் கூறுவார். | 02 |
| 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக, கலாசார, பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார் | 5.1 இந்தியாவில் கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி, தொடர்பான விடயங்களை ஆராய்வார்.<br><br>5.2 வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றி-னையும் இசைத் தொண்டுகளையும் விளக்குவார். | • இந்தியாவில் 7ஆம் 8ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றிய விளக்கம்<br><br>• இந்தியாவில் 14ஆம் 15ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றிய விளக்கம்<br>• வாக்கேயகாரர்.<br>• முத்துத் தாண்டவர்.<br>• கோபால கிருஷ்ணபாரதியார்.<br>- வாழ்க்கைக்காலம் , பெற்றோர் பெயர்.<br>- வாழ்க்கை வரலாறு, சிறப்புப் பெயர்'. இசைப்பணி (முத்திரை, இயற்றிய உருப்படிகள், நூல்கள், பட்டங்கள்). | • இந்தியாவில் 7ஆம் 8ஆம் மற்றும் 14ஆம் 15ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி விளக்குவார்.<br><br>• முத்துத்தாண்டவர், கோபால கிருஷ்ண பாரதியார் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுவர்.<br>• இவர்களின் இசைப்பணியை மதிப்பிடுவர்.<br>• இவர்களின் முத்திரைகளை குறிப்பிடுவார். | 08 |

# கற்றல் கற்பித்தல் முறைகள்

# 1ம் தவணை

**தேர்ச்சி** : 1.0 இசை நிகழ்ச்சிகளை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.1 சாஸ்திரிய இசை உருப்படிகளைக் கேட்டு இரசனையை வெளிப் படுத்துவார்.

**செயற்பாடு** : 1.1.1 பதம், வர்ணம் ஆகிய உருப்படிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு இரசனையை வெளிப்படுத்துவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- பதம், வர்ணம் ஆகிய உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள்
- ஒலிப்பதிவுக் கருவி
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- வர்ணம், அப்பியாசகானம், சபாகானம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான உருப்படி என்றும் குறிப்பிடுவார்.
- பதம் நாட்டிய நிகழ்ச்சிகளில் இடம்பெறும் உருப்படி என்றும் சபாகானத்தைச் சேர்ந்த உருப்படி என்றும் குறிப்பிடுவார்.
- பதம் நாயகன் நாயகி பாவம் கொண்ட உருப்படி என்பதை உணர்ந்து கொள்வார்.
- பதம், வர்ணம் போன்ற உருப்படிகளை இனங்கண்டு கூறுவார்.
- பதம், வர்ணம் ஆகிய உருப்படிகளின் அமைப்பைக் கூறுவார்.
- பதத்தில் சிருங்கார ரசமும் வெளிப்படுகிறது எனக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 1.1.1.1 :**

- மாணவரிடம் கற்றறிந்த உருப்படிகளைக கேட்டறிந்து கலந்துரை யாடுதல்.
- பதம், வர்ணம் ஆகிய பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா மூலம் செவிமடுக்கச் செய்து அப்பாடல்களை இனங்கண்டு கூற வழிப்படுத்துதல்.

**படி 1.1.1.2 :**

- பதம், வர்ணம் ஆகிய உருப்படிகளைப் பற்றிப் பின்வரும் விடயங் களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துதல்.
- பதம் நாயக, நாயகி பாவத்தை உள்ளடக்கிச் சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும்.
- தமிழ்ப் பதங்கள் பெரும்பாலும் முருகக் கடவுள் மீதும், தெலுங்குப் பதங்கள் கிருஷ்ணபகவான் மீதும் பாடப்படுபவையாகும்.
- பதம் நாட்டியத்திற்குரிய உருப்படி.
- செவிமடுத்த பதத்தின் இராகம், தாளம், அங்கங்கள்.
- வர்ணம், அப்பியாசகானம், சபாகானம் இரண்டிற்கும் பொதுவான உருப்படி.
- செவிமடுத்த வர்ணத்தின் இராகம், அங்கங்கள், தாளம் இயற்றியவர் பெயர்.

- மாணவர்களை குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரம் வழங்குதல்
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைத் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்க.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

**படி 1.1.1.3 :**

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு சமர்ப்பிக்கும் போது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்குக.
- குழுகக்ளின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை கலந்துரையாடி மீளவும் வலியுறுத்துக.
- பதம் நாட்டியத்திற்கேற்ற சிறப்பான உருப்படி
- பதத்தின் அங்கங்கள்
- இசைக் கச்சேரிகளிலும் பதம் பாடப்படுகின்றது. சபாகான உருப்படி
- ரஸத்தின் வெளிப்பாடு
- வர்ணத்தின் அங்கங்கள்
- வர்ணம் அப்பியாசகானம் சபாகானம்  இரண்டிற்கும் பொதுவான உருப்படி.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

1. பதம், வர்ணம் ஆகிய உருப்படிகளின் அங்கங்களைக் கூறுவார்.
2. பதம் சிருங்கார ரஸத்தையும் பக்தி உணர்வுகளையும் வெளிப்படுத்தும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
3. பதம் நாட்டிய நிகழ்ச்சியில் இடம்பெறுவதோடு இசைக்கச்சேரியிலும் பாடப்படும் உருப்படி என்பதை அறிந்து கூறுவார்.
4. வர்ணம் அப்பியாசகானம், சபாகானம் இரண்டிற்கும் பொதுவான உருப்படி என்றும் அதன் அங்கங்கள் பற்றியும் கூறுவார்.

## செயற்பத்திரம்:

- பதத்தின் தனித்துவமான அம்சங்களில் இரசித்தவற்றை இனங்கண்டு பட்டியற் படுத்துக.
- வர்ணத்தின் தனித்துவமான அம்சங்களில் இரசித்தவற்றை இனங்கண்டு பட்டியற் படுத்துக.

**தேர்ச்சி** : 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 2.1 வில்லுப்பாட்டு ஒன்றினை தாமே தயாரிப்பார்.

**செயற்பாடு** : 2.1.1 வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றினைத் தயாரிப்போம்.

**பாடவேளைகள் :** 03

**தர உள்ளீடுகள் :**

- வில்லு
- நாண்
- இருகோல்கள்
- உடுக்கை
- தாளம்
- ஒலிப்பதிவு கருவி
- சலங்கை
- விற்கடம்
- மிருதங்கம்
- டோலக்
- ஹார்மோனியம்
- ஒளிக்கருவி
- வில்லுப்பாட்டு நிகழ்ச்சி பதியப்பட்ட ஒலி/ஒளி நாடாக்கள்

**கற்றற்பேறுகள்**

- மாணவர்கள் தாமாகவே வில்லுப்பாட்டுத் தயாரித்து அளிப்பதோடு சமூகத்தில் நடக்கின்ற நிகழ்ச்சிகளிலும் வில்லுப்பாட்டினை நடத்தும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 2.1.1.1 :**

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றினை ஒலி/ ஒளி கருவியில் ஒலி/ ஒளிக்கச் செய்து காட்சிப்படுத்தல்.
- கண்டு இரசித்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை கலந்துரையாடுக.
- வில்லுப்பாட்டுக்கு ஏற்ற வகையில் வில்லை அமைத்துச் சலங்கையை நாண் கயிற்றால் இணைத்து வில்லின் இடதுபுறமாக விற்கடத்தை இணைத்து நாண் கயிற்றில் இருகோல்களால் கட்டி வில்லிசை நிகழ்ச்சி நிகழ்த்திடத் தயார்ப்படுத்தல்.

**படி 2.1.1.2 :**

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குரிய கதையை/அல்லது கருப் பொருளினைத் தெரிவு செய்தல்.
- தெரிவு செய்த கதை/ கருப்பொருளினை வில்லுப்பாட்டுக்கு ஏற்றவாறு பிரதி ஆக்கம் செய்தல்.
- வில்லுப்பாட்டு நிகழ்வின் கதை, கருத்திற்கு ஏற்றவாறு, பிரதி ஆக்கம் செய்த உரைக்கு இடையே, பொருத்தமான பாடல்களை ஆக்கம் செய்தல்.
- வில்லுப்பாட்டு நிகழ்வின் பிரதான உரையை வில்லிசை நடத்துபவர் கூற, வில்லுப்பாட்டில் பங்கு பற்றுகின்ற ஏனையோரும், உரையாடலின் இடையே, வில்லுப்பாட்டின் கதை அல்லது கருத்துக்குப் பொருத்தமாக, தத்தமது விடயங்களில் பங்குகொள்ள வழிப்படுத்துதல்.
- இடையிடையே ஒத்திசைவுடன் பாடல்களையும் பாடிக்கொள்ள வழிப்படுத்துதல்.

**படி 2.1.1.3 :**

- பாடல்களுக்குப் பக்க வாத்தியமாகக் குறிப்பிட்ட இசைக் கருவி களைப் பங்குபற்றும் ஏனையோர் இசைத்திட வழிசெய்தல்.
- இடையிடையே கதைக்குப் பொருத்தமான நகைச்சுவை கலந்த உரையாடலைச் சேர்த்துக் கொள்ளப் பணித்தல்.
- மீள வலியுறுத்தல், பின்னூட்டல் செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. மாணவர் வில்லுப்பாட்டிற்குரிய கதை / கருப்பொருளைத் தெரிவு செய்வார்.
2. அதனை ஏற்ற விதத்தில் பிரதியாக்கம் செய்வார்.
3. வில்லுப்பாட்டு நிகழ்வின் உரைக்கிடையே பாடல்களை ஆக்கிடுவார்.
4. பாடல்களுக்குப் பொருத்தமான இசையை அமைத்திடுவார்.
5. வில்லிசையின் பிரதான உரையை வில்லிசை நடத்துபவர் கூறிட ஏனையோரும் உரையாடலின் இடையே பங்கு கொள்வார்.
6. பக்க வாத்தியங்களைத் தகுந்த வகையில் இசைப்பார்.
7. கதையின் இடையே பொருத்தமான நகைச்சுவை உரையாடல்களைச் சேர்த்துக் கொள்வார்.
8. மாணவர் முழுமையான வில்லுப்பாட்டினைத் தயாரிப்பார்.
9. அதனை நிகழ்ச்சிகளில் ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.1 அப்பியாசகான உருப்படிகளைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.1.1 கண்டஜாதி அடதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளைகள் :** 04

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- அலங்காரம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- கண்டஜாதி அடதாளத்தின் அங்கங்களையும் அட்சரங்களையும் கூறுவார்.
- கண்டஜாதி அடதாள அலங்காரம் 10 ஆவர்த்தனங்களைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுவார்.
- கண்டஜாதி அடதாளத்தைப் போட்டுக் காட்டுவார்.
- கண்டஜாதி அடதாள அலங்காரத்தை மூன்று காலங்களிலும் பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.1.1.1 :**

- மாணவர் முன்பு கற்ற அலங்காரங்களை நினைவுபடுத்தல்.
- கண்டஜாதி அடதாள அலங்காரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடிப் பயிற்சியை ஆரம்பித்தல்.
- கண்டஜாதி அடதாள அலங்காரம் மாமாளவகௌளை இராகத்தில் அமைந்துள்ளது.
- கண்டஜாதி அடதாள அலங்காரத்தின் அங்கஅடையாளம் $1_5 1_5$ 0 0. மொத்த அட்சரம் 14
- கண்டஜாதி அடதாள அலங்காரம் 10 ஆவர்த்தனங்களைக் கொண்டது.
- கண்டஜாதி அடதாளத்தைப் போட்டுக்காட்டி மாணவர் தாளத்தைப் போட வழிப்படுத்தல்.
- சுருதிப்பெட்டியைப் பயன்படுத்தி அலங்காரத்தை மூன்று காலத்திலும் பாடிக்காட்டுதல் அல்லது ஹார்மோனியத்தில் வாசித்துக் காட்டுதல்.
- அலங்காரத்தை ஒவ்வொரு ஆவர்த்தனமாகப் பாடத் தொடர்ந்து மாணவரைப் பாடச் செய்தல்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து சுருதி, இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுதல்.

**படி 3.1.1.2 :**
- மாணவர் தொகைக்கேற்பத் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத் தினை வழங்கிச் செயற்பட அறிவுறுத்தல் வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படும் விதத்தினை அவதானித்து வழுக்களை நிவர்த்தி செய்தல்.

**படி 3.1.1.3 :**
- போதிய பயிற்சியில் ஈடுபட்ட பின்னர் ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய குழுக்கள் தத்தமது கருத்தினைக் கூறச் சந்தர்ப்பம் அளித்தல்.
- சுருதி, தாளம், ஸ்வரஸ்தானம் வழுவிப் பாடிய மாணவர்களுக்கு மீண்டும் பயிற்சியினை வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. கண்டஜாதி அடதாள அலங்காரம் மாயாமாளவகௌளை இராகத்தில் அமைந்துள்ளது எனக் கூறுவார்.
2. கண்டஜாதி அடதாளத்தைப் போட்டுக் காட்டுவார்.
3. கண்டஜாதி அடதாள அலங்காரம் 10 ஆவர்த்தனங்களைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுவார்.
4. கண்டஜாதி அடதாள அலங்காரத்தை சுருதி, இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார்.

**செயற்பத்திரம் :**

சகல குழுக்களுக்கும் செயற்பத்திரத்தை வழங்குக

- கண்டஜாதி அடதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

## அலங்காரம்

இராகம் : மாயாமாளவகௌளை

தாளம்: அடதாளத்தின் அங்கங்கள் : $1_5$ $1_5$ 0 0

இதன் மொத்த அட்சரங்கள் 14

ஆ: ஸரிகமபதநிஸ்
அ: ஸ்நிதபமகரிஸ } 15 வது மேள இராகம்

| $1_5$ | $1_5$ | 0 | 0 |
|---|---|---|---|
| ஸரீகா \| | ஸாரிகா \| | மா \| | மா \|\| |
| ரிகாமா \| | ரீகமா \| | பா \| | பா \|\| |
| கமாபா \| | காமபா \| | தா \| | தா \|\| |
| மபாதா \| | மாபதா \| | நீ \| | நீ \|\| |
| பதாநீ \| | பாதநீ \| | ஸ்ா \| | ஸ்ா \|\| |
| ஸ்நீதா \| | ஸ்ாநிதா \| | பா \| | பா \|\| |
| நிதாபா \| | நீதபா \| | மா \| | மா \|\| |
| தபாமா \| | தாபமா \| | கா \| | கா \|\| |
| பமாகா \| | பாமகா \| | ரீ \| | ரீ \|\| |
| மகாரீ \| | மாகரீ \| | ஸா \| | ஸா \|\| |

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.1 அப்பியாசகான உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.1.2 "சிவபெருமானே" என்ற சஞ்சாரி கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளைகள் :** 04

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா
- கீதம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்**

- சஞ்சாரி கீதமானது அலங்காரங்களுக்குப் பின் கற்பிக்கப்படும் அப்பியாசகான உருப்படி எனக் குறிப்பிடுவார்.
- அப்பியாசகான உருப்படி வகைகளுள் சாகித்திய ரூபமாகக் கற்பிக்கப்படும் முதல் உருப்படி கீதம் எனக் கூறுவார்.
- "சிவபெருமானே" என்னும் கீதம் மத்தியமாவதி இராகத்தில் ஆதிதாளத்தில் இயற்றப்பட்டுள்ளதைக் குறிப்பிடுவார்.
- இக்கீதம் பக்தி உணர்வை வெளிப்படுத்துகிறது என்பதை விளக்குவார்.
- மத்தியமாவதி இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடுவார்.
- "சிவபெருமானே" என்ற கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங் களிலும் பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.1.2.1 :**

- மாணவர் ஏற்கெனவே கற்றுக் கொண்ட கீதம் பற்றிய விடயங்களைக் கேட்டறிதல்.
- "சிவபெருமானே" என்னும் கீதம் எழுதப்பட்ட பாடல் அட்டையைக் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரை யாடிப் பயிற்சியினை ஆரம்பித்தல்.
- அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரத்திற்குப் பின் பாடப்படும் உருப்படி கீதமாகும்.
- சாகித்திய ரூபமாகப் பாடப்படும் முதல் உருப்படி கீதம்.
- "சிவபெருமானே" என்ற கீதம் மத்தியமாவதி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
- மத்தியமாவதி இராகத்தின் ஆரோகணம் : ஸரிமபநிஸ்
  அவரோகணம் : ஸ்நிபமரிஸ
- எனக் கூறிப் பாடிக்காட்டி மாணவரைப் பாடச் செய்தல்.
- "சிவபெருமானே" என்னும் கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடிக்காட்டுதல்.

- கீதத்தைப் பகுதி, பகுதியாக ஸ்வரமாகவும், சாகித்தியமாகவும் இராகத்துடன் கற்பித்தல்.
- மாணவருடன் சேர்ந்து இராகத்துடன் கீதத்தைப் பலதடவைகள் பாடுதல்.
- கீதத்தைப் பகுதி, பகுதியாக கற்பித்தல்.
- மாணவருடன் சேர்ந்து பலதடவைகள் கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுதல்.

**படி 3.1.2.2 :**

- மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்கிச் செயற்படுவதற்கான அறிவுறுத்தலை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படும் விதத்தினை அவதானித்து வழுக்களை நிவர்த்தி செய்தல்.

**படி 3.1.2.3 :**

- போதிய பயிற்சியில் ஈடுபட்ட பின்னர் ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய குழுக்கள் தத்தமது கருத்தினைக் கூறச் சந்தர்ப்பம் அளித்தல்.
- சுருதி, தாளம், ஸ்வரஸ்தானம் வழுவிப் பாடிய மாணவர்க்கு மீண்டும் பயிற்சியினை வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. "சிவபெருமானே" என்னும் கீதம் அப்பியாசகான உருப்படிகளில் ஒன்று எனக் கூறுவார்.
2. "சிவபெருமானே" என்னும் கீதம் மத்தியமாவதி இராகத்தில் ஆதி தாளத்தில் இயற்றப் பட்டுள்ளது எனக் குறிப்பிடுவார்.
3. மத்திய மாவதி இராகம் ஆரோஹணம் அவரோஹணம் ஸரிமபநிஸ், ஸ்நிபமரிஸ எனக் கூறிப் பாடிக் காட்டுவார்.
4. "சிவபெருமானே" என்னும் கீதத்தை சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடுவார்.

**செயற்பத்திரம் :**

- "சிவபெருமானே" என்னும் கீதத்தை சுருதி, இராக, தாளத்துடன் பயிற்சி செய்க.
- "சிவபெருமானே" என்னும் கீதத்தை சுருதி, இராக, தாளத்துடன் பாடுக.

**இணைப்பு :**

# சஞ்சாரி கீதம் - சிவபெருமானே

இராகம் - மத்தியமாவதி     தாளம் : ஆதி

ஆரோகணம் : ஸரிமபநிஸ்
அவரோகணம்: ஸ்நிபமரிஸ
} 22 வது மேளகர்த்தாவின் ஜன்யம்

| $1_4$ | 0 | 0 | $1_4$ | 0 | 0 |
|---|---|---|---|---|---|
| ரிஸரிம | பா | பா | மபநிம | பா | பா |
| சிவபெரு | மா | னே | செழுஞ்சுட | ரோ | னே |
| பமமப | பநி | நீ | பநிபப | மம | ரிஸ |
| தீ.வினை | யா | வும் | தீர்த்தருள் | வோ | னே |
| ரி ரி ப ம | பா | பா | ம ப நி ப | மப | நீ |
| உமை ம ண | வா | ளா | உ வந்தெ னை | யா. | ளாய் |
| ரிரிமம | பப | நிநி | பநிஸ்நி | ஸ்ா | ஸ்ா |
| அமரர் | பணி | யும் | அம்புயத் | தா. | ளா |
| ரீ ரீ | ஸ்நி | ஸ்ா | நிபநிஸ் | நிப | மம |
| மூ வா | முத | லே | முதுகண் | ணுத | லே |
| பரிபம | நிப | நீ | பநிஸ்நி | பரி | ரீ |
| பா.வார் | பொரு | ளே | பண்ணின் | பய | னே |
| ஸ்ஸ்ரிநி | நிநி | ஸ்ப | பநிஸ்நி | ஸ் ரி | மரி |
| அருவாய் | உரு | வாய் | அமர்வா | . . | யே |
| ப்ம்ரிஸ் | நிப | ரீ | ஸ்நிபம | ரி ம | ரிஸ |
| வருவாய் | அரு | ளே | தருவா | . . | யே |

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவர்.

**தேர்ச்சி மட்டம்** : 3.3 தேவாரத்தினைப் பண்முறைக்கு ஏற்பப் பாடுவார்.

**செயற்பாடு** : 3.3.1 "உற்றுமை சேர்வது" என்ற தேவாரத்தினைப் பண்முறைக்கேற்ப பாடுவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- கைத்தாளம்
- தேவாரம் எழுதப்பட்ட அட்டை

**கற்றற்பேறுகள்**

- தேவாரம் அமைந்துள்ள பண் பழம்பஞ்சுரம் என்பதைக் கூறுவார்.
- தேவாரம் பாடப்பட்ட தலம் திருப்பிரமபுரம் என்றும் அருளியவர் திருஞான சம்பந்தர் எனவும் கூறுவார்.
- தேவாரத்தைச் சமய நிகழ்வுகளில் பண்முறைக்கேற்ப பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.3.1.1 :**

- மாணவர்கள் கற்றுக்கொண்ட தேவாரங்களை நினைவுபடுத்திக் கலந்துரையாடுதல்.
- எடுத்துக் கொண்ட தேவாரத்தை பண்முறைக்கேற்ப பாடிக் காட்டுதல்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- தேவாரத்தின்

| | | |
|---|---|---|
| பண் | - | பழம்பஞ்சுரம் |
| இராகம் | - | சங்கராபரணம் |
| தாளம் | - | ஆதி |
| தலம் | - | திருப்பிரமபுரம் |

  என்பவற்றை மாணவர் அறியச் செய்தல்.
- உற்றுமை சேர்வது என்ற தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் சொல்வதற்கு வழிப்படுத்தல்.
- தேவாரத்தினைக் காட்சிப்படுத்தி அதனைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளித்தல்.
- மாணவருடன் சேர்ந்து பண்முறைக்கேற்பத் தாளத்துடன் தேவாரத் தினை முழுமையாகப் பாடுதல்.

**படி 3.3.1.2 :**

- மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பச் சிறு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் சரியாகப் பயிற்சி பெறுகிறார்களா என்பதை உறுதி செய்தல்.

**படி 3.3.1.3 :**

- குழுக்களின் கருத்துப் பரிமாற்றத்திற்கு இடமளித்தல்.
- மாணவர்களின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துதல்.
- மீளவலியுறுத்தும் வகையில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

1. உற்றுமை சேர்வது என்னும் தேவாரத்தின் பண்ணைக் கூறுவார்.
2. அதன் இராகம், தாளம், தலம், அருளியவர் ஆகியவற்றைக் குறிப்பிடுவார்.
3. பண்முறைக்கேற்ப தேவாரத்தினைப் பாடுவார்.

## செயற்பத்திரம் :

சகல குழுக்களுக்கும் வழங்குக.

- உற்றுமை சேர்வது எனும் தேவாரத்தை பண், இராகம், தாளம், தலம் என்பவற்றைக் குறிப்பிட்டுப் பண்முறைக்கேற்ப தாளத்துடன் பாடுக.

## தேவாரம்

பண் : பழம்பஞ்சுரம்
தாளம் : ஆதி
இராகம் : சங்கராபரணம்
அருளியவர் : திருஞானசம்பந்தர்
தலம்: திருப்பிரமபுரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல் விழி காய்வது காமனையே
அற்றமறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரமபுரத்தை உகந்தனையே

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவர்.

**தேர்ச்சி மட்டம்** : 3.4. திருவிசைப்பாவை பண்முறைக்கேற்ப பாடுவார்.

**செயற்பாடு** : 3.4.1 விரும்பிய திருவிசைப்பாவை ஆனந்தபைரவி இராகத்தில் பாடிப் பழகுவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- திருவிசைப்பா எழுதிய அட்டை
- செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- பஞ்சபுராணத்தில் திருவாசகத்திற்குப் பின் பாடப்படுவது திருவிசைப்பா என்பதைக் கூறுவார்.
- பக்தி உணர்வைப் பெறுவார்.
- ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.4.1.1 :**

- பஞ்சபுராணங்கள் பாடும் முறையினைக் கலந்துரையாடித் திருவிசைப்பா எனும் பதிகம் திருவாசகத்திற்குப் பின் சுத்தாங்கமாகப் பாடப்படும் என்பதைக் கூறிப் பாடிக் காட்டுதல்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

**படி 3.4.1.2 :**

- திருவிசைப்பாவை அருளியவர், இராகம், திருமுறை என்பவற்றை குறிப்பிடுதல்.
- திருவிசைப்பாவைப் பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் சொல்வதற்கு வழிப்படுத்தல்.
- ஆனந்தபைரவி இராகத்தில் உச்சரிப்புத் தெளிவுடன் பாட வழிப்படுத்தல்.
- திருவிசைப்பா எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்திப் பகுதி பகுதியாக மாணவருடன் சேர்ந்து பாடுதல்.
- ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாக பாடுதல்.

**படி 3.4.1.3 :**

- மாணவரை மீளவலியுறுத்தும் வகையில் திருவிசைப்பாவினைச் சுத்தாங்கமாக ஆனந்தபைரவி இராகத்தில் பாடி முழுமைப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. திருவிசைப்பாவை அருளியவர் பெயரைக் கூறுவார்.
2. திருவிசைப்பா பாடப்படும் இராகத்தினைக் கூறுவார்.
3. ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடுவார்.

**செயற்பத்திரம் :**

- திருவிசைப்பாவினை இராகத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- திருவிசைப்பாவினை இராகத்துடன் பாடுக.

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** : 4.1.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் அப்பியாசகானம், சபாகானம் பற்றி விளக்குவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**
- அப்பியாசகான, சபாகான உருப்படிகள் அடங்கிய அட்டவணைகள்

### கற்றற் பேறுகள்

- அப்பியாசகானம், சபாகானம் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அப்பியாசகான உருப்படிகளைக் குறிப்பிடுவார்.
- சபாகான உருப்படிகளைக் குறிப்பிடுவார்.
- அப்பியாசகானத்திற்கும், சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி வர்ணம் என்பதைக் கூறுவார்.

### கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:

**படி 4.1.1.1 :**
- மாணவர் ஏற்கெனவே கற்றுக்கொண்ட அப்பியாசகான, சபாகான உருப்படிகள் பற்றிக் கலந்துரையாடி முன்னறிவை மீட்டல்.

**படி 4.1.1.2 :**
- அப்பியாசகான, சபாகான உருப்படிகள் தொடர்பான பின்வரும் அம்சங்களைக் கலந்துரையாடுதல்.
- சங்கீதம் பயிலும் மாணவன் ஆரம்பப் பயிற்சிக்காகக் கற்கின்ற உருப்படிகள் "அப்பியாசகானம்" எனப்படும்.
  - ஸ்வர வரிசைகள்
  - ஜண்டை வரிசைகள்
  - மேல்ஸ்தாயி வரிசைகள்
  - தாட்டு வரிசைகள்
  - சப்ததாள அலங்காரங்கள்
  - சஞ்சாரிகீதம்,இலட்சணகீதம்
  - ஜதீஸ்வரம், ஸ்வரஜதி
  - வர்ணம்

  என்பன அப்பியாசகான உருப்படிகள் ஆகும் (அப்பியாசகான உருப்படிகள் எழுதப்பட்ட அட்டவணையைக் காட்சிப்படுத்தல்)
- சபாக்களில் (இசைக்கச்சேரிகளில் பாடப்படுகின்ற உருப்படிகள் "சபாகானம்" எனப்படும்.
  - வர்ணம்
  - கீர்த்தனை
  - சௌக்ககாலக் கிருதி
  - பதம், தில்லானா, ஜாவளி
  - இராகமாலிகை

  என்பன சபாகான உருப்படிகள் ஆகும்.

(சபாகான உருப்படிகள் எழுதப்பட்ட அட்டவணைகளைக் காட்சிப் படுத்தல்)

- "வர்ணம்" என்ற உருப்படியானது அப்பியாசகானம், சபாகானம் ஆகிய இரண்டிற்கும் பொதுவானதாகும்.

**படி 4.1.1.3 :**

- அப்பியாசகானம், சபாகானம் அடங்கிய அட்டவணையை மீளவும் வலியுறுத்தலும் பின்னூட்டல் செய்தலும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. அப்பியாசகானம் என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
2. அப்பியாசகான உருப்படிகள் மூன்றினைக் குறிப்பிடுவார்.
3. சபாகானம் என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுவார்.
4. சபாகான உருப்படிகள் மூன்றினைக் குறிப்பிடுவார்.
5. அப்பியாசகானம், சபாகானம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான உருப்படியினைக் கூறுவார்.

**தேர்ச்சி** : 4.0 இசைபற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** : 4.1.2 உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம், நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய இராகங்கள் பற்றி அறிவோம்.

**பாடவேளைகள் :** 04

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம்
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா (ஜன்னிய இராகப் பிரிவுகளின் ஆரோகண அவரோகணம்)
- ஜன்னிய இராகப் பிரிவுகளின் அட்டவணை.

**கற்றற் பேறுகள்**

- ஜன்னிய இராகப் பிரிவுகளைக் கூறுவார்.
- ஜன்னிய இராகங்களை வகைப்படுத்துவார்.
- இராகங்களின் ஆரோகண, அவரோகண மூலம் ஜன்னிய இராகங்களை இனம்காண்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.1.2.1 :**

- மாணவர்கள் ஏற்கெனவே, கற்ற ஜன்னிய இராகங்களைப் பற்றி கலந்துரையாடுதல்.
- ஜன்னிய இராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களைப் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் போட்டுக் காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.
- செவிமடுத்த விடயங்கள் தொடர்பாகப் பின்வரும் விளக்கங்களைக் கலந்துரையாடுதல்.

**படி 4.1.2.2 :**

- தாய் இராகங்களில் இருந்து பிறந்த இராகம் ஜன்னிய இராகம்.
- தாய் இராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே ஜன்னிய இராகங்கள் அமைந்திருக்கும்.
- ஜன்னிய இராகத்தில் உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம், நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய எனும் ஏழு பிரிவு.
- உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம், நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்தியம் என்னும் ஏழு பிரிவுகள் உள்ளன. இராகங்களை உதாரணங்களுடன் விளக்குதல்.
- செயற்பத்திரத்தை வழங்குதல்.

**படி 4.1.2.3 :**

- குழுக்களின் பேறுகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குதல்.
- உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம், நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய இராகங்களை மீளவும் வலியுறுத்தி இவற்றிற்கு உதாரங்களையும் கூறுதல்
- வர்ஜ இராகம், வக்ர இராகம் பற்றி உதாரணங்களுடன் விளக்குதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

1. ஜன்னிய இராகத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
2. ஜன்னிய இராகப் பிரிவுகளைக் கூறுவார்.
3. ஜன்னிய இராகப் பிரிவுகளை, உதாரணங்களுடன் விளக்குவார்.

## இணைப்பு :

- தாய் இராகங்களில் இருந்து பிறந்த ராகம் ஜன்ய ராகமாகும். தாய் இராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே ஜன்ய இராகங்கள் அமைந்திருக்கும்.
- ஜன்ய இராகத்தில், உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம், நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்தியம் எனும் ஏழு பிரிவுகள் உண்டு.
- தாய் இராகத்தில் வரும் ஸ்வரங்களை மட்டும் எடுத்துக் கொள்ளும் இராகம் உபாங்க இராகமாகும்.
  உதாரணம்: மோகனம், மத்தியமாவதி, ஹம்சத்வனி
- தாய் இராகத்தில் வரும் ஸ்வரங்களையும் எடுத்து அழகிற்காக வேறு தாய் இராகத்தில் வரும் ஸ்வரங்களையும் எடுக்கும் இராகம் பாஷாங்கராகம்.
  உதாரணம்: பிலகரி, பைரவி
- பாஷாங்க இராகத்தில், அழகிற்காக எடுத்துக் கொள்ளும் ஸ்வரம், அன்னிய ஸ்வரம் எனப்படும்.
- அன்னிய ஸ்வரங்கள் ஆரோஹண அவரோஹணத்திலோ அல்லது பிரயோகங்களிலோ வரும்.
- அன்னிய ஸ்வரக் குறியீடு *
- ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வரும் இராகம் வர்ஜ இராகம் அதாவது ஆரோகணத்திலோ அவரோகணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வருதல்.
  உதாரணம்: மோகனம்
- ஸ்வரங்கள் ஆரோகண, அவரோகணத்தில் வரிசைக் கிரமமின்றித் திரிந்து திரிந்து வரும் இராகம் வக்ர இராகம்.
  உதாரணம்: கமாஸ்
- உபாங்க, பாஷாங்க வர்ஜ இராகங்களுக்கான உதாரணங்கள் ஆரோகண, அவரோகணங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உபாங்கம் | - | மோஹனம் | - | ஸரிகபதஸ் |
| | | | | ஸ்தபகரிஸ |
| பாஷாங்கம் | - | பிலஹரி | - | ஸரிகபதஸ் |
| | | | | ஸ்நிதபமகரிஸ |
| வர்ஜம் | - | மோகனம் | - | ஸரிகபதஸ் |
| | | | | ஸ்தபகரிஸ |
| வக்ரம் | - | கமாஸ் | - | ஸமகமபதநிஸ் |
| | | | | ஸ்நிதபமகரிஸ |

- மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் நிஷாதாந்திய இராகம் ஆகும்.
  உதாரணம் : நாதநாமக்கிரியை ஆ: ஸரிகமபதநி
  அ: நிதபமகரிஸநி
- மத்தியஸ்தாயி தைவதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் தைவதாந்திய இராகம் ஆகும்.
  உதாரணம் : குறிஞ்சி ஆ: ஸநிஸரிகமபத
  அ: தபமகரிஸநிஸ
- மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் பஞ்சமாந்திய இராகம் எனப்படும்.
  உதாரணம் : நவரோஜ் ஆ: பதநிஸரிகமப
  அ: மகரிஸநிதப

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.2 இராகங்களின் இலட்சணங்களை விளக்குவர்.

**செயற்பாடு** : 4.2.1 தோடி இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- தோடி இராகத்தின் ஆரோகண அவரோகண வரைபடம்
- ஸ்வரஸ்தான வரைபடம்
- சுருதிப்பெட்டி
- இராகலட்சணம் எழுதப்பட்ட பிரதி
- செயற்பத்திரம்
- இணைப்பு

**கற்றற்பேறுகள்**

- தோடி இராகத்தின் மேள எண், ஆரோகண அவரோகணம், ஸ்வரஸ்தானம் என்பவற்றைக் கூறுவார்.
- தோடி இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் எல்லாம் கோமள ஸ்வரங்கள் என்பதனைக் கூறுவார்.
- தோடி இராகத்தில் அமைந்த உருப்படிகளை இனம் காண்பார்.
- தோடி இராகத்தின் இலட்சணம் எழுதும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.2.1.1 :**

- மாணவர்களிடம் ஏற்கனவே கற்ற ஜனக இராகங்கள் பற்றி கலந்துரையாடுதல்.
- ஜனக இராகத்தின் ஆரோகணம், அவரோகணங்களை கலந்துரை யாடுதல்.
- தோடி இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.

**படி 4.2.1.2 :**

- செவிமடுத்த விடயங்களில் காட்சிப்படுத்தப்பட்ட அட்டவணையுடன் இராகத்தின் ஸ்வரஸ்தானங்களையும் அவதானிக்கச் செய்தல்.
- இனம் கண்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களை அறிவுறுத்துதல்.
- நேத்ர சக்கரத்தில் 2வது இராகம் (நேத்ர- ஸ்ரீ)
- கடபயாதி ஸங்க்யைக்காக ஹனுமத்தோடி என்று அழைக்கப் பட்டது. மேள எண் - 8
- அனேக ஜன்னிய இராகங்களையுடைய மேள இராகங்களில் இதுவும் ஒன்று.
    - ஆரோகணம் - ஸரிகமபதநிஸ்
    - அவரோகணம் - ஸ்நிதபமகரிஸ
    - இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் ஸ்ட்ஜம்

  சுத்தரிஷபம், சாதாரணகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம் சுத்த தைவதம், கைசிகிநிஷாதம்.

- எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாக அமைந்த சம்பூர்ண இராகம்.
- க, ம, த இராகச்சாயா ஸ்வரங்கள்
- பஞ்சம வர்ஜப் பிரயோகங்கள், ஜண்டை, தாட்டுப் பிரயோ கங்கள் இராக ரஞ்சகமானது என விளக்கி

• செயற்பத்திரத்தை வழங்குதல்

**படி 4.2.1.3 :** • மாணவர்களின் பேறுகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குதல்.
• தோடி இராகத்தின் இலட்சணத்தினை மீளவும் வலியுறுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. தோடி இராகத்தின் மேளஎண், ஆரோகணம் அவரோகணம் ஸ்வரஸ்தானங்களைக் கூறுவார்.
2. தோடி இராகத்தின் எல்லா ஸ்வரங்களுக்கும் கோமள ஸ்வரங்கள் எனக் குறிப்பிடுவார்.
3. தோடி இராகத்தில் அமைந்த உருப்படிகளை இனம் காண்பார்.
4. தோடி இராகத்திலமைந்த சஞ்சாரங்களைப் பாடுவார்.
5. தோடி இராகத்திலமைந்த சஞ்சாரப் பிரயோகங்களைக் குறிப்பிடுவார்.
6. தோடி இராகத்தின் இலட்சணத்தை விவரிப்பார்.

**செயற்பத்திரம் :**

• தோடி இராகத்தின் இலட்சணத்தை கீழே தரப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி எழுதுக.
  1) மேள எண்
  2) ஆரோகண அவரோகணம்
  3) ஸ்வரஸ்தானங்கள்
  4) இரஞ்சகப் பிரயோகங்கள்
  5) உருப்படிகள்
  6) சஞ்சாரம்
  7) வேறு பண்புகள்

# இராக இலட்சணம்
# இராகம் - தோடி

தோடி இராகம் 8ஆவது மேளகர்த்தா இராகம், நேத்ர சக்கரத்தின் இரண்டாவது இராகம் (நேத்ர - ஸ்ரீ) கடபயாதி ஸங்க்யைக்காக ஹனுமதோடியென்று அழைக்கப்பட்டது. அநேக ஜன்னிய இராகங்களையுடைய மேளராகங்களில் இதுவுமொன்று.

ஆரோகணம் - ஸரிகமபதநிஸ்

அவரோகணம்- ஸ்நிதபமகரிஸ

ஸ்டஜ பஞ்சமங்களோடு தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள், சுத்தரிஷபம், சாதாரணகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம் என்பனவாகும்.

சம்பூர்ண இராகம், பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள மேள இராகங்களில் இதுவுமொன்று. க், ம, த இராகச் சாயா ஸ்வரங்கள் பஞ்சமம் வர்ஜ ஜண்டை ஸ்வரப் பிரயோகங்களும் நிகரிநி / தநிரிநிதம / ககமநிதமகரிஸ போன்ற தாட்டு ஸ்வரப் பிரயோகங்களும் இராக ரஞ்சகமானவை.

தரிஸ்தா ரிஸ்தா போன்ற சஞ்சாரங்கள் விசேட பிரயோகங்களாகும். ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம் எப்பொழுதும் பாடத் தகுந்த இராகம் பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம். திரிஸ்தாயி இராகம் மூர்ச்சனாகாரக மேள இராகம் தோடியின் ரி, க, ம, த, நி ஸ்வரங்களை முறையே ஸட்ஜமாக வைத்துக் கொண்டால் (கிரக பேதம்) கல்யாணி, ஹரிகாம்போதி, நட பைரவி, சங்கராபரணம், கரஹரப்பிரியா ஆகிய மேளங்கள் ஒலிக்கும் விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம் எல்லா உருப்படி வகைகளையும் இந்த இராகத்தில் காணலாம். சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள் பாடுவதற்கேற்ற இராகம் இசை நாடகங்களிலும் நிருத்திய நாடகங்களிலும் உபயோகிக்கப் படும் இராகம்.

தோடி ஸீதாராமய்யர் இந்த இராகத்தைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர். புராதன சங்கீத கிரந்தங்களில் இந்த இராகம் காணப்படுகின்றது.

**சஞ்சாரம் :**

தநிஸ்ாஸ்ா ஸ்நிதா - தநிஸ்ரிரிஸ்ா - ஸ்நிதபம - பதநீதநீ
ஸ்ாஸ்ா ஸ்நிதா - தநிஸ்ரி - காரிஸ்நி - தநிஸ்ரிக்ம்க்ாரிரிஸா
ஸ்நிதபா - மபா தநிதபா - பமகாரிரிஸா - ஸநிதா - தநிஸரிஸா

**உருப்படிகள் :**

| | | | |
|---|---|---|---|
| கீதம் | - கலைமகளே | - ரூபகம் | - பெரியசாமித் தூரன் |
| தானவர்ணம் | - ஏராநாபை | - ஆதி | - பட்டணம் சுப்பிரமணியர் |
| | - கனகாங்கி | - அட | - பல்லவி கோபாலய்யர் |
| க்ருதி | - கொலுவமரெகதா | - ஆதி | - ஸ்ரீ தியாகராஜர் |
| | - தாசரதே | - ஆதி | - ஸ்ரீ தியாகராஜர் |
| | - ஆரகிம்பவே | - ரூபகம் | - ஸ்ரீ தியாகராஜர் |
| | - கடைக்கண்நோக்கி | - ஆதி | - பாபநாசம் சிவன் |
| | எந்துரு தயராது | - திரிபுடை | - ஸ்ரீ தியாராஜர் |
| | - தாமதமேன் ஸ்வாமி | - ஆதி | - பாபநாசம் சிவன் |
| பதம் | - எல்லா அருமைகளும் | - ஆதி | - ஊத்துக்காடு வெங்கட ஸுப்பய்யர் |

**தேர்ச்சி :** 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் :** 4.3 இசைக்கருவிகளின் அமைப்பையும் பயன்பாடுகள் பற்றிய விளக்கத்தையும் பெறுவார்.

**செயற்பாடு :** 4.3.1 வீணை வாத்தியத்தின் இலட்சணத்தை அறிவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- வீணை வாத்தியத்தின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம்
- வீணை வாத்தியம்
- வீணை இசை அடங்கிய ஒலி நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- வீணை வாத்தியத்தின் அமைப்பையும் சுருதி சேர்க்கும் முறையினையும் குறிப்பிடுவார்.
- வீணை வாசிக்கும் முறையினைக் கூறுவார்.
- வீணையின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.3.1.1 :**

- மாணவர் ஏற்கெனவே செவிமடுத்த வாத்தியங்களின் ஓசை பற்றிக் கலந்துரையாடி, சரஸ்வதியின் கையில் உள்ள வாத்தியம் வீணை எனக் கூறியும் வீணை வாத்தியம் பற்றி பின்வரும் விடயங்கள் தொடர்பாக விளக்குதல்.
- ஒலிப்பதிவுக் கருவியில் வீணை இசையைப் போட்டுக்காட்டிச் செவிமடுக்கச் செய்தல்.
- வீணை வாத்தியத்தின் சிறப்புக்கள்
- வீணை வாத்தியத்தின் அமைப்பு
- வாசிக்கும் தந்திகள், தாளத் தந்திகளின் பெயர்கள்
- வீணையின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம்.
- வீணை வாசிக்கும் முறையும் சுருதி சேர்க்கும் முறையும்
- வீணை வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள்

**படி 4.3.1.2 :**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை வழங்குதல்.
- அறிவுரைக்கேற்பச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துதல்.

**படி 4.3.1.3 :**

- ஒவ்வொரு குழுக்களும் தமது பேறுகளையும் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய குழுக்கள் அவற்றை அவதானித்துக் கருத்துக்கூற இடமளித்தல்.
- குழுக்களில் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் மூலம் மீளவும் வலியுறுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. வீணை வாத்தியத்தின் சிறப்பினைக் குறிப்பிடுவார்.
2. வீணையின் அமைப்பை விளக்குவார்.
3. வீணை சுருதி சேர்க்கும் முறையினைக் கூறுவார்.
4. வீணை வாசிக்கும் முறையினைக் கூறுவார்.
5. வீணையின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுவார்
6. வீணை வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்களின் பெயர்களைக் கூறுவார்.

**செயற்பத்திரம் :**

- வீணை வாத்தியத்தின் படம் வரைந்து, பாகங்களைக் குறிப்பிடுக.
- வீணை வாத்தியத்தின் அமைப்பை விளக்குக.
- வீணை வாசிக்கும் முறையையும் சுருதி சேர்க்கும் முறையையும் கூறுக.
- வீணை வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்களைக் குறிப்பிடுக.

# இசைக்கருவி - வீணை

இசைக்கருவிகளில் சிறப்பான வாத்தியமாக விளங்குவது வீணையாகும். இது இந்திய சங்கீதத்திற்கு அணிகலனாக விளங்குவதுடன் இந்தியாவின் தேசிய வாத்தியமாகவும் விளங்குகிறது. வீணா, வேணு மிருதங்கம் எனும் வாத்தியங்களில் முதலாவதாக இவ்வாத்தியம் கருதப்படுகிறது. கலைமகளின் கையில் இவ்வாத்தியம் இருப்பதிலிருந்து இதன் பெருமை நன்கு புலப்படுகிறது. இவ்வாத்தியத்தில் இந்திய சங்கீதத்தின் பல நுட்பங்களையும், தத்துவங்களையும் வாசிக்கக்கூடியதாக இருப்பதனால் இதனைச் சங்கீத அளவுகோல் என்று கூறுவர்.

இவ்வாத்தியமானது வேதகாலந்தொட்டு வாசிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனாலும் 17 ஆம் நூற்றாண்டிலேயே தற்காலத்து உருவத்தையும் அமைப்பையும் பெற்றது. இரகுநாத மன்னர் தஞ்சாவூரை அரசு புரிந்த காலத்திலேயே இவ்வாத்தியம் முழுவளர்ச்சி அடைந்ததாகை யால் தஞ்சாரவூர் வீணை என்றும் இரகுநாத வீணையென்றும் இது அழைக்கப்படுகின்றது.

வீணையானது ஒரு நரம்புக் கருவியாகும். சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் இவ்வாத்தியத்திலேயே 3 தந்திகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் இவ்வாத்தியம் சகல வாத்தியம் என்று கூறப்படுகிறது. சுருதிக்காகத் தனியே தந்திகள் பொருத்தப்படாத வாத்தியம் நிஷ்கள வாத்தியம் எனப்படும். ஒரேநேரத்தில் வெவ்வேறு ஸ்தாயிகள் 2, 3 ஸ்வரங்கள் வாசிக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள வாத்தியங்களில் வீணையும் ஒன்று. இதனால் இவ்வாத்தியம் பஹூத்வனி வாத்தியம் என்று அழைக்கப்படும் வீணை வாத்தியத்தில் 3 1/2 ஸ்தாயிகள் வாசிக்கலாம் நான்கு தந்திகள் வாசிப்பதற்காகவும், 3 தந்திகள் சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் அமைந்துள்ளன. வாசிக்கும் தந்திகளுக்காக குடத்தின் மேற்பாகத்தில் நடுப்பகுதியில் ஒரு குதிரை (பக்க பாலம்) யும், தாள, சுருதித் தந்திகளுக்காக பக்கவாட்டில் மற்றொரு குதிரை (பக்கம் பாலம்) யும் உள்ளன. பலா மரத்தினால் இவ்வாத்தியம் செய்யப்படுகிறது.

### இவ்வாத்தியத்தின் பாகங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| 01. | குடம் | 07. | மேளச்சட்டம் |
| 02. | மேற்பலகை | 08. | மெழுகுச் சட்டம் |
| 03. | தண்டி | 09. | 24 மெட்டுக்கள் |
| 04. | சுரைக்காய் | 10. | குதிரைகள் 2 |
| 05. | பிரடைகள் | 11. | லங்கர் |
| 06. | யாழி முகம் | 12. | நாகபாசம் |
| | | 13. | உருட்டுக்கள் (சிறுவளையங்கள்) |

### வீணையின் அமைப்பு:-

தண்டியின் ஒரு பக்கத்தில் குடமும், மற்றொரு பக்கத்தில் யாழி முகமும் இணைக்கப் பட்டிருக்கும்.தண்டியானது குடப்பக்கத்தில் சற்றுப்பருத்தும், யாழிமுகப்பக்கத்தில் சற்றுச் சிறுத்தும் இருக்கும். தண்டியின் இருபக்கங்களிலும் மெழுகுச்சட்டங்கள் உண்டு. அவற்றின் மேலாக 2 ஸ்தாயிகளைத் தழுவிய 24 மெட்டுக்கள் வெண்கலத்திலானது. வெள்ளியினிலாவது, எ∴கினாலாவது செய்யப்பட்டிருக்கும். யாழிமுகத்திற்கு அருகிலிருக்கும் சுரைக்காய் ஒரு தாங்கியாகவும், ஒலி பெருக்கும் சாதனமாகவும் பயன்படுகிறது. வாசிக்கும் தந்திகள் நான்கும் லங்கர்களின் நுனியிலுள்ள வளையங்களில் முடியப்பட்டு குதிரையின் மேலும், மெட்டுக்களின் மேலும் சென்று பிரடைகளில் பிணைக்கப்பட்டிருக்கும். லங்கர்கள் வீணையின் மூலாதாரம் எனப்படும் நாகபாசத்தில் இணைக்கப்பட்டிருக்கும் லங்கர்களின் மேல் உள்ள சிறு உருட்டுக்கள் (வளையங்கள்) நுட்பமாகச் சுருதி சேர்ப்பதற்கு உதவும். இந்த உருட்டுக்களை நாகபாசப் பக்கம் தள்ளினால் சுருதி அதிகரிக்கும். யாழி முகப்பக்கம் தள்ளினால் சுருதி குறையும். இதேபோன்று பிரடைகளை யாழி முகப்பக்கம் திருப்பினால் சுருதி குறையும். வாசிப்புத் தந்திகள் நான்கின் பெயர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 01. | ஸாரணி (ஸ) | 03. | மந்தரம் (ஸ) |
| 02. | பஞ்சமம் (ப) | 04. | அனுமந்திரம் (ப) |

### தாளத் தந்திகள் மூன்றின் பெயர்கள்:-

01. பக்க ஸாரணி (ஸ)
02. பக்க பஞ்சமம் (ப)
03. ஹெச்சு ஸாரணி (ஸ்)


வாசிக்கும் தந்திகளில் ஸாரணித் தந்தியை மத்திம ஸ்தாயி ஸட்ஜத்திற்கும், பஞ்சமத் தந்தியை மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும், மந்தரத் தந்தியை மத்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும், அனுமந்தரத் தந்தியை அனுமத்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும்.

சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் பயன்படும் தந்திகளில் பக்க ஸாரணித் தந்தியை மத்தியஸ்தாயி ஸட்ஜத்திற்கும் பக்க பஞ்சமத் தந்தியை மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கும் ஹெச்சுஸாரணித் தந்தியைத் தாரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும்.

வீணை வாத்தியத்தில் தானத்தினை சிறப்புற வாசிக்கலாம்.

### வாசிக்கும் முறை :-

வாசிக்கும் தந்திகளை மீட்டுவதற்கு வலது கையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் தாளத்தந்தி - சுருதித்தந்திகளை மீட்டுவதற்கு வலது கையின் சிறிய விரலும் பயன்படும். இடதுகையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் ஸ்வரஸ்தானங்களை உரிய இடத்தில் தந்திகளில் அழுத்துவதற்கும் பயன்படும். தந்திகளை மீட்டுவதற்கு "மீட்டி" அல்லது நெளி எனப்படும் சுற்றுக்கம்பிகளைப் போட்டு மீட்டுவர். வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களை வைணீகர் என அழைக்கப்படும். வீணை வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள் வீணை தனம்மாள், காரைக்குடி சாம்பசிவம், எஸ். பாலசுந்தர், சிட்டி பாபு ஆவர்.


வீணை
மெழுகுச்சட்டங்கள்
நாகபாசம்
இருபத்தினான்கு மெட்டுக்கள்
தண்டி
மூன்று தாளத்தந்திகள்
மேளச்சட்டம்
நான்குதந்திகள்
கழுத்து
சுரைக்காய்
பிருடைகள்
யாளிமுகம்
குடம்
நாபுக்கள்
ஒலித்துளை (நாதரந்திரம்)
இரண்டு குதிரைகள்
லங்கர்
கம்பிச்சுருள்கள்

**தேர்ச்சி** : 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக, கலாசார, பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 இந்தியாவின் கர்நாடக இசையின் தோற்றம் வளர்ச்சி தொடர்பான விடயங்களை ஆராய்வோம்.

**செயற்பாடு** : 5.1.1 இந்தியாவின் 7 ஆம் 8 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி விளக்குவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- இந்தியாவின் 7 ஆம் 8 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி தொடர்பான விளக்கப்படங்கள்.
- நாயன்மார்களின் படங்கள்.
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்**

- இந்தியாவின் 7ஆம் 8ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி யினை விளக்குவார்.
- நாயன்மார்கள் பண்ணிசை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுவார்.
- பல்லவ மன்னர் இசைக்காற்றிய பங்களிப்பை விபரிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 5.1.1.1 :**

- இந்தியாவின் 7ஆம் 8ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி தொடர்பான படங்கள், நாயன்மார்களின் படங்களைக் காட்சிப்படுத்தி மாணவரோடு பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துயையாடுதல்.
- சமண மதம் ஆதிக்கம் பெற ஏனைய மதங்கள் வலிமை இன்றிக் காணப்பட்டமை.
- சைவ, வைணவ மதங்கள் புத்துயிர் பெற்றமை.
- பல்லவ மன்னர்களின் ஆதரவுடன் சமயம், கலைகள், சாஸ்திரங்கள் என்பன வளர்க்கப்பட்டமை.
- இசைக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக் கலை போன்றவை வளர்ச்சியடைந்தமை.
- இசைக் கல்வெட்டுக்கள் 4) இரஞ்சகப் பிரயோகங்கள்

**படி 5.1.1.2 :**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் சரியாகச் செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்தல்.

**படி 5.1.1.3 :**

- ஒவ்வொரு குழுவும் தாம் கண்டறிந்தவற்றை வெளிக்கொணரச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- குழுக்களின் கருத்தை முழுமைப்படுத்திக் கலந்துரையாடுதல்
- கலந்துரையாடல் மூலம் மீளவும் வலியுறுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. சமணமதம் ஆதிக்கம் பெற்று ஏனைய மதம் வலிமை குன்றிக் காணப்பட்டமையைக் குறிப்பிடுவார்.
2. சைவ, வைணவ மதங்கள் புத்துயிர் பெற்றமை பற்றிக் கூறுவார்.
3. பல்லவ மன்னர்களின் ஆதரவுடன் சமயம், கலைகள், சாஸ்திரங்கள் வளர்க்கப்பட்டமை பற்றி விளக்குவார்.
4. இசைக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை வளர்ச்சியடைந்தமை பற்றி விவரிப்பார்.
5. இசைக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டமையைக் குறிப்பிடுவார்.

7ஆம் 8ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி தொடர்பாக வழங்கப் பட்டுள்ள கட்டுரையை வாசித்து செயற்பத்திரத்தில் தரப்பட்டுள்ள வினாவுக்கு விடையளிக்குக.

**செயற்பத்திரம் :**

- இந்தியாவில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் பண்ணிசை வளர்ச்சிக்குச் சமய குரவர்களும், பல்லவர் கால மன்னர்களும் ஆற்றிய பங்களிப்பினைக் குறிப்பிடுக.
- இந்தியாவில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் திருமுறைகளுடன், சிற்பம், ஓவியம், நடனம் முதலிய நுண்கலைகள் வளர்ச்சியடைந்தமைக்குச் சான்றுபகரும் அம்சங் களைக் குறிப்பிடுக.
- இந்தியாவில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் இசை வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக.

## இந்தியாவில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி

கி.பி 7ஆம், 8ஆம் நூற்றாண்டு பல்லவராட்சிக் காலப்பகுதியாகும். இக்காலத்துக் கலாசாரப் பண்பினை அறிந்து கொள்வதற்கு இக்காலத்துச் சமயநிலை பற்றி ஓரளவிற் காயினும் நாம் அறிதல் வேண்டும். சங்கமருவிய காலப் பகுதியின் ஆரம்பத்தில் சைவம், வைணவம், சமணம், சாக்கியமாகிய நால்வகைச் சமயங்களும் பகைமையின்றி வளர்ந்து வந்தன. எனினும் அக்கால முடிவில் சமண சமயமே உயர்நிலை பெற்றிருந்தது.

எவ்வகையிலும் சைவம், வைணவம் ஆகிய சமயங்களை அழித்துத் தம் சமயத்தைப் பரப்பச் சமணர்கள் பல வழிகளைக் கையாண்டனர். இதன் விளைவாக மன்னரும், மக்களும் சமண சமயத்தைத் தழுவத் தொடங்கினர். சிவனுக்கும், திருமாலுக்கும் கட்டப்பட்ட கோவில்கள் போற்றுவாரின்மையால் அழியத் தொடங்கின. சைவமும் வைணவமும் அக்காலத்தில் ஒன்றுபட்டு நின்றிருந்த காரணத்தால் பரவிக்கொண்டு சென்ற சமண சமயத்தை எதிர்க்கும் ஆற்றலை அவை பெற்றிருந்தன.

சமண சமயத்தைத் தழுவிய மகேந்திரவர்மனை திருநாவுக்கரசரும் நின்ற சீர் நெடுமாறனைத் திருஞானசம்பந்தரும் சைவர்களாக்கிய காலந்தொட்டுச் சைவமும் வைணமும் மீண்டும் தழைக்கலாயின். சைவத்திற்கும், வைணவத்திற்கும் புத்துயிரளித்தவர்கள் முறையே நாயன்மார்களும் ஆழ்வார்களுமாவார். இக்காலத்தில் எழுந்தவை பக்தி இலக்கியங்களாகும்.

சங்க காலத்தில் இருந்த உலகியல் சார்ந்த இசை பல்லவராட்சிக் காலத்தில் பக்தி இசையாக மறுமலர்ச்சி கண்டது. நாயன்மார்கள் இசையைத் தெய்வ வழிபாட்டுடன் இறுகப் பிணைத்தனர்.

சம்பந்தருக்குப் பொற்றாளம் கிடைத்த வரலாற்றில் இருந்து தேவாரம் தாளத்துடன் பாடப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேலும், தமிழ்நாடு கலைவளம் பெற்று விளங்கிய காலம் பல்லவராட்சிக் காலமாகும். இசை மட்டுமன்றிச் சிற்பம், ஓவியம், நடனம் முதலிய நுண்கலைகள் அவர் காலத்தில் உயர்நிலை பெற்றிருந்தனவென்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. பல்லவர் காலத்துப் பெருங்கோவில்களில் நடன மண்டபம், தருக்க மண்டபம் முதலிய பல மண்டபங்கள் அமைக்கப்பட்டதிலிருந்து அக்கோவில்கள் சமயக்கல்வி, சாத்திரக்கல்வி, இசை, நடனம் முதலியவை வளர்த்தற்குரிய இடங்களாகவும் விளங்கின என்பது தெளிவாகின்றது. எல்லாச் சமயத்தவரும் தத்தம் மதங்களை வளர்த்தற் பொருட்டுப் பல்லவ மன்னர் பல மடங்களைக் கட்டினர். இம்மடங்கள் அறிவு வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும், கலை விருத்திக்கும் பெரிதும் பயன்பட்டன.

பல்லவர் காலத்து மன்னர்களும் ஆலயங்களில் இன்னிசைப் பண் வளர அயராது உழைத்தனர். தேவாரப் பண்களைப் பண்ணோடு பாட மன்னர் பேராதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. மகேந்திரவர்மன் **“விசித்திர சித்த” “சங்கீர்ண”** முதலிய பல விருதுகளைப் பெற்றுள்ளான். முன்னையது அருங்கலையுள்ளத்தையும், பின்னையது அவனது இசை ஈடுபாட்டினையும் காட்டுகின்றன. சங்கீர்ண என்ற தாள வகையைக் கண்டு பிடித்தமை யாலேயே இவ்விருதுப் பெயர் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. குடுமியாமலை இசைக் கல்வெட்டும் மன்னனுடைய இசைப் புலமைக்குத் தக்க சான்றாகும். திருமயம் இசைக் கல்வெட்டும் இசை வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகிறது.

இறை வழிபாட்டிற்குச் சிறப்பாக உரிய தோத்திரப் பாமாலைகள் பதிகம் முதலிய முறையில் வெளிவந்தமையால் ஒரு புதிய இலக்கிய மரபு தமிழ் மொழியில் ஆரம்பித்தது. இச்சங்கம், சங்கருவிய காலப் பகுதிகளில் பெருவழக்காயிருந்த அகத்திணை மரபையும் நாயன்மாரும் ஆழ்வார்களும் கைவிடவில்லை. தலைவன் தலைவியருக்கிடையில் அன்பை வெளிப்படுத்தப் பயனபடுத்தப்பட்டன. **திருநாவுக்கரசரின் “முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்” திருஞானசம்பந்தரின் “சிறையாரும் மடக்கிளியே”** மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடல்கள் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தமிழ் நாட்டில் வழங்கி வந்த நாட்டுப்பாடல் வகைகளைத் தழுவிப் பல பதிகங்கள் பல்லவர் காலப் பகுதியில் பாடப்பபட்டுள்ளன. தேவார திருப்பதிகங்கள் பெரும்பாலும் நாட்டு மக்கள் இறைவனை வழிபடும் போது ஓதுவதற்கு இயற்றப்பட்டனவாதலின், நாயன் மார்களும், ஆழ்வார்களும் நாட்டுப்பாடல் முறையில் அவற்றைப் பாடினார்கள் எனக் கருத இடமுண்டு. திருவாசகத்தில் உள்ள திருவம்மானை, திருச்சாழல், திருப்பொன்னூசல் முதலிய பதிகங்களும், பெரியாழ்வார் பாடியருளிய (கண்ணன் குழல் வாரக் காக்கையை அழைத்தல்) முதலிய பதிகங்களும் இதற்கு உதாரணங்களாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருப்பதி கங்களுள் சிலவும் நாட்டுப் பாடல்களிலுள்ள இசை முறை தழுவி அமைந்துள்ளன வாகக் காணப்படுகின்றன.

**தேர்ச்சி** : 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக, கலாசார, பாரம்பரிய பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.2 வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றினையும், இசைத் தொண்டினையும் மதிப்பிடுவார்.

**செயற்பாடு** : 5.2.1 முத்துத் தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- முத்துதாண்டவரின் உருவப்படம்
- இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- முத்துத்தாண்டவர் 17ஆம் நுற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் எனக் கூறுவார்.
- சீர்காழியிலே இசை வாணர் மரபில் பிறந்தவர்.
- இயற்பெயர் தாண்டவர் என்றும், சிறப்புப் பெயர் முத்துத்தாண்டவர் எனக் கூறுவார்.
- அவரது இளமைப்பருவம், வாழ்க்கை வரலாறு, இசைத் தொண்டு பற்றி கூறுவார்.
- அவரது பதங்கள் பேரின்பப் பதங்கள் என்றும் இறைவனை அடையும் மார்க்கத்தை அனுபவ வாயிலாகப் பெறலாம் என்பதையும் கூறுவார்.
- தாண்டவர் தமிழிசை மும்மணிகளில் ஒருவர் எனக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 5.2.1.1 :**

- இசைக்குத் தொண்டாற்றிய வாக்கேயகாரர் பற்றி மாணவர்களிடம் கேட்டறிதல்.
- முத்துத்தாண்டவரின் படத்தைக் காட்சிப்படுத்தி, இவர் இயற்றிய பாடல்களைப் பாடிக் காட்டியோ, அல்லது ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தோ அவதானிக்கச் செய்தல்.
- முத்துத்தாண்டவர் தொடர்பான பின்வரும் விடயங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுதல்.
    - வாழ்க்கைக் காலம்
    - பிறந்த இடம்
    - பெற்றோர் இட்ட பெயர், சிறப்புப் பெயர்
    - இசைவாணர் மரபிலே பிறந்தார்
    - வாழ்க்கைச் சம்பவங்கள்
    - இசைத்தொண்டு
    - இயற்றிய உருப்படிகள்
    - தமிழிசை மும்மணிகளில் ஒருவர்

**படி 5.2.1.2 :**
- சகல மாணவர்களுக்கும் செயற்பத்திரம் வழங்குதல்.
- அறிவுறுத்தல்களுக்கேற்ப மாணவரின் செயற்பாட்டினை உறுதி செய்தல்.

**படி 5.2.1.3 :**
- மாணவர் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய மாணவர்கள் அவதானித்துக் கருத்துக்கள் கூற இடமளித்தல்.
- கலந்துரையாடல் மூலம் மீளவும் வலியுறுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**
1. முத்துத் தாண்டவரின் வாழ்க்கைக் காலம் பிறந்த இடம், பெற்றோர் இட்டபெயர், சிறப்புப் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
2. இவரது இசைப்பணி பற்றி கூறுவார்.
3. இவரின் வரலாறு இசைப்பணி, என்பவற்றை கற்பதன் மூலம் இசைக்கலைஞர்களின் பங்களிப்பினை மதிக்கும் மனப்பாங்கை ஏற்றுக் கொள்வார்.

**செயற்பத்திரம் :**
- முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.
  - வாழ்க்கைக் காலம்
  - பிறந்த இடம்
  - பெற்றோர் இட்ட பெயர்
  - சிறப்புப் பெயர்
  - வாழ்க்கையில் திருப்பம் ஏற்படக் காரணமாக அமைந்த சம்பவம்
- இவரது இசைப்பணி பற்றி எழுதுக.

# வாக்கேயகாரர் சரித்திரம்
# முத்துத் தாண்டவர்

## இளமைக் காலம்
- இவர் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீர்காழியில் இசைக்கலையே தம் குலத் தொழிலாகக் கொண்ட இசைவாணர் மரபிலே தோன்றினார்.
- பெற்றோரால் இவருக்கு இடப்பட்ட பெயர் "தாண்டவன்" ஆகும்.
- குழந்தைப் பருவம் முதல் ஈசனைப் பாடும் இசைப் பாடல்களிலும் அவற்றை அபிநயத்தில் காட்டும் ஆடல்களிலும் லயித்துக் காலத்தைக் கழித்தார்.
- அவருக்கு ஏற்பட்டிருந்த சரும நோய் காரணமாகச் குலத் தொழிலை மேற்கொள்ள முடியாமற் போயிற்று.
- இதனால் ஆலயத்திலே தனது காலத்தைக் கழித்து வருகையில் அங்கு நாட்டியப் பணிபுரிந்த சிவபாக்கியம் என்னும் கணிகையின் ஆடல் பாடல்களினால் மனதைக் கவர்ந்து அதனை இரசிக்க ஆரம்பித்தார்.
- இதை அறிந்த பெற்றோர் அப்பெண்ணின் தொடர்பை நிறுத்தும்படி கேட்க தாண்டவர் மறுத்தார். குடும்பத்தவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டார்.

## எதிர்பாராத சம்பவமும் புதுவாழ்வும்

- ஒரு நாள் பசியால் ஆலயத்தினுள் படுத்துறங்கையிலே நள்ளிரவு நேரம் விழித்தெழுந்த தாண்டவர் உடற் பிணியாலும், பசிப் பிணியாலும் மிகத் துயர் அடைந்து அம்மையப்பரின் திருவடிகளை நினைந்து தொழுதார்.
- அந்த நேரத்தில் தேவி அனுக்கிரகம் கொண்டு சிறுமி வடிவத்தில் தோன்றி அவருடைய பசியைத் தீர்க்க உணவளித்தார்.
- தாண்டவர் அந்த அம்மையிடம் தனது உடற் பிணிகளை நீக்கும்படி வேண்டவே இறைவியார் அவரைத் தில்லையம்பலத்திற்குச் சென்று நடராசப் பெருமானை இன்னிசையால் வழிபடும்படி பணித்தார்.
- அதைக்கேட்ட தாண்டவர் "நான் பாடும் வகை அறியேனே" என்று கூற அம்மையார் நீ கூத்தப் பெருமாள் திருமுன் வழிபாடு செய்யும் போது அன்பர் கூட்டத்திலிருந்து எச்சொல் முதன் முதலாக வெளிப்படுகின்றதோ அச் சொல்லையே முதலாக வைத்துப் பாடுக. உமக்கு பாடும் ஆற்றலை இறைவன் அருள்வார் என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்துவிட்டார்.
- அவருக்கு நிகழ்ந்த அனைத்தையும் கேள்வியுற்ற மக்கள் வியப்புற்று அன்று முதல் அவரை "முத்துத் தாண்டவர்" என்று அழைக்க ஆரம்பித்தனர்.
- முத்துத் தாண்டவர் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானைத் தொழுகையில் அடியார் கூட்டத்திலிருந்து பூலோக கயிலாச கிரி சிதம்பரம் என்னும் தொடர் மொழி வெளிப்படவே அத்தொடரையே முதலாகக் கொண்டு "பூலோக கயிலாச கிரி சிதம்பர மல்லால் புவனத்தில் வேறும் உண்டோ" (பவப்பிரியா - மிஸ்ரஜம்பை) என்ற கீர்த்தனையை இறைவன் திருவருளால் பாடி முடித்தார்.
- கீர்த்தனையை பாடி முடித்ததும் தனக்கு முன் ஐந்து பொற் காசுகள் இருப்பதை அறிந்த முத்துத் தாண்டவர் மகிழ்ச்சியடைந்தார். அன்றே அவரது உடற் பிணியும் நீங்கியது.
- ஒரு நாள் இறையடியாரிடமிருந்து யாதொரு சொல்லும் வெளிப்படாததால் தான் கடமையிலிருந்து தவற விரும்பாதவராய் அப்பேச்சின்மையை முதலாகக் கொண்டு "பேசாதே நெஞ்சமே" (சூரியகாந்தம் - மிஸ்ரஜம்பை) என்ற பாடலை பாடி முடித்துப் பரிசும் பெற்றார்.

## இவரது உருப்படிகளும் பாடற் சிறப்பும்

- தாண்டவர் சீர்காழியிலிருந்து சிதம்பரத்துக்கு வரும்பொழுது கொள்ளிடம் பெருக்கெடுத்து ஓடியது. அப்போது கரையிலேயே நின்று கொண்டு "காணாமல் வீணிலே காலம் கழிந்தோமே" (தன்யாசி - மிஸ்ரசாபு) என்ற பாடலை பாடி முடித்தவுடன் வெள்ளப்பெருக்கு குறைந்து அவருக்கு வழிகொடுத்தது.
- ஆற்றைக் கடந்து கரையேறிக் களிப்பு நிரம்ப "தரிசனம் செய்வேனே" (வஸந்தா - ஆதி)என்ற கீர்த்தனையைப் பாடினார். சிதம்பரம் அடைந்து இறைவன் திருமன் "கண்ட பின் கண் குளிர்ந்தேன்" (மலைய மாருதம் - ரூபகம்) என்னும் கீர்த்தனையைப் பாடினார்.
- சில நாள் சென்ற பின் ஒரு நாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்துக்கு வரும் வழியில் அவரைப் பாம்பொன்று தீண்டியதும் உள்ளம் கலங்காமல் "அருமருந்தொரு தனிமருந்து அம்பலத்தில் கண்டேன்" (காம்போதி - ரூபகம்) என்னும் கீர்த்தனையைப் பாட விடம் நீங்கியது.
- இவ்வாறு கீர்த்தனங்களும், பதங்களுமாக நடராசப்பெருமான் மீது பற்பல இசைப் பாடல்கள் பாடியும், அருஞ் செயல்கள் பல நிகழ்த்தியும் உள்ளார்.
- இறுதியில் ஆவணித் திங்கள் பூச நன்னாளில் இறைவன் திருமுன் நின்று "மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்" (கோகிலப்பிரியா - ரூபகம்) என்னும் பாடலைப் பாடச் சிதம்பரத்திலிருந்து பேரொளியொன்று வெளிப்பட்டது. அப்பேரொளிப் பிழம்பில் முத்துத் தாண்டவர் இரண்டறக் கலந்தார்.

- இவர் அறுபது கீர்த்தனங்களும், இருபத்தைந்து பதங்களும் இயற்றியுள்ளார். இவற்றைத் தவிர இன்னும் பல நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ள தாகவும் குறிப்புக்கள் கிடைத்துள்ளன. "தெருவில் வாராானோ" என்ற கமாஸ் இராக ரூபக தாளத்தில் அமைந்த பதம் சிறந்ததொன்று.
- இவர் பாடல்கள் யாவும் கற்பவர் கேட்பவர் உள்ளங்களில் சிவபக்தியை விளைவிப்பனவாகவும் சொற்சுவை, பொருட்சுவை, இசை நுணுக்கம், எதுகை மோனை, முதலிய தொடை நயங்களைக் கொண்டனவாகவும், பழைய வரலாறுகள், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பியுள்ளனவாகவும் விளங்குகின்றன. இவரது பதங்கள். "பேரின்ப பதங்கள்" எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

## 2ம் தவணை

**தேர்ச்சி** : 1.0 இசை நிகழ்ச்சிகளை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.2 சாஸ்திரிய வாத்திய இசையை இரசித்து விமர்சிப்பார்.

**செயற்பாடு** : 1.2.1 புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் வாத்திய இசையின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு இரசனையை வெளிப் படுத்துவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- புல்லாங்குழல், வீணை, மிருதங்கம், வாத்திய இசை அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள்
- ஒலிப்பதிவுக்கருவி
- இசைக்கருவிகளின் படங்கள்
- செயற்பத்திரம்
- தொலைக்காட்சி

**கற்றற் பேறுகள்**

- புல்லாங்குழல், வீணை, மிருதங்க வாத்தியங்களின் இசையை இனங்கண்டு வேறுபடுத்திக் கூறுவார்.
- புல்லாங்குழல், வீணை, மிருதங்க வாத்தியங்களின் இசையைக் கேட்டுத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.
- வாத்திய இசையை சுயமாக இரசிக்கும் அனுபவத்தை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 1.2.1.1 :**

- இசைக் கருவிகள் பற்றி மாணவர்களிடம் கேட்டறிதல்.
- இசைக்கருவிகளின் பிரிவுகளைக் குறிப்பிடுதல்.
- இசைக் கருவிகளில் இசைக்கப்படும் இசையின் தன்மையை எடுத்துக் காட்டுதல்.
- புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் இசையினை, ஒலிப்பதிவு நாடாக்களில் ஒலிக்கச் செய்தோ, அல்லது இசைக்கருவிகளில் வாசித்துக்காட்டியோ, அல்லது தொலைக் காட்சியில் போட்டுக்காட்டியோ, அதனை அவதானிக்கச் செய்து இரசித்தலுக்குத் தூண்டுதல்.
- ஏனைய இசைக்கருவிகள் பற்றி பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடலை நிகழ்த்துதல்.
  - புல்லாங்குழல் துளைக்கருவியாகும், காற்று வாத்தியமாகும், வீணை நரம்புக்கருவியாகும், மிருதங்கம் தோற்கருவியாகும்
  - இக்கருவிகளை பார்த்தும், கேட்டும் இரசிக்கும் போது ஏற்படும் மன உணர்வு, வாசிக்கும் முறை.
  - இவ்வாத்தியங்களுக்கு இசைக்கப்படும் அணிசேர் வாத்தியங்களின் ஒத்திசைவு

**படி 1.2.1.2 :**
- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குக.
- மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதி செய்க.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்து கருத்துக்கள் கூற இடமளிக்குக.

**படி 1.2.1.3 :**
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடி மீளவும் வலியுறுத்துக.
- புல்லாங்குழல் பழமையான துளைக்கருவியாகும். சகல ஜீவராசி களையும் மயக்கும் தன்மை புல்லாங்குழல் இசைக்குண்டு.
- வீணை இந்திய சங்கீத்தில் எல்லா வாத்தியங்களுக்கும் அரசி யாகவும், தேசிய வாத்தியமாகவும் திகழ்கின்றது.
- இவ்வாத்தியங்களின் இசைக்கு மிருதங்கம் அணிசேர் வாத்திய மாகத் திகழ்கின்றது.
- இவ்வாத்தியங்கள் கச்சேரிகளில் தனித்தனியாகவும், எல்லாவகை யான உருப்படிகளையும் வாசிக்கக்கூடியதாக திகழ்கின்றது.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகளின் விசேட அம்சங்களைக் குறிப்பிடுவார்.
2. வாத்திய இசையை இரசிப்பதன் மூலம் வாத்தியக் கலைஞரின் ஆற்றலை மதிப்பார்.
3. வாத்திய இசையை இரசிக்கும் போது ஏற்படும் உணர்வுகளை பகிர்ந்து கொள்வார்.

**செயற்பத்திரம் :**

- புல்லாங்குழல் இசையின் தனித்துவமான அம்சங்களில் இரசித்தவற்றை இனங்கண்டு பட்டியற்படுத்துக.
- வீணை இசையின் தனித்துவமான அம்சங்களில் இரசித்தவற்றை இனங்கண்டு பட்டியற்படுத்துக.
- மிருதங்கம் வாசிக்கப்படும் சந்தர்ப்பம், இதன் தனித்துவமான அம்சங்களில் இரசித்தவற்றை இனங்கண்டு பட்டியற்படுத்துக.

**தேர்ச்சி** : 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 2.2 தத்தம் இயல்புக்கேற்ப சிறுவர் பாடல்களை ஆக்கி மெட்டமைத்துப்பாடுவார்.

**செயற்பாடு** : 2.2.1 சிறிய பாடல்களைத் திஸ்ர, சதுஸ்ர நடைகளில் ஆக்கம் செய்து மெட்டமைத்துப் பாடுவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- சிறிய பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவுநாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- சுருதிப்பெட்டி

**கற்றற்பேறுகள்**

- சிறிய பாடல்களை திஸ்ர சதுஸ்ர நடைகளில் ஆக்கம் செய்வார்
- ஆக்கிய பாடல்களை மெட்டமைத்துப் பாடுவார்.
- பாடல்களை ஆக்கி மெட்டமைக்கும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 2.2.1.1 :**

- மாணவர்கள் கற்ற, கேட்டறிந்த சிறிய பாடல்களைப் பற்றிக் கலந்துரையாடி அவற்றைப் பாடும்படி கேட்டுப் பின்வரும் விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- திஸ்ர சதுஸ்ர நடைகளை விளக்குதல் (தகிட, தகதிமி என்ற ஜதிச் சொல்)
- ஒலிப்பதிவு நாடாக்களில் சிறிய பாடல்களை ஒலிக்கச் செய்து மெட்டை மனதில் கொண்டு இசையமைக்கத் தூண்டுதல்.

**படி 2.2.1.2 :**

- கொடுக்கப்பட்ட தலைப்புக்களுக்கு ஏற்ப திஸ்ர, சதுஸ்ர நடைகளில் சிறிய பாடலை ஆக்க வழிப்படுத்தல்.
- வேறுசில மெட்டுக்களிலே அமைந்த பாடல்களை பாடிக்காட்டி மெட்டமைக்கும் திறனைப் பெறவைத்தல்.

**படி 2.2.1.3 :**

- திஸ்ர, சதுஸ்ர நடைகளில் ஆக்கம் செய்யப்பட்ட சிறிய பாடல்களை மெட்டமைத்துப்பாட சந்தர்ப்பம் வழங்குதல்.
- மீளவும் முழுமையாக பயிற்சி செய்தல்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. சிறுவர் பாடல்களைத் திஸ்ர, சதுஸ்ர நடைகளில் ஆக்கம் செய்யும் திறனைப் பெறுவார்.
2. ஆக்கம் செய்யப்பட்ட பாடல்களை மெட்டமைத்துப் பாடும் திறனைப் பெறுவார்.
3. திஸ்ர, சதுஸ்ர நடைகளில் ஆக்கம் செய்யப்பட்ட பாடல்களை மெட்டமைத்துப் பாடுவார்.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.2 இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.2.1 "இனி நமக்கொரு கவலையுமில்லை" என்னும் கீர்த்தனையைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 3 மணித்தியாலம் 20 நிமிடங்கள்

**பாடவேளைகள் :** 05

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா
- கீர்த்தனை எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்**

- கீர்த்தனை சபாகான உருப்படி எனக் குறிப்பிடுவார்.
- "இனி நமக்கொரு கவலையுமில்லை" எனும் கீர்த்தனை பிலஹரி இராகத்தில் ரூபக தாளத்தில் அமைந்துள்ளது எனக் கூறுவார்.
- பிலஹரி இராகத்தின் ஆரோகணத்தைக் கூறுவார்.
- கீர்த்தனையானது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களைக் கொண்டுள்ளது எனக் கூறுவார்.
- "இனி நமக்கொரு கவலையுமில்லை" என்னும் கீர்த்தனையைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.2.1.1 :**

- கீர்த்தனை எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் அமைப்பு பற்றி விளக்குதல்.
  - "கீர்த்தனையானது சபாகான உருப்படியாகும்"
  - கீர்த்தனையின் இராகம் - பிலஹரி
  - கீர்த்தனையின் தாளம் - ரூபகம்
  - பிலஹரி இராகத்தின் ஆரோகணம் : ஸரிகபதஸ்<br>அவரோகணம்: ஸ்நிதபமகரிஸ
  - கீர்த்தனையானது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களையுடைய உருப்படி.
- பிலஹரி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தை பாடிக்காட்டி மாணவரையும் பாடச் செய்தல்.

**படி 3.2.1.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்கி மாணவர் செயற்பட அறிவுறுத்தலை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படும் விதத்தினை அவதானித்து வழுக்களை நிவர்த்தி செய்தல்.

**படி 3.2.1.3 :**
- போதிய பயிற்சியில் ஈடுபட்ட பின்னர் ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய குழுக்கள், தத்தமது கருத்தினைக் கூறச் சந்தர்ப்பம் அளித்தல்.
- சுருதி, தாளம், ஸ்வரஸ்தானம் வழுவிப் பாடிய மாணவர்களுக்கு மீண்டும் பயிற்சியினை வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**
1. கீர்த்தனையானது சபாகான உருப்படி எனக் கூறுவார்.
2. கீர்த்தனையானது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களைக் கொண்டுள்ளது எனக் கூறுவார்.
3. "இனி நமக்கொரு கவலையுமில்லை" என்ற கீர்த்தனை பிலஹரி இராகத்தில் ரூபக தாளத்தில் அமைந்துள்ளது எனக் கூறுவார்.
4. பிலஹரி இராகத்தின் ஆரோகணம் - ஸரிகபதஸ்
   அவரேகாணம்- ஸ்நிதபமகரிஸ
   எனக் கூறுவார்.
5. "இனி நமக்கொரு கவலையுமில்லை" என்னும் கீர்த்தனையைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம் :**
- "இனி நமக்கொரு கவலையுமில்லை" என்னும் கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பயிற்சி செய்க.
- "இனி நமக்கொரு கவலையுமில்லை" என்னும் கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுக.

# கீர்த்தனை

இராகம் - பிலஹரி　　ஆரோகணம் : ஸரிகபதஸ்　}　29 இன் ஜன்னியம்
　　　　　　　　　　அவரோகணம்: ஸ்நிதபமகரிஸ }

தாளம் : ரூபகம்

இயற்றியவர் : மாயூரம் வேதநாயகம் பிள்ளை

## பல்லவி

1. ஸ்ா ஸ்ா நீ தா பா பா // நித தப ம க க ரி க ரிஸா /
இ. னி ந மக் கொ ரு க வ லை யு மி . லை
; கா பா தா ; ரீ // ஸ்ா ; ; ஸ்நி தப தா /
என் றும் இன் ப மே . . ம ன மே.

2. ஸ்ரிக்ரி ஸ்ா நீ தா பா // நித தப மக கரி க ரி ஸா /
இ. னி ந மக் கொ ரு க வ லை யு மி . லை
; கா பா தா ; ரீ // ஸ்ா ; ; ஸ்நி தப தா /
என் றும் இன் ப ப மே . . ம ன மே.

## அனுபல்லவி

1. ; கக பா தா ; ஸ்ா // ஸ்ா ; ஸ்ா ஸ் நிதப நித /
. புனி த த்யா . க ரா ஜ ஸ்வா ... மி

2. ; கக பா தா ; ஸ்ா // ஸ்ரிக்ரி ஸ்ா ஸ் நிதப நித /
. புனி த த்யா . க ரா... ஜ ஸ்வா ... மி

3. தப கக பா தா ; ஸ்ா // ஸ்ரிக்ப் க்ரிஸ்நிதப தா /
. புனி த த்யா . க ரா... ஜ ஸ்வா ... மி

; த ரி ஸ்ா ஸ்நிதா பா // நிததப மக கா பா தா /
. கன வில் வந் . து கா... ட்சி. தந் த தால்

## சரணம்

; பா பா ; பா ; // நித தப மக கரி கரிஸா /
கந் தர் . வா . க .. ன. லோ . .லா
; ரி கா. ஸா ; ஸ நித // ஸரிகா ரிகபா; மக /
கன சீ .ல . த்யா க. ரா . ஜ
ரிக பா பா ; பா ; // நித தப மக கரி கரிஸா /
.. கந் தர் வ // க . .. ன. லோ .. லா

; ரி கா. ஸா ; ஸ நித // ஸரிகா ரிகபா; , ப /
கன சீ . ல. . த்யா க. ரா . ஜ

(அனுபல்லவி போல் பாடவும்)
சுந்தரர் சேவை கண்ட நன்
சுகிர்தமே சுகிர்தம்

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.1 அப்பியாசகான உருப்படிகளை அப்பியாசம் செய்வார்.

**செயற்பாடு** : 3.1.3 "முருகா" என்ற மத்தியமாவதி இராக ஆதிதாள தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியைப் பாடுவோம்.

**பாடவேளைகள் :** 08

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- வர்ணம் ஸ்வரசாகித்தியமாக எழுதப்பட்ட அட்டை
- மத்தியமாவதி இராக ஸ்வரஸ்தான வரைபடம்
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்**

- வர்ணம் அப்பியாசகானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி எனக் கூறுவார்.
- மத்தியமாவதி இராகத்தின் ஸ்வரஸ்தானங்களைக் கூறுவார்.
- தானவர்ணத்தினை இராக பாவத்துடன் பாடும் திறனைப் பெறுவார்.
- "முருகா" என்ற ஆதிதாளவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை இராக, தாள, பாவத்துடன் பாடுவர்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.1.3.1 :**
- மத்தியமாவதி இராகத்தில், முன்னர் கற்று இரசித்த உருப்படிகள் பற்றிக் கலந்துரையாடி மத்தியமாவதி இராக வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியைப் பாடிக் காட்டுதல்.
- வர்ணம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- வர்ணத்தின் அமைப்பை விளக்கி இராக தாளத்தைக் கூறுதல்.
- மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக் காட்டுதல்.
- வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர, சாகித்திய ரூபமாக பகுதி பகுதியாக கற்பித்தல்.
- மாணவர்கள் அதனை செவிமடுத்துப் பாட வழிப்படுத்துதல்.
- பூர்வாங்கப் பகுதியை இரு காலங்களிலும் பாட வழிப்படுத்துதல்.
- மாணவர்களுடன் சேர்ந்து பூர்வாங்கப் பகுதியைப் பாடுதல்.

**படி 3.1.3.2 :**
- மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்துப் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர சாகித்தியமாகப் பாட வழிப்படுத்துக.
- ஒவ்வொரு குழுவும் திறம்படச் செயற்படுகின்றார்களா என்பதை உறுதி செய்து நெறிப்படுத்துக.

**படி 3.1.3.3 :**
- குழுக்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கு இடமளித்தல்.
- குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. வர்ணத்தின் இராக, தாளத்தைக் கூறுவார்.
2. வர்ணத்தின் அங்க அடையாளங்களைக் கூறுவர்.

3. வர்ணத்தின் பூர்வாங்க பகுதியை இரண்டு காலங்களிலும் பாடுவர்.
4. வர்ணத்தின் பூர்வாங்க பகுதியை ஸ்வர சாகித்திய தாள அங்க அடையாளக் குறியீடுகளுடன் எழுதுவர்.

**செயற்பத்திரம்**

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

• வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடுக.

## தான வர்ணம்

இராகம்:- மத்தியமாவதி ஆரோகணம் - ஸரிமபநிஸ்
தாளம்:- ஆதி அவரோகணம் - ஸ்நிபமரிஸ } 22ன் ஜன்யம்

### பல்லவி

ரீஸாரீ; ரிமபம - ரிஸரீ / ரிமபம - ரிமரிஸ / ஸநிபநி - ஸரிஸரி ||
முருகா . . . . எ .ன தா. . . ரு. . . யி. . . ரே . . .
ரிமபமரிஸ ரிமரிமபம - பநி பநி / ப நிஸ்ஸ்நி ப மப /நிநிபம - ரிம ரி ஸ ||
வ.ரு.... வா.. . .ய் அன் .. பே . . . . ஆ . . று .மு. க. னே .

### அனுபல்லவி

நீ பா நீ ; பமபநி ப ம பா / மப நி மபமரிஸ / ரிமபநி ஸ்ா; ||
பெரு க ா . . . . . . த லா . லே. . . . வா.டி . னேன்

ப நிஸ்ரி ம்ரி ஸ்ரிஸ் நிஸ்நி-பமபநி /ஸ்ரீஸ் நிஸ்நி- பநி / பமபம -ரிமரிஸ ||
பே . . . ர. ரு. . . . .. ளா. . ளா. . . . . அ. ழ... கா. .

### முக்தாயிஸ்வரம்

ரீபம - ரீமரி - ஸாரிஸ - நிபு ஸநி /ஸா; - ஸ்ா நிநி / பப மம ரிரி ஸஸ /
ரிபப ரிமம - ஸரிமபநி -மபநிஸ்ரி/ ம்ரீம்ரிஸ் ரிஸ்/ நிபம ரிபமரிஸ/
(முருகா)

### சரணம்

பா பா நீ ; ; - ம பா ரிமா / பா ; ; மப / நிநிபம - ரிஸரி ம ||
தி ரு மால் அ ரு மரு கா . . ம. றை.பு. - க .ழும் .

1. பா ; ; மாரீ மாரீ ஸா / ரீ ஸா; பம / நிபா மரிஸ ரிம ||
(திருமால்)
2. பாபநீப - மநிபாப மாபரிம / பாமரீ மரிஸ / ரிஸாரி நிஸரிம ||
(திருமால்)
3. நீ ப ம ப - நிநிபா மரிபாம ரிம /ரிரி ஸமமரி பம / நிப ஸ்நிபா; ||
ஸ்பாநி - மபநிஸ்ாரி நிஸ்நிப ஸ்நி /ஸ்ரிஸ்ா, பநிம / பா, ரிம - ரிபம /
(திருமால்)
4. ரீ ; ரீஸ்நி- ஸ்ரிஸ்நி - பமபநி / ஸ்ா; ; நிஸ் / ரிம்ரிஸ் நிபநிஸ் ||
ரி ஸ்ாரி - நீஸ பாநி மாபு - ரீம / பபஸ்ாநிபம -ரி /மபநிநி ஸ்ா ; /
பநிப ஸ்ாஸ் - நிஸ்நி ரீ ரி ஸ்நிஸ்ரி / ரிரிம்ம் - ரிரிஸ்ஸ்/நிபநிஸ்- ரீ;/
ஸ்ரீம்ரீ -ஸ்நி ப – ரீஸ்ாநிபம - ஸ்நி /, பமரி நிபாம / ரிஸ - ஸரீ - ஸரிம /
(திருமால்)

**தேர்ச்சி** : 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.5 பண்ணிசை பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** : 4.5.1 பண்ணிசையின் தோற்றம், பண்களின் வகைகள் வளர்ச்சி பற்றி அறிவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- பண்களின் வகைகள் அட்டவணை
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- பண்ணின் வகைகளை விளக்குவார்.
- பண்களுக்கும் சமயத்திற்குமுள்ள தொடர்புகளைக் கொண்டு பக்தி, உணர்வை வளர்த்துக் கொள்வார்.
- தற்போது வழக்கிலுள்ள பண்கள் 24 என்பதைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.5.1.1 :**

- தோடுடைய செவியன் எனும் தேவாரத்தைப் பாடிப் பண்ணிசை பற்றிய விளக்கத்தை கலந்துரையாடிப் பின்வரும் விடயங்களை விளக்குதல்.
- சைவம் நலிவுற்று சமணசமயம் ஓங்கி வளர்ந்த காலகட்டத்தில் தேவார முதலிகள் தோன்றி பண்ணிசை வளர்த்ததன் மூலம் சைவசமயத்தை ஓங்கி வளரச் செய்தனர் என்பதை மாணவர்களுக்கு விளக்குதல்.
- பண்கள், பண்களுக்குச் இணையான இராகங்களின் அட்டவணை யைக் காட்சிப்படுத்தி, அவற்றிற்கு ஒப்பான இராகங்களையும் அட்டவணை மூலம் எடுத்துக் கூறுதல்.
- ஆலயங்களில் ஓதுவார்களை நியமித்து ஆதீனங்களின் பண்ணிசை யைப் கற்பிப்பதற்கு வசதியளித்தமை இராஜராஜசோழன், நம்பியாண்டார் நம்பி மூலம், தேவாரங்களைத் தொகுத்து உதவி யமை பற்றி விளக்குதல்.
- 103 பண்களில் தற்கால வழக்கிலுள்ளது 24 பண்கள் என்றும் பண்களின் வகைகள் பகற்பண், இராப்பண், பொதுப்பண் என்றும் பண்களின் பிரிவுகள் பண்ணியம், திறம், திறத்திறம் (ஷாடவ, ஔடவ, ஸ்வராந்தரம்) என்பவற்றையும் விளக்குதல்.

| | | |
|---|---|---|
| பண் | - | (சம்பூர்ண இராகம்) |
| பண்ணியம் | - | (ஷாடவம்) |
| திறம் | - | (ஔடவம்) |
| திறத்திறம் | - | (ஸ்வராந்தரம்) |
| திறன் | - | (ஜன்னியராகம்) |
| பிறழ்ச்சிப்பண் | - | (பாஷாங்க இராகம்) |
| ஒருவியபண் | - | (வர்ஜ இராகம்) |

**படி 4.5.1.2 :**
- மாணவர்களைச் சிறிய குழுக்களாக்கிச் செயற்பத்திரத்தை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்பச் செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச் செய்க.

**படி 4.5.1.3 :**
- ஒவ்வொரு குழுவையும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்க வழிவகுக்க.
- குறைகளை கண்டு நிவர்த்தி செய்க. நிறைகளைப் பாராட்டுக.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. பண்ணிசையின் தோற்றம் வளர்ச்சி பற்றி விவரிப்பார்.
2. பண்களின் வகைகளை விளக்குவார்.
3. பண்களையும் அவற்றிற்கு இணையான இராகங்களைக் கூறுவார்.

**செயற்பத்திரம் :**

**குழு - 1**

- பண்ணிசையின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குக.

**குழு - 2**

- பண்களையும் பண்ணிற்கு இணையான இராகங்களையும் எழுதுக.

**இணைப்பு**

## பண்ணிசை

இந்திய சங்கீத வரலாற்றை நோக்கின், நமக்குக் கிடைத்துள்ள இராக தாள அமைப்புடன் கூடிய உருப்படிகளில், மிகப் பழமையானது தேவாரம் என்பது புலனாகும். தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்குத் தேவாரப் பண்களே ஆதி லட்சியங்களாகும்.

சைவசமயம் நலிவுற்றுச் சமண சமயம் ஓங்கி வளர்ந்த காலகட்டத்திற் தேவார முதலிகள் தோன்றிப் பண்ணிசை வளர்த்ததன் மூலம், சைவசமயத்தை ஓங்கி வளரச் செய்தனர்.

தேவாரத்தைத் திருவாய் மலர்ந்தருளிய, திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கி.பி 7ஆம் நூற்றாண்டிலும் சுந்தரமூர்த்திநாயனார் கி.பி 9ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்களாவார். தேவாரப் பதிகங்கள் தோன்றும் போதே இசை வடிவங்களுடன் மூவர் வாக்கில் இருந்தும் தோன்றிய சிறப்பை உடையன. இக்காரணத்தினாலேதான் தேவாரப் பதிகங்களுக்குத் தனிச் சுவையும் பிரகாசமும் இருப்பதோடு, கேட்போருக்குப் பக்தி உணர்வும் உண்டாகின்றது. தேவாரப் பண்களின் வர்ண மெட்டுக்கள், ஓதுவார்கள் மூலமாகவும் குருசிஷ்ய பரம்பரை மூலமாகவும் காப்பாற்றப்பட்டு வந்துள்ளன.

தேவாரம் என்பது தெய்வத்தன்மை வாய்ந்த “வாரப்” பாடல்களாகும். இசைத் தமிழைச் சேர்ந்த முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நான்கு வகைகளில் ஒன்றாகிய “வாரம்” என்பது சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் சிறந்து விளங்குகின்றது.

திருஞானசம்பந்தருக்குப் பொற்றாளம் கிடைத்த வரலாற்றில் இருந்து, தேவாரம் தாளத்துடன் பாடப்பட்டது என்பது தெளிவாகின்றது.

பண் என்பது இராகம் ஆகும். பண் என்ற பதத்திற்குப் பாட்டு, சம்பூர்ண இராகம் என வேறு இரு பொருள்களும் உண்டு. பண்களுக்கு இராகங்களைப் போல் ஸ்வரங்கள், ஜீவ ஸ்வரங்கள், நியாச ஸ்வரங்கள், அந்நிய ஸ்வரங்கள் ரக்திப்பிரயோகங்கள், சொரூபத்தை விளக்கும் நுட்ப சுருதிகள், கமகங்கள் முதலியன உண்டு. பண்களின் சொரூபங்களை அறியத் தேவாரங்களே சிறந்த லஷியமாகும். இராகங்களை ஔடவ, ஷாடவ, சம்பூர்ணம் என்று பிரிப்பதற்கும், பண்களே காரணமாய் இருந்தன.

இந்திய சங்கீத சரித்திரத்தில் பாஷாங்க இராகம் என்பதை, முதன்முதலாகத் தேவாரப் பண்களிலேயே காண்கிறோம். பாஷாங்க இராகம் என்பது ரக்தியின் பொருட்டுத் தனது தாய் இராகத்தில் வராத ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று ஸ்வரங்களைக் குறிப்பிட்ட பிரயோகங்களில் எடுத்துக் கொள்ளும் இராகம் ஆகும். கௌசிகம் (பைரவி) வியாழக் குறிஞ்சி (சௌராஷ்டிரம்) போன்ற பண்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

மேலும், காந்தார பஞ்சமம் (கேதாரகௌளை) செந்துருத்தி (மத்தியமாவதி) போன்ற பண்கள் உபாங்க இராகத்திற்கு உதாரணங்களாகும். செந்துருத்திப் பண்ணினைச் சுந்தரமூர்த்தி நாயனாரின் ஒரு பதிகத்திலேயே காணக்கூடியதாயுள்ளது. பந்துவாராளி என்ற பிரதிமத்திம இராகத்திற்கு ஒப்பானவை சாதாரி, நட்டராகப் பண்களாகும்.

திருஞானசம்பந்தர் பாடிய "மாதர் மடப்பிடியும்" என்ற பதிகத்திற்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் வாசிக்க முடியாது வருந்திய சம்பவத்திலிருந்து, தேவாரம் பாடுகையில் யாழ் பயன்படுத்தப்பட்டமை தெளிவாகின்றது.

பிற்காலத்தில் இராகங்களின் வளர்ச்சிக்குத் தேவாரப் பண்கள் மிக்க உதவியாக இருந்தன. தேவாரப் பண்களில் ரக்தி இராகங்களே முக்கியமாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு பண்ணிற்கும் உற்ற சுருதிகள், கமகங்கள், வக்ரப் பிரயோகங்கள், உருப்படிகள் ஆரம்பிப்பதற்குத் தகுதியான ஸ்வரங்கள் முதலிய விடயங்களை அந்தந்தப் பண்களில் அமைந்துள்ள தேவாரப் பதிகங்களிற் காணலாம்.

24 பண்களும், பண்களுக்குச் சமமான கர்நாடக இராகங்களும் பின்வருமாறு:

| **பண்** | | **இராகம்** |
|---|---|---|
| பஞ்சமம் | - | ஆஹிரி |
| சீகாமரம் | - | நாதநாமக்ரிய |
| புறநீர்மை | - | பூபாளம் |
| வியாழக் குறிஞ்சி | - | சௌராஷ்டிரம் |
| கௌசிகம் | - | பைரவி |
| செந்துருத்தி | - | மத்தியமாவதி |
| காந்தார பஞ்சமம் | - | கேதாரகௌளை |
| அந்தாளிக் குறிஞ்சி | - | ஸாமா |
| தக்கேசி, தக்கராகம் | - | காம்போதி |
| செவ்வழி | - | யதுகுலகாம்போஜி |
| பழம்பஞ்சுரம் | - | சங்கராபரணம் |
| கொல்லி, கொல்லிக் கௌவாணம் காந்தாரம், பியந்தைக் காந்தாரம் | - | நவரோஜ் |
| மேகராகக் குறிஞ்சி | - | நீலாம்பரி |
| நட்டபாடை | - | கம்பீர நாட்டை |

| | | |
|---|---|---|
| ஸாதாரி, நட்டராகம் | - | பந்துவராளி |
| யாழ்முரி | - | அடாணா |
| இந்தளம் | - | மாயாமாளவகௌளை |
| பழந்தக்கராகம் | - | ஆரபி |
| குறிஞ்சி | - | ஹரிகாம்போஜி |

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம், ஹரிகாம்போஜி இராகத்திலும் திருவாசகம் மோகன இராகத்திலும் பாடப்பட்டு வருவது மரபாகும். பண் என்பதை தாய் இராகம் என்றும், திறம் என்பதை ஜன்யராகம் என்றும் கூறுவர்.

தேவாரப் பதிகங்கள், தற்போது 24 பண்களில் அமைந்துள்ளன. பண்கள் பாடப்பட வேண்டிய கான காலத்தைக் கொண்டு பகற்பண், இராப்பண், பொதுப்பண் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பண் | - | சம்பூர்ண ராகம் |
| பண்ணியம் | - | ஷாடவ இராகம் |
| திறம் | - | ஔடவ இராகம் |
| திறந்திறம் | - | ஸ்வராந்தர இராகம் என்றும் கூறப்படும் |

| **பகற்பண்கள்** | **இராப்பண்கள்** | **பொதுப்பண்கள்** |
|---|---|---|
| புறநீர்மை | சீகாமரம் | செந்துருத்தி |
| பஞ்சமம் | வியாழக் குறிஞ்சி | செவ்வழி |
| இந்தளம் | அந்நாளிக் குறிஞ்சி | |
| காந்தார பஞ்சமம் | கொல்லி | |
| தக்கேசி | மேகராகக் குறிஞ்சி | |
| பழம் பஞ்சுரம் | பழந்தக்கராகம் | |
| நட்டபாடை | | |
| சாதாரி | | |

தேவாரப் பதிகங்கள் பாடப்பட்ட காலத்தில் இந்தியா முழுவதும் ஒரே வகையான சங்கீதமே இருந்தது. அக்காலத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதம், கரநாடக சங்கீதம் என்னம் பிரிவு ஏற்படவில்லை.

7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களாற் பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகங்கள் சோழ மன்னரது ஆட்சிக் காலத்திலே - மக்களிடையே பரப்பப்பட்டன. சோழ அரசர்கள், சிவநெறிச் செல்வர்களாக இருந்து ஆலயங்களில் ஓதுவார்களை அமர்த்தி, அவர்கள் மூலம் தேவாரப் பதிகங்களை நாடு முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் 12 திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும்.

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.2 இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு** : 4.2.2 கல்யாணி இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- கல்யாணி இராகத்தின் ஆரோகண அவரோகண வரைபடம்
- ஸ்வரஸ்தான வரைபடம்
- சுருதிப்பெட்டி
- இராகலட்சணம் எழுதப்பட்ட பிரதி
- செயற்பத்திரம்
- இணைப்பு

**கற்றற் பேறுகள்**

- கல்யாணி இராகம் ஒரு தாய் இராகம் எனக் கூறுவார்.
- கல்யாணி இராகத்தின் மேள எண், ஆரோகண அவரோகணம், ஸ்வரஸ்தானம் என்பவற்றைக் கூறுவார்.
- கல்யாணி இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் எல்லாம் தீவிர ஸ்வரங்கள் என்பதனைக் கூறுவார்.
- கல்யாணி இராகத்தைப் பாடும் போது இனம்காண்பர். கல்யாணி இராக உருப்படிகளையும் இனம்காண்பார்.
- வேறு இராகங்களுக்கும் இலட்சணம் எழுதும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.2.2.1 :**

- மாணவர்களிடம் ஏற்கெனவே கற்ற ஜனக இராகங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- கல்யாணி இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடிக் காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.
- ஆரோஹண, அவரோஹண ஸ்வரஸ்தான அட்டவணையைக் காட்சிப் படுத்தி, மாணவர்களை அவதானிக்கச் செய்தல்.

**படி 4.2.2.2 :**

- அவதானித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களை அறிவுறுத்துக.
  - கல்யாணி ருத்ர சக்கரத்தின் ஐந்தாவது இராகம் (ருத்ர-மா)
  - கல்யாணி 65 வது மேளர்த்தா இராகம்
  - ஆ - ஸரிகமபதநிஸ்<br>அவ - ஸ்நிதபமகரிஸ
  - எல்லா ஸ்வரங்களும் தீவிர ஸ்வரங்களாக அமைந்துள்ள இராகம்
  - சங்கராபரண இராகத்தின் நேர் பிரதி மத்திம இராகம் கல்யாணி ஆகும்.
  - சஞ்சாரம்
  - உருப்படிகள்
  - கிரக பேதம் செய்வதில் உண்டாகும் இராகங்கள்
- செயற்பத்திரத்தை வழங்குதல்.

**படி 4.2.2.2 :** • மீள வலியுறுத்தும் வகையில் இராக இலட்சணத்தை முழுமைப் படுத்திக் கூறல்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. கல்யாணி இராகத்தின் ஆரோஹண அவரோஹணம், மேள எண் ஸ்வரஸ்தானங்களைக் கூறுவார்.
2. எல்லா ஸ்வரங்களும் தீவிர ஸ்வரங்களாக அமைந்துள்ள இராகம் என்பதைக் குறிப்பிடுவார்.
3. சங்கராபரணத்தின் நேர்பிரதி மத்திம இராகம் என்பதைக் கூறுவார்.
4. கல்யாணி இராக உருப்படிகள், சஞ்சாரங்களை எழுதும் திறனைப் பெறுவார்.

**செயற்பத்திரம்**

• தரப்பட்டுள்ள இணைப்பின் உதவியுடன் கல்யாணி இராகத்தின் இலட்சணத்தை கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கி எழுதுக.
  - மேள எண்
  - ஆரோகண அவரோகணம்
  - ஸ்வரஸ்தானம்
  - விஷேட பிரயோகங்கள்
  - ரிகபதநி ஸ்வரங்களை கிரக பேதம் செய்வதனால் உண்டாகும் இராகங்கள்
  - சஞ்சாரம்
  - உருப்படிகள்

## இராக இலட்சணம்

### கல்யாணி

கல்யாணி 65ஆவது மேளகர்த்தா இராகமாகும். ருத்ர சக்கரத்தில் ஐந்தாவது இராகமாகும். (ருத்ரமா) கடபயாதி சங்க்யைக்காக மேசகல்யாணி என்று அழைக்கப் படுகிறது. இதன் ஆரோகண அவரோகணம்.

ஆ - ஸ ரி க ம ப த நி ஸ்
அ - ஸ் நி த ப ம க ரி ஸ்

இந்த இராகம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரஸ்தானங்களாவன:-

ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம் காகலிநிஷாதம் என்பனவாகும். இது பிரதிமத்திம இராகங்களில் பிரசித்தி பெற்ற இராகமாகும். அநேக ஜன்னிய இராகங்களைக் கொண்ட ஓர் ஜனக இராகமாகும்.

சம்பூர்ண இராகம் ஜண்டை ஸ்வரப் பிரயோகங்களும், தாட்டு ஸ்வரப் பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இராகரஞ்சகமானவை. ஸ்ர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம் எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயா ஸ்வரங்கள் விஸ்தாரமான இராக ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்.

எப்பொழுதும் பாட உகந்த இராகம் எனினும் மாலைவேளையில் பாட மிக ரஞ்சகமாக இருக்கும். சுலோகம், பத்யம், விருத்தம் பாட ஏற்ற இராகம். இது ஒரு மூர்ச்சனராக மேளஇராகம். இதன் ரிஷப, காந்தார, காந்தார, பஞ்சமம், தைவத, நிஷாத ஸ்வரங்களை

கிரகபேதம் செய்வதால் முறையே ஹரிகாம்போஜி, நடபைரவி, சங்கராபரணம், கரஹரப்பிரியா, தோடி இராகங்கள் உண்டாகும். முதன் முதலில் மனித பார்வைக்கு வந்த பிரதிமத்திம இராகம் கல்யாணி இராகமாகும். சங்கராபரணத்தின் நேர்ப்பிரதி மத்திமராகமாகும்.

சஞ்சாரம்

ஸ்நிதபமகரி - கமபதநிஸ்ா - தநிஸ்ாநிதபம
கமபத மபதநி - ஸ்ாநிதநிஸ்ா - நிக்ரிஸ்நிதஸ்ா
ஸ்ரிக்ம் பர்ம்க்ரி க்ரிஸ்நிதபம பமகரிஸா

உருப்படிகள்

| | | |
|---|---|---|
| கீதம் | - பதந்தருவாய் | - ஆதி |
| வர்ணம் | - வனஜாஷிரோ | - ஆதி |
| வனஜாழி | - அடதாளம் | - பல்லவி கோபாலய்யர். |
| கிருதி | - நிதிசால | - சாபு - தியாகராஜ ஸ்வாமிகள் |
| | ஏதவுனரா | - ஆதி - தியாகராஜ ஸ்வாமிகள் |
| | ஆடும் கலாப மயில் | - ஆதி -உடுமலைப்பேட்டை நாராயண ஸ்வாமி |
| | வாசுதேவயனி | - ஆதி - தியாகராஜ ஸ்வாமிகள் |
| | கமலாம்பாம்பஜரே | - ஆதி - தீஷிதர் |
| | ஹிமாத்திரிஸுதே | - ரூபகம்- சியாமாசாஸ்திரிகள் |
| | பதம் பாரெங்கும் | - ஆதி - கனம் கிருஷ்ணய்யர் |

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.2 இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு** : 4.2.3 கரஹரப்பிரியா இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- கரஹரப்பிரியா இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடம்
- ஸ்வரஸ்தான வரைபடம்
- சுருதிப்பெட்டி
- இராகலட்சணம் எழுதப்பட்ட பிரதி
- செயற்பத்திரம்
- இணைப்பு

**கற்றற் பேறுகள்**

- கரகரப்பிரியா இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் மேள எண், ஆரோகண அவரோகணம் என்பவற்றைக் கூறுவார்.
- சாமகானம் கரஹரப்பிரியா இராகத்திலே பாடப்பட்டது என்பதனைக் கூறுவர்.
- தியாகராஜ சுவாமிகளால் கரஹரப்பிரியா இராகம் பிரபல்யமடைந்தது என்பதனை கூறுவார்.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் காபி எனப்படுவது இவ்விராகமாகும் என்பதனைக் தெரிந்து கொள்வார்.
- கரகரப்பிரியா இராகத்தைப் பாடும் போது இனம்காண்பர். கரஹரப்பிரியா இராக உருப்படிகளையும் இனங்காண்பார்.
- கரஹரப்பிரியா இராகத்தின் இலட்சணம் எழுதும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.2.3.1 :**

- வெவ்வேறு இராகத்தில் பிரபல்யம் பெற்ற பாடல்கள் சிலவற்றைப் பாடிக் குறிப்பிட்ட இராகத்தினை இனங்காணச் செய்தல்.
- கரஹரப்பிரியா இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடிக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.

**படி 4.2.3.2 :**

- செவிமடுத்த விடயங்களில் காட்சிப்படுத்தப்பட்ட அட்டவணையுடன், இராகத்தின் ஸ்வரஸ்தானங்களையும் அவதானிக்கச் செய்தல்.
- அட்டவணை மூலம் இனம்கண்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களை அறிவுறுத்துதல்.
- கரஹரப்பிரியா இராகம் 22வது மேள இராகம்
- வேத சக்கரத்தில் நான்காவது இராகம் (வேத - பூ)
- ஆரோஹண அவரோஹணம், ஸ்வரஸ்தானம், உருப்படி, சஞ்சாரம் என்பவற்றை விளக்குதல்.
- செயற்பத்திரத்தை வழங்குதல்

**படி 4.2.3.3 :**

- கரஹரப்பிரியா இராகத்தின் இலட்சணத்தை மீளவும் வலியுறுத்தி முழுமைப்படுத்துதல்.

### கணிப்பீடும் மதிப்பீடும் :

1. கரஹரப்பிரியா இராகத்தின் மேள எண், ஆரோஹண, அவரோஹணம், ஸ்வரங்களைக் கூறுவார்.
2. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் காபி என அழைக்கப்படும் இராகம் கரஹரப்பிரியா என்று குறிப்பிடுவார்.
3. தியாகராஜ சுவாமிகளால் கரஹரப்பிரியா இராகம் பிரபல்யம் அடைந்தததைக் கூறுவார்.
4. சாமகானம், கரஹரப்பிரியா இராகத்திலேயே பாடப்பட்டது என்பதைக் குறிப்பிடுவார்.
5. கரஹரப்பிரியா இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை கூறுவார்.

### செயற்பத்திரம் :

சகல மாணவருக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக

- கரஹரப்பிரியா இராகத்தின் இலட்சணத்தை கீழ்வரும் அம்சங்களை உள்ளடக்கி எழுதுக.
  - மேள எண்
  - ஆரோகண அவரோகணம்
  - ஸ்வரஸ்தானம்
  - விஷேட பிரயோகங்கள்
  - ஹிந்துஸ்தானி இசையில் வழங்கும் பெயர்
  - இந்த இராகத்தை பிரபல்யம் அடையச் செய்த வாக்கேயகாரர்
  - கிரகபேதம்
  - உருப்படிகள்
  - சஞ்சாரம்
  - வேறு பண்புகள்

## இராகம் - கரஹரப்பிரியா

22ஆவது மேளகர்த்தா இராகம். வேத சக்கரத்தில் நான்காவது இராகம் (வேத- பூ)
இதன் ஆரோஹணம் - ஸரிகமபதநிஸ்
அவரோஹணம் - ஸ்நிதபமகரிஸ

ஸட்ஜ பஞ்சமங்களைத் தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரங்கள் சதுஸ்ருதி ரிஷபம் சாதாரண காந்தாரம், சுத்த மத்திமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்.

பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள மேள இராகங்களில் இதுவுமொன்று ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம் ரி, க, த, நி இராகச் சாயா ஸ்வரங்களும், நியாஸ ஸ்வரங்களுமாகும். பிரத்யாகத கமகம் இந்த இராகத்தின் ஸ்வரூபத்தை தெளிவாகப் புலப்படுத்தும் நீதபமகரீ, நீதபதநிஸ், நீதபாமகாரி என்பன ரஞ்சகப் பிரயோகங்கள். எந்நேரமும் பாடலாம். அநேக ஜன்னிய இராகங்களை உடைய ஜனக இராகங்களில் இதுவுமொன்று. கிருதிகள் ஸ, ரி, ப, நி ஆகிய ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன. திரிஸ்தாயி இராகம். ஹிந்துஸ்தானி சங்கீதத்திலுள்ள காபி என்பது இந்த இராகமே. தியாகராஜ ஸ்வாமிகள் அநேக கிருதிகளை இந்த இராகத்தில் இயற்றி இவ்விராகத்தை பிரபல்யமடையச் செய்தார். கானரஸப் பிரதான இராகம்.

மூர்ச்சனாகாரக மேள இராகம். இதன் ரி, க, ம, ப, த, நி ஆகிய ஸ்வரங்களை முறையே கிரக பேதம் செய்தால் ஹனுமதோடி, மேசகல்யாணி, ஹரிகாம்போதி, நடபைரவி, தீரசங்கராபரணம் ஆகிய இராகங்கள் வரும்.

ஸாமகானம் இவ்விராகத்திலேயே பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**சஞ்சாரம் :-**

நிதமபமகாரி - நிதபதநித -பாமகாரி -ரிகமப தநிஸ்ா -ஸ்நிதப மகாரி - ரிகமப தநிஸ்ாஸ்நிதா
தநிஸ்ரிக்ரி - ஸ்நிஸ்ரீ - க்ம்க்ாக்ரீரீ - ரீஸ்ாஸ்நிதா - பதநிஸ்ரி - ஸ்ஸ்நீ தநிபதபதநிஸ்
நிநிதப -மபநிதபமகாரீ - நீநிதநி பபமம ககரிரீ - ஸாநித - நிஸாரிஸா -

**உருப்படிகள் :-**

| | | |
|---|---|---|
| கிருதி - சக்கனிராஜ - ஆதி | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி - நடசி நடசி - ஆதி | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி - விடமுஸேயே - ஆதி | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி - பக்கல நிலபடி - மிஸ்ரசாபு | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி - ராமநீஸமான - ரூபகம் | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி - ஸங்கல்பபே - ஆதி | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி - தியாகராஜா - ஆதி | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி - மாயவித்தை - ஆதி | - | பாபநாசம் சிவன் |

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.3 இசைக்கருவிகளின் அமைப்பையும் பயன்பாடுகள் பற்றிய விளக்கங்களையும் பெறுவார்.

**செயற்பாடு** : 4.3.2 புல்லாங்குழல் என்ற வாத்தியத்தின் இலட்சணத்தை அறிவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- புல்லாங்குழல் வாத்தியத்தின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம்
- புல்லாங்குழல் வாத்தியம்
- புல்லாங்குழல் இசை அடங்கிய ஒலிநாடா, ஒலிப்பதிவுக்கருவி

**கற்றற் பேறுகள்**

- புல்லாங்குழல் வாத்தியத்தின் அமைப்பைக் குறிப்பிடுவார்.
- புல்லாங்குழல் வாசிக்கும் முறையினைக் கூறுவார்.
- புல்லாங்குழல் வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.3.2.1 :**

- மாணவர்கள் ஏற்கெனவே செவிமடுத்த வாத்தியங்களின் ஓசை பற்றிக் கலந்துரையாடி, ஒலிப்பதிவுக் கருவியில் புல்லாங்குழல் இசையைப் போட்டுக்காட்டிச், செவிமடுக்கச் செய்தல்.
- புல்லாங்குழல் கண்ணன் கையில் உள்ள வாத்தியம் என விளக்கி பின்வரும் விடயங்கள் தொடர்பாக விளக்குதல்.
  - புல்லாங்குழலின் அமைப்பு
  - புல்லாங்குழலின் சிறப்பு
  - பாகங்கள் குறிக்கப்பட்ட படம்
  - புல்லாங்குழல் வாசிக்கும் முறை
  - புல்லாங்குழல் வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள்

**படி 4.3.2.2 :**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரம் வழங்குதல்.
- செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என உறுதிப்படுத்துதல்.

**படி 4.3.2.3 :**

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் மூலம் மீளவும் வலியுறுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. புல்லாங்குழல் வாத்தியத்தின் சிறப்பினைக் குறிப்பிடுவார்.
2. புல்லாங்குழல் வாத்தியத்தின் அமைப்பை விளக்குவர்.
3. புல்லாங்குழல் வாசிக்கும் முறையினைக் கூறுவார்.
4. புல்லாங்குழலின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுவார்.
5. புல்லாங்குழல் வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்களின் பெயர்களைக் கூறுவார்.

**செயற்பத்திரம் -**

- புல்லாங்குழல் வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
- புல்லாங்குழலின் அமைப்பை விளக்குக.
- புல்லாங்குழல் வாத்தியத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக

- புல்லாங்குழல் வாத்தியம் வாசிக்கும் முறையை விளக்குக.
- புல்லாங்குழல் வாசிப்பதில் பிரபல்யம் அடைந்த வித்துவான்களைக் குறிப்பிடுக.

## இசைக்கருவி - புல்லாங்குழல்

புல்லாங்குழலானது முரளி, வேணு என்னும் வடமொழிப் பெயர்களாலும், குழல் என்னும் தமிழ்ச் சொல்லாலும் குறிப்பிடப்படுகிறது. உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும் மிகப்பழமையான துளைக்கருவி புல்லாங்குழலே ஆகும்.

வீணை, வேணு மிருதங்கம் எனப்படும் வாத்தியத்தில் வேணு இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. கண்ணபிரான் புல்லாங்குழல் வாசித்ததாகவும், அவரது குழல் இசையில் சகல ஜீவராசிகளும் மயங்கியதாகவும் கூறப்படுகின்றது. ஆதிகாலத்தில் மனிதன், மூங்கில் காடுகளினூடாகப் போகும் போது அங்கு இனிமையானதொரு ஓசையைக் கேட்டான். அதனை உற்று அவதானிக்கும் போது வண்டுகளாற் துளை செய்யப்பட்ட மூங்கிற் கம்புகளினூடே காற்று நுழைந்து, அந்தத் துவாரங்களினின்று நாத ஒலி வெளிப்பட்டதை உணர்ந்தான். இவ்வனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு புல்லாங்குழல் என்ற வாத்தியத்தை உருவாக்கினான் - ஆதிகாலத்தில் வாமும் சூழலுமே தமிழிசைக்குப் பக்கவாத்தியங்களாகப் பயன்படுத்தப்பட்டன.


புல்லாங்குழலானது மூங்கிலால் செய்யப்பட்ட உருளை வடிவமான நீண்ட குழாயாகும். இது சுமார் 14 அங்குல நீளமும் 3/4 அங்குல விட்டமும் உடைய குழாயாகும். இதன் இடப்பக்கம் மூடப்படும். வலப்பக்கம் திறந்தும் காணப்படும். மூடப்பட்ட முனையில் இருந்து 3/4 அங்குல தூரத்தில் ஊதும் துவாரம் அமைந்துள்ளது. வாய்வைத்து ஊதும் துளைக்கு **'முகரந்திரம்'** அல்லது **'முத்திரைத் துளை'** என்று பெயர். இத்துவாரத்திற்கு நேர்கோட்டில் ஒன்பது ஸ்வரத்துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துளைகள் ஊதும் துளையை விடச் சற்று சிறியதாக இருக்கும்.

இடது கைவிரல்களில் கட்டை விரல், சிறுவிரல் தவிர்ந்த மூன்று விரல்களையும், வலது கைவிரல்களில் கட்டை விரல் தவிர்ந்த நான்கு விரல்களையும் 7 துளைகளின் மீது வைத்து முத்திரைத் துளைக்குள் வாயின் வழியாகக் காற்றைச் செலுத்தி, துளைகளை மூடித் திறக்கும் போது இசை உருவாகிறது. வலது பக்கத்தில் இறுதியாக உள்ள துளை திறந்தே இருக்கும். இத்துளையானது அபூர்வமாக ஒரு சில சமயங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. 7 ஸ்வரங்களுக்கு 7 துளைகள் இருந்தாலும் மூச்சின் அளவைக் கொண்டே நுட்ப ஸ்வரங்களை சரியாக ஒலிக்க முடியும். முகரந்திரத்திற்கு நெருங்கியுள்ள துவாரம் தான் மிக உயர் சுருதியுடைய ஸ்வரத்தை உண்டாக்குவதாகும். இத்துளையானது **'தாரதந்திரம்'** என அழைக்கப்படுகிறது. பொதுவாக உதட்டிற்கு வலப்பக்கமே புல்லாங்குழல் வைத்து வாசிக்கப்படுகிறது.

இவ்வாத்தியத்தில் 2½ ஸ்தாயி வரை வாசிக்கலாம். இது சுருதி நிர்ணயிக்கப்பட்ட ஏகத்வனி வாத்தியமாகும். புல்லாங்குழலின் நீளம், உள் கூட்டின் அளவு இவற்றின் வேறுபாடுகளினால் ஆதார சுருதி வேறுபடும். நீளம் அதிகமாகவும், உள் கூட்டின் பரப்பு அதிகமாகவும் இருந்தால் ஆதார சுருதி குறையும். நீளம் குறைவாகவும் உள்கூட்டின் பரப்பு குறைவாகவும் இருந்தால் ஆதார சுருதி அதிகமாக இருக்கும்.

புல்லாங்குழல் செய்வதற்கு தந்தம், சந்தனமரம், கதிரமரம், கருங்காலி, வெண்கலம் முதலியன பயன்படுத்தப்படுகின்றன. எனினும் மூங்கிற் குழலே மிக இனிமையான இசையை எழுப்பும் தன்மை உடையது.

சங்கீத கலாநிதி திருப்பாம்புரம் டி.என்.சுவாமிநாதபிள்ளை, T.R. மகாலிங்கம், ரமணி T.R. நவனீதம் போன்ற தென்னிந்தியக் கலைஞர்களும் இவ்வாத்தியம் வாசிப்பதில் நல்ல தேர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


புல்லாங்குழல்
வாய்த்துளை
(முகாந்திரம்)
விரல்துளைகள்
மூடியபகுதி
தாரரந்திரம்
திறந்தபகுதி

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.4 உருப்படிகளில் இலட்ஷணம் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** : 4.4.1 வர்ணம் (தான வர்ணம், பதவர்ணம்) பற்றிய விளக்கங்களைப் பெறுவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஒலிப்பதிவுக்கருவி
- தான வர்ணம்
- பத வர்ணம்
- ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடா
- இணைப்பு

**கற்றற் பேறுகள்**

- வர்ணத்தின் அமைப்பையும் அதன் பிரிவுகளையும் குறிப்பிடுவார்.
- தான வர்ணத்தைப் பாடும் முறையினைக் குறிப்பிடுவார்.
- பதவர்ணம் பாடும் முறையினைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.4.1.1 :**

- இருவகை வர்ணங்களையும் ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்தோ அல்லது பாடிக் காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.
- செவிமடுத்த உருப்படிகளை இனம்காணச் செய்தல்.
- தொடர்ந்து வர்ணம் பற்றிப் பின்வரும் அம்சங்களை விளக்குதல்.
  - வர்ணம் அப்பிசாசகானத்துக்கும் சபாகானத்துக்கும் பொது வான உருப்படியாகும்.
  - வர்ணத்தின் அங்கங்கள் பூர்வாங்கம், உத்தராங்கம் எனப் பிரிக்கப்பட்டுள்ளமை
  - பூர்வாங்கத்தில் பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் என்பனவும் உத்தராங்கத்தில் சரணம், சரணஸ்வரங்கள் என்பனவும் உள.
  - பதவர்ணத்தில் எல்லா அங்கங்களுக்கும் சாகித்தியம் உண்டு.
  - தானவர்ணம் கச்சேரியின் ஆரம்பத்திலும் பதவர்ணம் நாட்டி யக் கச்சேரியிலும் பயன்படுத்தபப்படுகின்றன.
  - பதவர்ணம் சௌக்க காலத்தில் அமைந்திருக்கும்.
  - பதவர்ணம் ஆனது ஆடவர்ணம், சௌக்கவர்ணம் எனப்படும்.
  - வர்ணங்கள் ஆதி, ரூபகம், ஜம்பை அட தாளங்களில் அமைக் கப்பட்டுள்ளமை.
- தான வர்ணங்களை இயற்றிய மகான்களில் சிலர்
  - பச்சமிரியம் ஆதியப்பய்யர்
  - சியாமா சாஸ்திரிகள்
  - பல்லவி கோபாலய்யர்
  - சுவாதித் திருநாள் மகாராஜா

- பத வர்ணங்களை இயற்றிய மகான்களில் சிலர்
  - இராமசாமி தீட்சிதர்
  - முத்துஸ்வாமி தீட்சிதர்
  - பல்லவி ஷேசய்யா
- தான வர்ணங்களுக்கு உதாரணங்கள்
  - அன்னமே - ஆரபி - ஆதி
  - நின்னுகோரி - மோகனம் - ஆதி
  - நெரநம்மி - கானடா - அட
  - விரிபோணி - கேதாரகௌளை - ஜம்பை
- பதவர்ணங்களுக்கு உதாரணங்கள்
  - மோகமான - பைரவி - ரூபகம்
  - ஸ்வாமி நீ -ஸ்ரீரஞ்சனி - ஆதி
  - மாயம் ஏதோ - மாயாமாளகௌளை - ஆதி

4.4.1.2 • தான வர்ணம், பத வர்ணம் பற்றி விபரிக்க வழிப்படுத்துதல்.

4.4.1.3 • பின்னூட்டல் செய்தல்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. வர்ணத்தின் பொதுவான அம்சங்களைக் குறிப்பிடுவார்.
2. தானவர்ணம், பதவர்ணம் ஆகிய இசை உருப்படிகளை வேறுபடுத்தி இனம் காண்பார்.
3. வர்ணத்தின் அமைப்பைக் கூறுவார்.
4. வர்ணத்தின் சிறப்பினையும் தனித்துவத்தையும் விளக்குவார்.
5. இரு வகை வர்ணங்களும் பாடும் முறையினைக் கூறுவார்.
6. இருவகை வர்ணங்களுக்கும் உதாரணம் கூறுவார்.
7. இருவகை வர்ணங்களையும் இயற்றிய வாக்கேயகாரர்கள் சிலரின் பெயர்களைக் குறிப்பிடுவார்.

## உருப்படிகளின் இலட்சணம்
## தானவரண்ம், பதவர்ணம்

அப்பியாசகான உருப்படி வகைகளுள் வர்ணம் மிக முக்கியமாதாகும். வர்ணங்களை அப்பியாசம் செய்வதன் மூலம் உருப்படிகளை அழகுபடுத்தி, மெருகுடனும், கமகத்துடனும் பாடவும், வாசிக்கவும் முடியும். வர்ணத்தில் வார்த்தைகள் குறைவாகவே காணப்படும். இதன் சாகித்தியமானது பக்தி விஷயமாகவோ, சிருங்கார விஷயமாகவோ, சங்கீத வித்துவான் களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ இருக்கும்.

வர்ணமானது பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம், சரண ஸ்வரங்கள் என்னும் அங்கங்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் என்னும் அங்கங்களை பூர்வாங்கத்துள்ளும், சரணம் சரண ஸ்வரங்கள் என்னும் அங்கங்கள் உத்தராங்கத்தினுள்ளும் அடங்கும். சரணத்தை உபபல்லவி என்றும், எத்துக்கடைப்பல்லவி என்றும், சிட்டைப் பல்லவி என்றும் அழைப்பதுண்டு. சரண ஸ்வரங்களுக்கு எத்துக்கடை ஸ்வரங்கள் என்றும், சிட்டை ஸ்வரங்கள் என்றும் வேறு பெயர்களுண்டு.

வர்ணங்களில் தானவர்ணம், பதவர்ணம் என்னும் இரு வகைகள் உண்டு.

தானஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படியே தானவர்ணமாகும். இவ்வர்ணத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகளுக்கு மாத்திரம் சாகித்தியம்

காணப்படும். தானவர்ணங்களை கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாடினால், கச்சேரி விரைவில் களைகட்டும். இதனை இரண்டு காலங்களிலும் பாடவும், வாசிக்கவும் முடியும். தானவர்ணங்கள் ஆதிதாளம், அடதாளம், கண்டஜாதி, திரிபுடைதாளம், சதுஸ்ரஜாதி அடதாளம், ஜம்பைதாளம் போன்ற தாளங்களில் இயற்றப்பட்டுள்ளன.

பதவர்ணமானது நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படி வகையாகும். இது சௌக்க காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. அபூர்வமாக சில பதவர்ணங்கள் மத்திம காலத்திலும் அமைந்துள்ளன.

உதாரணம் : மனவிசேகொனராதா - சங்கராபரணம் - ஆதி

பதவர்ணத்தில் எல்லா அங்கங்களிற்கும் சாகித்தியம் காணப்படும். இதன் தாது ஆடுவதற்கு ஏற்றதாகவும், மாது அபிநயத்திற்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கும். பதவர்ணங்கள் பெரும்பாலும் ரூபக தாளத்திலும் அமைந்துள்ளன. பதவர்ணங்களை சௌக்க வர்ணமென்றும், ஆடவர்ணமென்றும் அழைப்பதுண்டு. ஜதிகள் உள்ள பதவர்ணங்களும் உள்ளன. அவை பதஜதி வர்ணங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இராகமாலிகா வர்ணங்களில் அங்கங்கள் வெவ்வேறு இராகங்களில் அமைந்திருக்கும். நவராகமாலிகா வர்ணமும், கனராகமாலிகா வர்ணமும், தினராகமாலிகா வர்ணமும் பிரசித்தமான உருப்படிகளாகும். தானவர்ண முறையில் அமைந்துள்ள இராகமாலிகா வர்ணங்களும் உள்ளன.

தானவர்ணங்களை இயற்றிய சில மஹான்கள் பச்சிமிரியம் ஆதியப்பய்யர், சியாமா சாஸ்திரிகள், பல்லவி போபாலய்யர். ஸ்வாதித்திருநாள்மஹாராஜா, வீணைகுப்பய்யர், டைகர்வரதாச்சாரியார், இராமநாதபுரம்ஸ்ரீனிவாஸஐயங்கார்.

பதவர்ணங்களை இயற்றிய சில மஹான்கள் - இராமஸ்வாமிதீஷீதர், முத்துஸ்வாமி தீஷிதர், பல்லவிசேஷய்யர், தஞ்சாவூர்வடிவேல்நட்டுவானார், இராமசிவன்.

**தேர்ச்சி** : 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம்பரிய பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 இந்தியாவின் கர்நாடக இசையின் தோற்றம் வளர்ச்சி தொடர்பான விடயங்களை ஆராய்வார்.

**செயற்பாடு** : 5.1.2 இந்தியாவின் 14 ஆம், 15ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- இந்தியாவின் 14ஆம், 15ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி தொடர்பான விளக்கப்படங்கள்.
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- 14ஆம் நூற்றாண்டில் இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட பிரிவுகள் பற்றிக் குறிப்பிடுவார்.
- 15ஆம் நூற்றாண்டில் தாளபாக்கம் சின்னையாவும் அவரது முன்னோர்கள் இயற்றிய தெலுங்கு மொழிக் கீர்த்தனைகள், பஜனைப் பத்ததி போன்றவற்றைக் குறிப்பிடுவார்.
- இதே நூற்றாண்டில் தாளபாக்கம் அன்னமாச்சாரியாரின் காலத்தில் பல்லவி, சரணம் என்னும் அங்கவித்தியாசங்கள் ஏற்பட்டது என்பதை அறிந்து கூறுவார்.
  புரந்தரதாஸரின் காலத்திலும் அனுபல்லவி என்னும் அங்கம் கிருதிகளில் காணப்பட்டது என்பதை குறிப்பிடுவார்.
- 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் மொழியில் திருப்புகழ் பாடல்களை இயற்றிய அருணகிரிநாதர் பற்றி எடுத்துக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 5.1.2.1 :**

- இசையின் வளர்ச்சி பற்றி விளக்கப் படங்களைக் காட்டிக் கலந்துரை யாடல் மூலம் கேட்டறிதல்.
  (பெரியார்களின் படங்கள், வரலாற்றுப் பின்னணி)
- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரை யாடலை நிகழ்த்துதல்.
  - கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் என்னும் பிரிவுகள் ஏற்பட்டவை.
  - அப்பிரிவுகளுக்கான காரணங்கள்
  - தாளபாக்கம் சின்னையா, தாளபாக்கம் அன்னமாச்சாரியார், புரந்தரதாஸர் ஆகியோரின் பங்களிப்பு
  - திருப்புகழ் பாடல்கள் இயற்றப்பட்டமை
  - தாளங்களின் அமைப்பு பற்றி அருணகிரிநாதரின் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

**படி 5.1.2.2 :**

- சகல மாணவர்களுக்கும் செயற்பத்திரங்களை வழங்குதல்.
- செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானித்து முழுமைப்படுத்துதல்.

**படி 5.1.2.3 :**

- மாணவர் செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய மாணவர்களையும் அவதானித்துக் கருத்துக்கள் கூற

இடமளித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. 14 ஆம் நூற்றாண்டில் இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட பிரிவுகளையும், பிரிவு ஏற்பட்டமைக்கான காரணத்தையும் கூறுவார்.
2. 15ஆம் நூற்றாண்டில் தாளபாக்கம் அன்னமாச்சாரியாரும், தாளபாக்கம் சின்னையா, புரந்தரதாஸர் ஆகியோர் கர்நாடக இசைக்காற்றிய பங்களிப்பினைக் குறிப்பிடுவார்.
3. அருணகிரிநாதரின் இசைப் பணி பற்றி குறிப்பிடுவார்.
4. இவற்றின் மூலம் 14ஆம் 15ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி பற்றிய அறிவினை வெளிப்படுத்துவார்.

**செயற்பத்திரம் -**

- இந்திய சங்கீதத்தின் 14 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரு பிரிவுகள் எவை?
- இப்பிரிவுகள் பற்றி கூறும் நூல் யாது?.
- இப்பிரிவுகள் ஏற்பட்டமைக்கான காரணம் யாது?
- பின்வருவோர் கர்நாடக சங்கீதத்திற்கு ஆற்றிய பங்களிப்பினைக் குறிப்பிடுக.
    - தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார்
    - தாளப்பாக்கம் சின்னையா
    - புரந்தரதாஸர்
    - அருணகிரிநாதர்
- "வாக்கிற்கு அருணகிரி" "சந்தப் பாவலர்" என்னும் பெயர்களால் அருணகிரிநாதர் அழைக்கப்படுகின்றமைக்கான காரணத்தைக் கூறுக.

## இந்தியாவின் 14ஆம், 15ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி

14ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹரிபாலர் என்பவரால் எழுதப்பட்ட "சங்கீதஸுதாகரம்" என்னும் நூலில் தான் முதன் முறையாக இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட இரு பிரிவுகள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றது. அவை-

1. கர்நாடக சங்கீதம்
2. ஹிந்துஸ்தானி சங்கீதம்

ஆனால் அதற்கு முன்னர் இந்தியா முழுவதிலும் ஒரே சங்கீதமே வழக்கத்திலிருந்தது. 14ஆம் நூற்றாண்டில் வடக்கில் முஸ்லிம் மன்னர்களின் ஆதிக்கம் இருந்த காலத்தில் பாரசீகம், அரேபியா போன்ற நாடுகளில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்ததன் காரணமாக வடஇந்தியாவில் ஏற்கெனவே இருந்து வந்த சங்கீத முறை மாறுதல் பெற்றது. ஆயினும் தென்இந்தியாவில் பூர்வீகமான முறையே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தது. எனவே அயல்நாட்டு முறை கலந்த வட இந்திய சங்கீதம் ஹிந்துஸ்தானி சங்கீதம் எனவும் பூர்வீக பத்ததியினையே தொடர்ந்து பேணப்பட்ட தென்னிந்திய சங்கீதம் கர்நாடக சங்கீதம் எனவும் வழங்கலாயிற்று.

கி.பி 15 ஆம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் சின்னையாவும் அவரது முன்னோர்களும் தெலுங்கு மொழியில் சுமார் 20,000 கீர்த்தனைகளும், வேறும் பல உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகளும் இயற்றிப் பஜனைப் பத்ததிக்கு வழிவகுத்தனர். தாளப்பாக்கம் சின்னையா பஜனைப் பத்ததியின் தந்தையாவார். தாளப்பாக்கம் அன்னமாச்சாரியாரின் (1408 - 1503) அத்யாத்ம சங்கீர்த்தனங்களில் முதன் முதலில் பல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களைக் காண்கிறோம். இவருடைய பேரனாகிய தாளப்பாக்கம் சின்னையாவின்

கிருதிகளிலும் பின்னர் புரந்தரதாஸரின் கிருதிகளிலும் அனுபல்லவி என்னும் அங்கத்தையும் முதன்முதலில் காண்கிறோம். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் பெயர்கள் வருவதற்கு முன்னர் பிரபந்தங்களின் அங்கங்களுக்கு உத்க்ருஹம், த்ருவம், மேளாபகம், ஆபோகம் என்னும் பெயர்கள் வழக்கில் இருந்தன.

அருணகிரிநாதர் சந்தங்களை அமைத்துத் தமிழ் மொழியில் ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடல்களை இயற்றினார். திருப்புகழ் பாடல்கள் சாதாரண தாளங்களிலும், அபூர்வ தாளங்களிலும் பல்வேறு நடைகளிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவை சந்தக் கனிவும், ஓசைச் சிறப்பும் அமையப்பெற்ற உறுதி பயக்கும் பண்பு வாய்ந்தவையாக இருப்பதால் "வாக்கிற்கு அருணகிரிநாதர்" என்று அவர் பாராட்டப்படுகிறார்.

அதிகம் வழக்கில் இல்லாத அநேக தாளங்களைப் பயன்படுத்தியமையால் சந்தப் பாவலர் பெருமான் எனப் போற்றப்படுபவர் அருணகிரிநாதர் ஆவார். 35 தாளம், 175 தாளம், 108 தாளம் ஆகிய தாளங்களின் அமைப்புக்கள் எல்லாவற்றையும் இவரது பாடல்களிலே காணலாம். ஒவ்வொரு பாடலுக்கும் முன்னால் அதற்குரிய நடையும், தாள அமைப்பும் குறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்திய சங்கீதத்தில் உள்ள பல தாளங்கள் அழிந்து போகாமல், திருப்புகழ் மூலம் பாதுகாத்த சிறப்பு அருணகிரிநாதருக்கே உரியது.

## 3ம் தவணை (இரசித்தல்)

**தேர்ச்சி** : 1.0 இசை நிகழ்ச்சிகளை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.3 வில்லுப்பாட்டு இசையை இரசிப்பார்.

**செயற்பாடு** : 1.3.1 வில்லுப்பாட்டு இசையின் தனித்துவமான அம்சங்களை அவதானித்து இரசனையை வெளிப்படுத்துவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சி அடங்கிய ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக்கருவி
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றினைப் பார்த்தும் கேட்டும் இரசனையை வெளிப் படுத்துவார்.
- பயன்படுத்தப்படும் வாத்தியங்களின் ஒத்திசைவு பற்றிக் குறிப்பிடுவார்.
- பங்குபற்றுனரின் திறம் வெளிப்படும் ஆற்றலை எடுத்துக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 1.3.1.1 :**

- மாணவர்கள் பார்த்தும் கேட்டும் இரசித்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சி யினைப் பற்றிக் கேட்டறிந்து கலந்துரையாடுதல்.
- ஒளிப்பதிவு நாடாவில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியினை போட்டுக் காட்டி அதனை அவதானிக்கச் செய்து வில்லிசை நிகழ்வின் அங்கத்தவர்களையும், பயன்படுத்தும் வாத்தியங்கள் பற்றியும் விளக்குதல்.

**படி 1.3.1.2 :**

- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரை யாடலை நிகழ்த்துதல்.
  - வில்லின் நீளம்
  - அங்கத்தவர்கள்
  - பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்
  - கதை / கருத்து
  - நகைச்சுவை
- செயற்பத்திரத்தை வழங்குதல்

**படி 1.3.1.3 :**

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றினை நிகழ்த்தித் தனித்துவமான அம்சங் களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குதல்.
- விடுபட்ட விடங்களை விபரித்து மீள வலியுறுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியினை இரசிப்பார்.
2. வில்லுப்பாட்டில் இடம்பெறும் வாத்தியங்களைக் கூறுவார்.
3. அங்கத்தவர்களின் திறனை வெளிப்படுத்துவார்.

**செயற்பத்திரம் -**

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சியினை பார்த்து இரசித்த விடயங்களை பட்டியற்படுத்துக.

**தேர்ச்சி** : 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 2.3 ஸ்வர சஞ்சாரங்களை சங்கராபரண இராகத்தில் ஆக்கம் செய்து பாடுவார்.

**செயற்பாடு** : 2.3.1 சங்கராபரண இராக ஸ்வரஸ்தானத்தில் ஸட்ஜ, ரிஷப. காந்தார மத்திம ஸ்வரக் கோர்வைகளை ஆக்கம் செய்து பாடுவோம்.

**பாடவேளைகள் :** 03

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஸ்வர சஞ்சாரங்கள் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்**

- மாணவர்கள் சங்கராபரண இராகத்தில் ஸ்வரசஞ்சாரங்களை ஆக்கம் செய்து பாடிப்பயிற்சி பெறுவதன் மூலம் ஆக்கத்திறனையும் பாடும் திறனையும் பெறுவார்.
- இதன் மூலம் வெவ்வேறு இராகங்களிலும் சஞ்சாரங்களை ஆக்கம் செய்து பாடும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 2.3.1.1 :**
- மாணவர்கள் ஏற்கெனவே கற்ற சங்கராபரணப் பாடல்களைக் கேட்டறிதல்.

**படி 2.3.1.2 :**
- சங்கராபரண இராகத்தின் ஆரோகண அவரோகணத்தை பாடிக் காட்டுதல்.
- ஏகம், ஆதி, ரூபகம் ஆகிய தாளங்களில் குறில், நெடில் ஸ்வரங்களில் சஞ்சாரங்களைப் பாடிக்காட்டல்.
- செயற்பத்திரத்தை வழங்குதல்

**படி 2.3.1.2 :**
- மாணவர்கள் சங்கராபரண இராகத்தில் ஸ, ரி, க, ம ஸ்வரங்களை வைத்து சஞ்சாரங்களை ஆதி, ஏகம், ரூபகம் ஆகிய தாளங்களில் ஆக்கிப் பாட சந்தர்ப்பம் வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. மாணவர் சங்கராபரண இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக் காட்டுவார்.
2. சங்கராபரண ஸ்வரங்களை வைத்து ஆக்கம் செய்வார்.
3. ஆதி, ரூபகம், ஏகம் ஆகிய தாளங்களில் குறில், நெடில் ஸ்வரங்களில் சஞ்சாரங்களை ஆக்கம் செய்து பாடுவார்.

**செயற்பத்திரம் -**

சகல குழுக்களுக்கும் வழங்குக.

- ஆக்கம் செய்த ஸ்வரக்கோர்வைகளை ஏக, ஆதி, ரூபக தாளங்களில் பாடிக் காட்டுக.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் :** 3.2 இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** 3.2.2 "உள்ளமிரங்கி" என்னும் கீர்த்தனையைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.

**பாடவேளைகள் :** 05

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஒலிப்பதிவுக் கருவி
- ஒலிப்பதிவு நாடா
- கீர்த்தனை எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்**

- "உள்ளமிரங்கி" என்னும் கீர்த்தனையின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுவார்.
- கீர்த்தனை மத்திம காலத்தில் அமைந்துள்ளது எனக் கூறுவார்.
- கீர்த்தனையில் ஆரோகண அவரோகணத்தைப் பாடுவார்.
- கீர்த்தனையின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுவார்.
- கீர்த்தனையை சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.2.2.1 :**

- முன்னர் மாணவர் கற்றுக்கொண்ட கீர்த்தனைகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- "உள்ளமிரங்கி" என்னும் கீர்த்தனை எழுதப்பட்ட பாடல் அட்டையைக் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்களை விளக்குதல்.
    - கீர்த்தனையின் இராகம் - ஹம்ஸத்வனி
    - கீர்த்தனையின் தாளம் - ஆதி
    - இயற்றியவர் - பாபநாசம் சிவன்
    - ஆரோகணம் - ஸரிகபநிஸ்
    - அவரோகணம் - ஸ்நிபகரிஸ
- ஹம்சத்வனி இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடிக் காட்டி மாணவரைப் பாடச் செய்தல்.
- கீர்த்தனையைப் பகுதி பகுதியாகப் பாட, தொடர்ந்து மாணவர் பாடுதல்.
- மாணவருடன் சேர்ந்து தாளத்துடன் பாடுதல்.
- மாணவருடன் சேர்ந்து சுருதி, இராக தாளத்துடன் பலதடவைகள் பாடுதல்.

**படி 3.2.2.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்கிச் செயற்பட அறிவுறுத்தலை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானித்து வழுக்களை நிவர்த்தி செய்தல்.

**படி 3.2.2.3 :**

- ஒவ்வொரு குழுவும் கீர்த்தனையைப் பாடச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ஏனைய குழுக்கள் கருத்துக் கூற இடமளித்தல்.
- சுருதி, இராக, தாளம், ஸ்வரஸ்தானம் வழுவிப் பாடியவர்களுக்கு

மீண்டும் பயிற்சி வழங்குதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

1. "உள்ளமிரங்கி" என்னும் கீர்த்தனை ஹம்ஸத்வனி இராகத்தில் ஆதி தாளத்தில் இயற்றப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுவார்.
2. இக்கீர்த்தனையை இயற்றியவர் பாபநாசம்சிவன் எனக் குறிப்பிடுவார்.
3. ஹம்சத்வனி இராகத்தின் ஆரோகண அவரோகணம் ஸரிகபநிஸ் ஸ்நிபகரிஸ எனக் கூறிப் பாடிக்காட்டுவார்.
4. கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

## செயற்பத்திரம்

சகல குழுவினருக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக

- "உள்ளமிரங்கி" என்னும் கீர்த்தனையை இராக தாளத்துடன் பாடிப் பயிற்சி பெறுக.
- கீர்த்தனையைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுக.

## கீர்த்தனை

"உள்ளமிரங்கி"

இராகம் - ஹம்சத்வனி    ஆரோஹணம் : ஸரிகபநிஸ் } 29 இன் ஜன்யம்
தாளம் - ஆதி    அவரோஹணம் : ஸ்நிபகரிஸ }
இயற்றியவர் : பாபநாசம்சிவன்

பல்லவி

உள்ளமிரங்கி வந்தருள் புரிவாயே உன் பதமல தொரு - கதியில்லை அறிவாயே (உள்ள)

அனுபல்லவி

கள்ளம் நிறை நெஞ்சன் நானே ஆனாலும் கண்ணீர் சொரிந்துன்றன் கழலினைப்
பணிந்தேனே
(உள்ள)

சரணம்

தப ஜப யோகம் செய் ஸத்குண சீலர்க்கு தயை புரிவதில் உனக்கென்ன பெருமை
அபராதி எனையாள மனமிலா உனக்கு அழகிற்கோ பன்னிரு கரமும் வேலும் அயிலும்
(உள்ள)

## பல்லவி

; பஸ்ா நி பா ப க நி ப க ரி ஸா| ; ஸ ரீ க ரி க | ப ா ; ப ா ; ‖
உள் .ள மி - ர ங் - கி - வ ந்| . த ருள் பு . ரி | வ ா . யே . ‖

; ப க ா ப நீ ஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா |; ஸ் ரீ நி ஸ்ா | ப நி க ா பா ; ‖
உ ன் ; ப த ம - ல - தொ . ரு |. க தி யி லை | அ றி வ ா. யே . ‖

ப நி ரி நி ரி நி பா க ப ஸ் நி ப க ரி ஸ|; ஸரீ க ரி க |ப நி ஸ் நி பா; ‖
உ ள் . . ள மி ர ங் . கி . வ ந் |. த ரு ள்பு ரி |வா . . . யே ‖

; நி ப கா, ப நீ ஸ்ரி க்ரி ஸ் நி ஸ்ா |; ஸ்நீ ப கா | ரி கா பா, நி ‖
உ ன் . ப த ம ல- து . ரு |. க தி யி லை| அ றி வா யே‖

## அனுபல்லவி

; நி பா நி நீ - ஸ்ா , ஸ்ா, - நீ | ; ஸ், ரீ ஸ்ா , | நி ரி ஸ் நி ப ா நீ|
க ள் ளம் நி றை நெஞ் - சன் | நா னே | ஆ . . னா . . லும்|

; ப நி ஸ் நி ப நி ஸ்ா, ஸ்ா ,ரீ |; ரி க்ா ரிஸ்ஸ் | ஸ் க் ரி ஸ் நி ப நீ |
க ள் ள ம் நி றை நெஞ் சன்| நா னே - | ஆ . . . னா லும் |

; ப நீ ப நீ - ஸ் ா நீ பா பா |; க நி ப - க ரீ | ஸ் ரீ க பா நீ |
க ண் ணீர் சொ ரிந் துன் றன் |. க ழ . லி னை| ப ணிந் தே . னே |

; ஸ் ரீ க் ரீ ஸ்ா - நி ரி ஸ் நி பா நீ |; ப நி ரி நி பா | ப க ரி க பா நீ|
. க ண் . ணீ ர் சொ . ரி ந் துன் றன்.| க ழ . லி னை | ப ணி ந் . தே னே|
(உள்ளம்)

## சரணம்

; ப பா ப பா ப கா பா, நீ| ; ப ஸ்ா நி பா | ப க நி ப க ரி கா |
. த ப ஜ ப யோ . கஞ் .செய் |. ஸ த் கு ண- | சீ . . . ல ர் க்கு|

; ஸ் நீ ப பா ப க நி ப க ரி ஸா| ; ஸ ரீ க ரி க | பா ; பா ; |
த் யை பு ரி வ . தி . . லு னக்| . கெ ன் ன பெ .| ரு மை |

; ப நி ப க ரி க ப க ா பா , நீ |; நி ரி ஸ் நி பா| ஸ் ஸ் நி ப க ரி கா |
த ப . ஜ ப . . யோ கஞ் செய்| ஸ . த் கு ண சீ | . . லர் . . க்கு|

; ப நி ஸ்நிபா க நி நி ப க ரி ஸா| ... ... | ... ... |
த யை . பு ரி வ . . தில் உ . னக் | ... ... | ... ... |

ஸ் நீ பா ,˙ நீ ஸ் ஸ்ா ஸ்ா ஸ் ா| ; ஸ் ரீ ஸ் ஸ்ா |; நி பா நீ , |
அ ப ரா . தி எ னை யா ள | . ம ன மி லா | .உ னக் கு|

நி ரி ஸ் ஸ் நி ப நீ ஸ் ஸ்ா ஸ்ா, ரீ| ; ஸ் ரி க் ரி ஸ் ஸ் |; நி பா நீ , |
அ ப . ரா . . தி எ னை யா ள| . ம ன . மி ல ா | . உ னக் கு. |

; நி ரீ ஸ் பா ; ப நீ ப நீ | ஸ் நீ பா , கா | ரீ , க பா நீ|
அ ழ கிற் கோ ப ன் னி ரு | க ர மும் வே | லும் . அ யி லும்|

; நி க் ரி நி பா ; ஸ் நீ ப நீ | நி ரி ஸ் பா, நி ப |க ரீ க பா நீ |
அ ழ கி ற் கோ ப ன் னி ரு | க ர .. மும் வே ./ லு ம் அ யி லும்|

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.1 அப்பியாசகான உருப்படிகளை செய்வார்.

**செயற்பாடு** : 3.1.3 "முருகா" என்ற மத்தியமாவதி இராக ஆதிதாள தானவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை பாடுவோம்.

**பாடவேளைகள் :** 05

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- வர்ணம் ஸ்வரசாகித்தியமாக எழுதப்பட்ட அட்டை
- மத்தியமாவதி இராக ஸ்வரஸ்தான வரைபடம்

**கற்றற் பேறுகள்**

- வர்ணம் அப்பியாசகானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி என கூறுவார்.
- மத்தியமாவதி இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை கூறுவார்.
- மத்தியமாவதி இராக உருப்படிகளை ஸ்வரசாகித்தியமாகக் கற்பதனால் இராக பாவத்துடன் பாடும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.1.3.1 :**

- மத்தியமாவதி இராக வர்ணத்தின் முன்னர் கற்ற பூர்வாங்கம் பற்றி கலந்துரையாடி மத்தியமாவதி வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை முழுமையாக பாடிக்காட்டுதல்.
- வர்ணத்தின் உத்தராங்கப் பகுதி எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப் படுத்தல்.
- வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியின் அமைப்பை விளக்கி அங்கங் களையும் கூறுதல்.
- மத்யமாவதி இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடிக் காட்டுதல்.
- வர்ணத்தின் உத்தராங்கப்பகுதியில் சரணப்பகுதியை ஸ்வர சாகித்திய மாகப், பகுதி பகுதியாக கற்பித்தல்.
- மாணவர்கள் அதனைச் செவிமடுத்துப் பாட வழிப்படுத்துதல்.
- சரண ஸ்வரங்களை பகுதி பகுதியாகக் கற்பித்தல்.
- உத்தராங்க பகுதியில் சரணம், சரணஸ்வரங்களையும் தாளத்துடன் பாட வழிப்படுத்தல்.
  உத்தராங்கப் பகுதியில் சரணம், சரணஸ்வரங்களை இரு காலங் களிலும் பாட வழிப்படுத்தல்.
- மாணவர்களுடன் சேர்ந்து உத்தராங்கப் பகுதியை இராக தாளத் துடன் பாடுதல்.

**படி 3.1.3.2 :**

- மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்து உத்தராங்கப் பகுதியை ஸ்வர சாகித்தியமாகப் பாட வழிப்படுத்துதல்.
- ஒவ்வொரு குழுவும் திறம்படச் செயற்படுகின்றனர் என்பதை உறுதி செய்து நெறிப்படுத்துதல்.

**படி 3.1.3.3 :**

- குழுக்களின் கருத்துப் பரிமாற்றத்திற்கு இடமளித்தல்.
- குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. வர்ணத்தின் இராக தாளத்தைக் கூறுவார்.
2. வர்ணத்தின் அங்க அடையாளங்களைக் கூறுவார்.
3. வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இரண்டு காலங்களிலும் பாடுவார்.
4. வர்ணத்தின் உத்தராங்க பகுதியை ஸ்வர சாகித்திய அங்க அடையாளங்களுடன் எழுதுவார்.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.5 திருப்பல்லாண்டினை பண்முறைக்கேற்ப பாடுவார்.

**செயற்பாடு** : 3.5.1 திருப்பல்லாண்டினைப் பண்முறைக்கேற்ப சுத்தாங்கமாகப் பாடுவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- திருப்பல்லாண்டு எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்**

- பஞ்சபுராணத்தில் திருவிசைப்பாவிற்குப் பின்பாடப்படுவது திருப்பல்லாண்டு என்பதைக் கூறுவார்.
- சிதம்பரத்தில் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடத், தேர் நகர்ந்தது என்பதைக் குறிப்பிடுவார்.
- திருப்பல்லாண்டை ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாக பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.5.1.1 :**
- பஞ்சபுராணம் பாடும் ஒழுங்கினை மாணவர்களிடம் கலந்துரையாடி திருவிசைப்பாவிற்குப் பின் பாடப்படும் சுத்தாங்கப் பாடல் திருப்பல்லாண்டு எனக் கூறிப் பாடிக்காட்டுதல்.

**படி 3.5.1.2 :**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுதல்.
- சேந்தனாரால் மட்டும் பாடப்பட்ட பாடல் திருப்பல்லாண்டு என்பதை விளக்குதல்.
- ஆனந்தபைரவி இராகத்தில் உச்சரிப்புத் தெளிவுடன் பாட வழிப்படுத்துதல்.
- திருப்பல்லாண்டு எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்திப் பகுதி பகுதியாகச் சொல்லிக் கொடுத்தல்.
- ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாட வழிப்படுத்தல்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுதல்.

**படி 3.5.1.3 :**
- மீண்டும் இராகத்துடன் சுந்தாங்கமாகப்பாடி மீளவலியுறுத்தல்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. திருப்பல்லாண்டை அருளியவர் பெயரைக் கூறுவார்.
2. அதன் இராகத்தினைக் கூறுவார்.
3. திருப்பல்லாண்டை ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடுவார்.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.6 சேக்கிழார் சுவாமிகளால் அருளப்பட்ட விரும்பிய ஒரு திருப்புராணத்தைச் சுத்தாங்கமாக பண்முறைக்கேற்ப பாடுவார்.

**செயற்பாடு** : 3.6.1 திருப்புராணத்தைப் பண்முறைக்கேற்ப மத்தியமாவதி இராகத்தில் பாடுவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- திருப்புராணம் எழுதிய அட்டை

**கற்றற்பேறுகள்**

- மத்தியமாவதி இராகத்தில் விருத்தமாகத் திருப்புராணத்தைப் பாடுவார்.
- திருப்புராணத்தைக் உச்சரிப்புத் தெளிவுடன் வாசிப்பார்.
- பஞ்சபுராணம் பாடும்போது இறுதியாகப் பாடப்படுவது திருப்புராணம் எனக் குறிப்பிடுவார்.
- திருப்புராணம் பக்தி உணர்வை வெளிபப்டுத்தும் பாடல் எனக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.6.1.1 :**

- திருப்புராணத்தை காட்சிப்படுத்தி உச்சரிப்புத் தெளிவுடன் வாசிக்கச் செய்தல்.
- பஞ்சபுராணத்தில் இறுதியாகப் பாடப்படுவது திருப்புராணம் எனக் கூறுல்.
- மத்தியமாவதி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்பட வேண்டும் என்பதை கூறிப் பாடிக் காட்டுதல்.

**படி 3.6.1.2 :**

- திருப்புராணம் சேக்கிழாரால் அருளப்பட்டது எனக் கூறுதல்.
- பகுதி பகுதியாகச் சொல்லிக் கொடுத்தல்.
- மத்தியமாவதி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாட வழிப்படுத்தல்.

**படி 3.6.1.3 :**

- திருப்புராணத்தை மத்தியமாவதி இராகத்தில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. திருப்புராணத்தை அருளியவர் பெயரைக் கூறுவார்.
2. திருப்புராணம் பாடப்படும் இராகத்தினைக் கூறுவார்.
3. மத்தியமாவதி இராகத்தில் பண்முறைக்கமைய சுத்தாங்கமாகப் பாடுவார்.

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** : 4.1.3 ஷடங்கம் 35 தாளம் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 03

**தர உள்ளீடுகள் :**

- ஷடங்கம்
- 35 தாளம் எழுதிய அட்டை
- செயற்பத்திரம்
- இணைப்பு

**கற்றற் பேறுகள்**

- ஷடங்கங்களை தெரிந்து கொள்வார்.
- 5 ஜாதிகள், 7 தாளங்கள் மூலம் 35 தாளங்கள் உருவாகின்றன என்பதை விளக்குவார்.
- 35 தாளங்களையும் இனங்காணும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.1.3.1 :**
- முன்னர் கற்ற 5 ஜாதிகள், 7 தாளங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைத் தமக்குத் தெரிந்த தாளங்களைப் போடுமாறு கேட்டல்.

**படி 4.1.3.2 :**
- எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர்களைப் பார்வையிட வைத்து, ஒரு தாளம், 5 ஜாதிகள் உடன் சேரும் போது 5 தாளங்கள் உருவாகின்றன என்பதை விளக்குதல்.
- இவ்வாறு 7 தாளங்களும், 5 ஜாதிகளுடன் சேரும் போது, 35 தாளங்கள் உருவாகுவதை அட்டவணை மூலம் விளக்குதல்.
- ஷடங்கத்தில் வரும் 6 அங்கங்களையும் அவற்றின் குறியீடுகளையும் விளக்குதல்.

**படி 4.1.3.3 :**
- ஷடங்கம், 35 தாளம் பற்றி மீளவும் வலியுறுத்தி முழுமைப்படுத்தல்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. ஷடங்கங்களைக் கூறுவார்.
2. ஐந்து ஜாதிகளையும் அவற்றின் அட்சரங்களையும் கூறுவார்.
3. சப்த தாளங்களை வரிசைப்படுத்துவார்.
4. லகு ஜாதி பேதமடையும் அங்கம் என்பதைக் குறிப்பிடுவார்.
5. லகுவில் ஜாதி பேதத்தினால் 35 தாளங்கள் உருவாகும் முறையை விளக்குவார்.

**செயற்பத்திரம்**

சகல குழுவினருக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குதல்.


- ஷடங்கங்களை குறியீட்டுடன் விளக்குதல்.
- சப்த தாளங்களையும் அவற்றின் அங்க அடையாளங்களையும் குறிப்பிடுதல்.
- லகுவின் 5 ஜாதிகளையும் குறிப்பிடுதல்.
- 35 தாளங்கள் உருவாகும் முறையை விளக்குதல்.

# முப்பத்தைந்து தாள விளக்கம்

திரியாங்கங்கள் ஆகிய அனுத்ருதம், த்ருதம், லகு என்பவற்றில் ஜாதி பேதமடையும் அங்கம் லகுவாகும், லகுவானது திஸ்ரஜாதி, சதுஸ்ரஜாதி, கண்டஜாதி, மிஸ்ரஜாதி, சங்கீர்ணஜாதி என்னும் ஐந்து ஜாதிகளை உடையது. ஸப்த தாளங்கள் ஏழும் லகுவின் 5 ஜாதி பேதங்களினால் தாளங்கள் 7 X5= 35 ஆகின்றன.

உதாரணமாக :- துருவதாளத்தை எடுத்துக் கொண்டால் அது -

1. திஸ்ரஜாதி துருவதாளம்
2. சதுஸ்ரஜாதி துருவதாளம்
3. கண்டஜாதி துருவதாளம்
4. மிஸ்ரஜாதி துருவதாளம்
5. சங்கீர்ணஜாதி துருவதாளம் என விரிவடையும்




இவ்வாறே மட்டியதாளமும், ரூபதாளமும், ஜம்பை தாளமும், திரிபுடை தாளமும், அடதாளமும், ஏகதாளமும் விரிவடைகின்றன. லகுவிற்கு மட்டுமே ஜாதி பேதங்கள் உண்டு. துருதத்திற்கும் அனுத்ருதத்திற்கும் பேதம் கிடையாது.

சப்த தாளங்களும் லகுவின் ஜாதி பேதங்களினால் 35 தாளங்களாக உருவாகின்றன.

| ஜாதிகள் | அங்கம் | மொத்த அட்சரங்கள் |
|---|---|---|
| துருவதாளம் | 1 0 1 1 | |
| 01.திஸ்ரஜாதி துருவதாளம் | $1_3$ 0 $1_3$ $1_3$ | 3 + 2 + 3+ 3 = 11 |
| 02.சதுஸ்ரஜாதி துருவதாளம் | $1_4$ 0 $1_4$ $1_4$ | 4 + 2 + 4+ 4 = 14 |
| 03.கண்டஜாதி துருவதாளம் | $1_5$ 0 $1_5$ $1_5$ | 5 + 2 + 5+ 5 = 17 |
| 04.மிஸ்ரஜாதி துருவதாளம் | $1_7$ 0 $1_7$ $1_7$ | 7 + 2 + 7+ 7 = 23 |
| 05.சங்கீர்ணஜாதி துருவதாளம் | $1_9$ 0 $1_9$ $1_9$ | 9 + 2 + 9+ 9 = 29 |
| மட்டியதாளம் | 1 0 1 | |
| 06.திஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_3$ 0 $1_3$ | 3 + 2 + 3 = 08 |
| 07.சதுஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_4$ 0 $1_4$ | 4+ 2 + 4 = 10 |
| 08.கண்டஜாதி மட்டியதாளம் | $1_5$ 0 $1_5$ | 5+ 2 + 5 = 12 |
| 09.மிஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_7$ 0 $1_7$ | 7 + 2 + 7 = 16 |
| 10.சங்கீர்ணஜாதி மட்டியதாளம் | $1_9$ 0 $1_9$ | 9 + 2 + 9 = 20 |
| ரூபக தாளம் | 0 1 | |
| 11.திஸ்ரஜாதி ரூபக தாளம் | 0 $1_3$ | 2 + 3 = 05 |
| 12.சதுஸ்ரஜாதி ரூபக தாளம் | 0 $1_4$ | 2 + 4= 06 |
| 13.கண்டஜாதி ரூபக தாளம் | 0 $1_5$ | 2 + 5 = 07 |
| 14.மிஸ்ரஜாதி ரூபக தாளம் | 0 $1_7$ | 2 + 7 = 09 |
| 15.சங்கீர்ணஜாதி ரூபக தாளம் | 0 $1_9$ | 2 + 9 = 11 |
| ஜம்பை தாளம் | 1 U 0 | |
| 16.திஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_3$ U 0 | 3+ 1 + 2 = 06 |
| 17.சதுஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_4$ U 0 | 4 + 1+ 2 = 07 |
| 18.கண்டஜாதி ஜம்பை தாளம் | $1_5$ U 0 | 5 + 1 + 2 = 08 |
| 19.மிஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_7$ U 0 | 7 + 1 + 2= 10 |
| 20.சங்கீர்ணஜாதி ஜம்பை தாளம் | $1_9$ U 0 | 9 + 1 + 2= 12 |
| திரிபுடை தாளம் | 1 0 0 | |
| 21.திஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_3$ 0 0 | 3 + 2 + 2 = 07 |
| 22.சதுஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_4$ 0 0 | 4 + 2 + 2 = 08 |
| 23.கண்டஜாதி திரிபுடை தாளம் | $1_5$ 0 0 | 5 + 2 + 2 = 09 |
| 24.மிஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_7$ 0 0 | 7 + 2 + 2 = 11 |
| 25.சங்கீர்ணஜாதி திரிபுடை தாளம் | $1_9$ 0 0 | 9 + 2 + 2 = 13 |

| | | |
|---|---|---|
| அட தாளம் | 1 1 0 0 | |
| 26.திஸ்ரஜாதி அட தாளம்<br>27.சதுஸ்ரஜாதி அட தாளம்<br>28.கண்டஜாதி அட தாளம்<br>29.மிஸ்ரஜாதி அட தாளம்<br>30.சங்கீர்ணஜாதி அட தாளம் | $1_3$ $1_3$ 0 0<br>$1_4$ $1_4$ 0 0<br>$1_5$ $1_5$ 0 0<br>$1_7$ $1_7$ 0 0<br>$1_9$ $1_9$ 0 0 | 3 +3 + 2+ 2 = 10<br>4+ 4 + 2+ 2 = 12<br>5 + 5 + 2+ 2 = 14<br>7 + 7 + 2+ 2 = 18<br>9 + 9 + 2+ 2 = 22 |
| ஏக தாளம் | 1 | |
| 31.திஸ்ரஜாதி ஏக தாளம்<br>32.சதுஸ்ரஜாதி ஏக தாளம்<br>33.கண்டஜாதி ஏக தாளம்<br>34.மிஸ்ரஜாதி ஏக தாளம்<br>35.சங்கீர்ணஜாதி ஏக தாளம் | $1_3$<br>$1_4$<br>$1_5$<br>$1_7$<br>$1_9$ | = 03<br>= 04<br>= 05<br>= 07<br>= 09 |

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.2 இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு** : 4.2.4 மத்தியமாவதி இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- மத்தியமாவதி இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடம்
- ஸ்வரஸ்தான வரைபடம்
- சுருதிப்பெட்டி
- இராகலட்சணம் எழுதப்பட்ட பிரதி
- இணைப்பு
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- மத்தியமாவதி இராகத்தின் மேள எண், ஆரோகண அவரோகணம், ஸ்வரஸ்தானம் என்பவற்றைக் கூறுவார்.
- புராணம், மத்தியமாவதி இராகத்தில் பாடப்படும் என்பதை கூறுவார்.
- மத்தியமாவதி இராகத்தைப் பாடும் போது இனம்காண்பார். மத்தியமாவதி இராக உருப்படிகளையும் இனம்காண்பார்.
- மத்தியமாவதி இராக இலட்சணம் எழுதும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.2.4.1 :**

- எடுத்துக்கொண்ட இராகத்தில், கற்ற உருப்படிகளைப் பாடிக்காட்டி குறிப்பிட்ட இராகத்தினை இனம்காணச் செய்தல்.
- மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.

**படி 4.2.4.2 :**

- செவிமடுத்த விடயங்களை காட்சிப்படுத்தப்பட்ட வரைபடம் மூலம் விளக்குதல்.
- இராகத்தின் ஸ்வரஸ்தானங்களையும் அவதானிக்கச் செய்தல்.
- இனம்கண்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களை அறிவுறுத்துதல்.
- மத்தியமாவதி இராகத்தின் தாய் இராகம்
- இதன் ஆரோஹணம், அவரோஹணம்
- ஸ்வரஸ்தானங்கள்
- விசேட பிரயோகங்கள்
- செந்துருத்திப் பண் மத்தியமாவதி இராகம்
- புராணம் மத்தியமாவதி இராகத்தில் பாடப்படும்
- கச்சேரியின் இறுதியில் மத்யமாவதி பாடப்படும்
- செயற்பத்திரத்தை வழங்குதல்

**படி 4.2.4.3 :**

- மாணவர்கள் பேறுகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குதல்
- மத்தியமாவதி இராகத்தின் இலட்சணங்களை மீளவலியுறுத்தல்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. மத்தியமாவதி இராகத்தின் மேள எண், ஆரோஹண, அவரோஹணம், ஸ்வரஸ்தானங்களைக் கூறுவார்.
2. புராணம் மத்தியமாவதி இராகத்தில் பாடப்படும் என்பதை குறிப்பிடுவார்.
3. செந்துருத்தி பண் என்பது மத்தியமாவதி என்பதனைக் கூறுவார்.
4. மத்யமாவதி இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளைக் கூறுவார்.

**செயற்பத்திரம்**

சகலருக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக

- மத்யமாவதி இராகத்தின் இலட்சணத்தை, கீழ்வரும் அம்சங்களை உள்ளடக்கி எழுதுக.
    1) அதன் தாய் இராகம்
    2) ஆரோஹண அவரோஹணம்
    3) ஸ்வரஸ்தானங்கள்
    4) விசேஷ பிரயோகங்கள்
    5) பண்ணிசையில் வழங்கப்படும் பெயர்
    6) வேறு பண்புகள்
    7) உருப்படிகள்
    8) சஞ்சாரம்

**மத்தியமாவதி**

இது 22வது மேளமாகிய ஹரகரப்பிரியாவின் ஜன்னியமாகும். இதன்
ஆ:- ஸரிமபநிஸ்
அ:- ஸ்நிபமரிஸ
இதில் வரும் ஸ்வரஸ்தானங்களாக ஸட்ஜம், சதுஸ்ருதி, ரிஷபம், சுத்த மத்திமம், பஞ்சமம், கைசிகி நிஷாதம், இது ஓர் ஔடவ இராகம். உபாங்கராகம் வர்ஜ ராகமாகும். இதில் க,த வர்ஜ ஸ்வரங்களாகும்.
கமக வரிக ரக்தி ராகம்
ஜீவஸ்வரங்கள் - ரி, ம,ப, நி நிஸாசஸ்வரங்களாகும்.
கம்பித ஸ்வரங்கள் - ரி, நி
கிரக ஸ்வரங்கள் - ஸ, ரி, ம, ப, நி
புராதன ராகம், தேவாரப் பண்களில் செந்துருத்தி என்று பெயர் புராணம் தொன்று தொட்டு இவ்விராகத்திலே பாடப்படுகின்றது. கச்சேரியின் இறுதியில் இந்த இராகத்தில் பாடுவதாகும். இராகங்களால் ஏற்படும் தோஷங்கள் நிவர்த்தியாகின்றது. என்று பெரியோர்கள் கூறுவர். இது ஓர் சுத்த கர்நாடக இராகம். திரிஸ்தாயி இராகம். சுபகரமான இராகம். எப்பொழுதும் பாடலாம். மோகனத்தின் ரிஷப மூர்ச்சனையே மத்தியமாவதி இராகமாகும்.

சஞ்சாரம்

ரிமபநிபம - ரிமரிஸ - ஸரிமபநீநி - பநிஸ்ரிம்ரிஸ்ா
ஸ்நிபநிபம - ரிமபம - ரிமரிஸ

உருப்படிகள் :
தானவர்ணம் - ஸரகுணநர்னோ - ஆதி - திருவொற்றியூர் தியாகையர்

கிருதி- ஸரனுஸரனுனுசு - ஆதி - தியாராஜசுவாமிகள்
கிருதி - விநாயகுனிவால - ஆதி - தியாராஜசுவாமிகள்

கிருதி - வெங்கடேச நின்று - ஆதி - தியாராஜசுவாமிகள்

**தேர்ச்சி :** 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் :** 4.4 உருப்படிகளின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு :** 4.4.2 பதம் என்னும் இசை உருப்படியின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- சுருதிப்பெட்டி
- ஒலிப்பதிவுக் கருவி
- பதம் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடா
- செயற்பத்திரம்
- இணைப்பு

**கற்றற் பேறுகள்**

- பதம் என்ற உருப்படியின் இலட்சணத்தை அறிவார்.
- பதம் என்ற உருப்படியை இனங்காண்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.4.2.1 :**

- பதத்தினை ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்தல் அல்லது பாடிக்காட்டுதல்.
- செவிமடுப்பதன் மூலம் உருப்படியை மாணவர் இனங்காணச் செய்தல்.
- இனங்கண்ட விடயங்களில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுதல்.

**படி 4.4.2.2 :**

- அபிநயத்திற்காக நாயகன் நாயகி பாவமாக இயற்றப்பட்ட உருப் படிகளில் பதம் குறிப்பிடத்தக்கது.
- பதங்களில் வரும் நாயகன், நாயகி ஸகி என்னும் பாத்திரங் களின் வாயிலாகத் தத்துவ உண்மைகளை வெளிப்படுத்து கின்றன.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கவித்தியாசங்கள் கொண்டது.
- ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்களும் உண்டு. சரணங்கள் ஒரே தாதுவில் அமைந்திருக்கும்.
- அனுபல்லவியிலோ, கடைசிச் சரணத்திலோ இயற்றியவர் முத்திரை காணப்படும்.

- பதங்களை இயற்றிய வாக்கேயகாரர்
  உதாரணம்- க்ஷேத்ரக்ஞர், முத்துத்தாண்டவர் போன்றோர்.
- இவ்வுருப்படிக்கு உதாரணங்கள்
  வேலவரே - பைரவி
  தெருவில்வாரானோ - கமாஸ்
- தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் பதங்கள் இயற்றப்பட்டுள்ளன.
- செயற்பத்திரத்தை வழங்குதல்

**படி 4.4.2.3 :** • மாணவர்களின் பேறுகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குதல்
• பதத்தின் இலட்சணத்தை மீள வலியுறுத்தி முழுமைப்படுத்துதல்.

### கணிப்பீடும் மதிப்பீடும் :

1. பதம் என்னும் உருப்படியை இனங்காண்பார்.
2. இவ்வுருப்படியின் இலட்சணத்தை விளக்குவார்.
3. பதத்தின் சிறப்பையும் தனித்துவத்தையும் குறிப்பிடுவார்.
4. இவ்வுருப்படிகளுக்கு உதாரணங்கள் கூறுவார்.
5. பதம் இயற்றிய வாக்கேயகாரர்களைக் கூறுவார்.
6. வெவ்வேறு உருப்படிகளுள் பதம் என்ற உருப்படியை இனங்காண்பார்.

### செயற்பத்திரம்

பின்வரும் விடயங்களை உள்ளடக்கி பதம் என்னும் இசை உருப்படியின் இலட்சணத்தை விளக்குக.

- அமைப்பு
- சிறப்பும் தனித்துவமும்
- சாகித்தியத்தின் தன்மை
- உருப்படி அமைந்துள்ள மொழிகள்
- சிறப்பாகப் பாடப்படும் தெய்வங்கள்
- உருப்படியை இயற்றியவர்கள்
- உருப்படிக்கு உதாரணங்கள்

## உருப்படி இலட்சணம்

## பதம்

கடவுள் தோத்திரமாக உள்ள பாட்டுக்களை எல்லாம் பதங்களென ஒரு காலத்தில் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் பின்னர் அபிநயத்திற்காக நாயக நாயகி பாவமாக இயற்றப்பட்ட உருப்படிகள் பதங்களென அழைக்கப்பட்டு வந்தன. பதங்களை இயற்றிய வாக்கேயகாரர்கள் பதங்களில் வரும் நாயகன், நாயகி, சகி என்னும் பாத்திரங்கள் வாயிலாகத் தத்துவ உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். பதங்களில் கேட்பது எளிய சொற்களாக இருந்தாலும் அவை உயர்ந்த கருத்தை உணர்த்துவதை நாம் புரிந்து கொள்ள முடியும். நாயகன் பரமாத்வாகவும், நாயகி ஜீவாத்மாகவும், தோழி குருவாகவும் (மதுர பாவம்) நின்று விண்ணகம் அடைய உதவுகின்ற உண்மைகளை நமக்குப் பதங்கள் எடுத்துரைப்பதை காண்கிறோம்.

முக்கியமாக இவை நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படிகள் எனினும் மனதைக் கவரும்படியான அழகிய இசைமெட்டில் அமைந்துள்ளதால் கச்சேரிகளிலும் பாடப்படுகின்றன. சிருங்கார ரசமும், பக்தி ரசமும் அதிகம் பிரதிபலிக்கும் படியாகவே வாக்கேயகாரர்களால் இவை இயற்றப்பட்டுள்ளன. நாயகிகளும், சகிகளும் (தோழிகள்) பாடும் பதங்களே பெரும் பாலும் இருப்பினும் நாயகனால் பாடப்படும் பதங்களும் உள. பகிர் சிருங்காரம் (கௌரவ சிருங்காரம்) அந்தர் பக்தி என்னும் இரட்டைத் தாற்பரியத்துடன் கூடிய சாகித்தியமே பதத்தின் விசேட அம்சமாகும். ஏனைய பதங்களும், நகைச்சுவைப் பதங்களும் இயற்றப் பட்டுள்ளன. இசைப் புலவர்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியும் சிலர் பதங்களை

இயற்றியுள்ளனர். பதம், பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்னும் அங்கங்களைக் கொண்டது. சில பதங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்களும் உண்டு. சரணங்கள் ஒரே தாதுவில் பாடப்படும். சங்கதிகளும் கடின சஞ்சாரங்களும் தாதுவில் இருக்கமாட்டா. இராக பாவம் ததும்பும் பதங்கள் பெரும்பாலும் சௌக்க காலத்தியேயே பாடப்படும். சாகித்தியம் சுலபமாகவும், கிராமியச் சொற்களைக் கொண்டவையாகவும் பதங்கள் விளங்குகின்றன. அனுபல்லவியிலோ, கடைசிச் சரணத்திலோ இயற்றியவரின் முத்திரை காணப்படும். பதங்களை இயற்றுவோருக்குச் சாஸ்திர ஞானமும், கவித்துவமும், இராக ரஸ உணர்ச்சியும் இருப்பது மிக்க அவசியம். பெரும்பாலும் தமிழ்ப்பதங்கள் முருகக் கடவுள் மேலும் தெலுங்குப் பதங்கள் கிருஷ்ணபிரான் மேலும் பாடப்பட்டுள்ளன.

பதங்களை இயற்றியவர்கள் :-

1. தெலுங்குப் பதங்களை இயற்றியவர்கள்:
   ஷேத்ரக்ஞர், பரிமளரங்கர், கஸ்தூரிரங்கர், சாரங்கபாணி, மெரட்டுர் வெங்கடராம சாஸ்திரி போன்றோர்.
2. தமிழ்ப்பதங்களை இயற்றியவர்கள்:
   முத்துத்தாண்டவர், கவிக்குஞ்சபாரதி, கனம் கிருஷ்ணய்யர், மாம்பழக் கவிராயர், ஊத்துக்காடு வெங்கட ஸுப்பையர் போன்றோர்.

பதங்களுள் சில :-

| | | |
|---|---|---|
| 1. | வேலவரே | - பைரவி |
| 2. | தெருவில் வாரானோ | - கமாஸ் |
| 3. | வேலனை அணைந்தால் | - கமாஸ் |
| 4. | திருவொற்றியூர் தியாராஜன் | - அடாணா |
| 5. | பால் வடியும் முகம் | - நாட்டைக் குறிஞ்சி |

**தேர்ச்சி** : 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.3 இசைக்கருவிகளின் அமைப்பையும் பயன்பாடுகள் பற்றிய விளக்கங்களையும் பெறுவார்.

**செயற்பாடு** : 4.3.3 நாதஸ்வரம் என்ற வாத்தியத்தின் இலட்சணத்தை அறிவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**
- நாதஸ்வரத்தின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம்
- நாதஸ்வர வாத்தியம்
- நாதஸ்வர இசை அடங்கிய ஒலிநாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்**

- நாதஸ்வரத்தின் அமைப்பைக் குறிப்பிடுவார்.
- நாதஸ்வரம் வாசிக்கும் முறையினைக் கூறுவார்.
- நாதஸ்வரத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.3.3.1 :**
- மாணவர்கள் ஏற்கெனவே செவிமடுத்த வாத்தியங்களின் ஓசை பற்றிக் கலந்துரையாடச் செய்து, ஒலிப்பதிவுக் கருவியில் நாதஸ்வர இசையைப் போட்டுக்காட்டி, செவிமடுக்கச் செய்தல்.
- நாதஸ்வரம் மங்களகரமான ஒரு துளை வாத்தியம் எனக்கூறிப் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விளக்குதல்.
  - நாஸ்வரத்தின் அமைப்பு
  - நாதஸ்வரத்தின் சிறப்பு
  - பாகங்கள் குறிக்கப்பட்ட படம்
  - நாதஸ்வரம் வாசிக்கும் முறை
  - நாதஸ்வரம் வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள்.

**படி 4.3.3.2 :**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குதல்.
- அறிவுறுத்தலுக்கேற்பச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துதல்.

**படி 4.3.3.3 :**
- ஒவ்வொரு குழுக்களும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய குழுக்கள் அவற்றை அவதானித்துக் கருத்துக்கள் கூற

இடமளித்தல்.

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடி, மீளவும் வலியுறுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. நாதஸ்வர வாத்தியத்தின் சிறப்பினைக் குறிப்பிடுவார்.
2. நாதஸ்வரத்தின் அமைப்பை விளக்குவார்.
3. நாதஸ்வரம் வாசிக்கும் முறையினைக் கூறுவார்
4. நாதஸ்வரத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பார்.
5. நாதஸ்வரம் வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்களின் பெயர்களைக் கூறுவார்.

**செயற்பத்திரம்**

- நாதஸ்வர வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிக்குக.
- நாதஸ்வரத்தின் அமைப்பை விளக்குக.
- நாதஸ்வரவாத்தியத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
- நாதஸ்வரவாத்தியம் வாசிக்கும் முறையை விளக்கி இவ்வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யம் அடைந்த வித்துவான்களைக் குறிப்பிடுக.

**இணைப்பு**

## இசைக்கருவி - நாதஸ்வரம்

கோயில் திருவிழாக்களிலும், கல்யாண வைபவங்களிலும், ஊர்வலங்களிலும், மற்றும் மங்களகரமான வைபவங்களிலும் தனிச் சிறப்புடன் விளங்கும் ஒரு வாத்தியமாக நாதஸ்வரம் திகழ்கிறது. நாதஸ்வரத்தை நாயனம் என்றும் கூறுவர்.

நாதஸ்வரம் ஒரு காற்று வாத்தியம். மங்கள இசையை உண்டாக்கும் வாத்தியம். நாதஸ்வரத்தினின்றும் வெளிப்படும் நாதம் கனமுள்ளதாகவும் வெகுதூரம் கேட்கக் கூடியதாகவும் இருக்கும்.

இக்கருவி ஆச்சாமரம் என்னும் மரத்தால் செய்யப்படுகிறது. இவ்வாத்தியத்தின் மேற்பாகத்தை வெள்ளித் தகட்டினாலோ அல்லது தங்கத் தகட்டினாலோ மூடிச் சில வித்துவான்கள் பயன்படுத்தினர்.

கும்பகோணம் கும்பேசவரர் கோயிலிலும், ஆழ்வார் திருநகரிக் கோயிலிலும் கல் நாதஸ்வரங்கள் காணப்படுகின்றன.

பாகங்கள்

1. வட்ட வடிவமாக விரிந்து காணப்படும் அணைசு
2. உள்ளே கூடான நீண்ட மரக்குழலால் ஆகிய கூம்பு வடிவ உடல்
3. உடலின் மேல் பொருத்தப்படும் கெண்டை
4. கெண்டைக்கு மேல் அவ்வப்போது வைத்து இசைக்கப்படும் சீவாளி (இதற்கு நறுக்கு என்றும் பெயருண்டு)

அணைசு என்ற பகுதி "Rosewood" என்ற மரத்திலிருந்தும் சீவாளி என்ற பகுதி கொறுக்கந்தட்டையிலிருந்தும் செய்யப்படுகின்றன.

நாதஸ்வரமானது 2 முதல் 2½ அடி நீளமும், மேலிருந்து கீழ் விரிந்து செல்லக் கூடியதுமான கூம்பு வடிவத்தில் உள்ள ஒரு மரக் குழாயாலானது அதன் அடிப்பாகத்தில் வரிசையாக ஏழு ஸ்வரத்துளைகளும், பக்கங்களில் சப்தத்தை வகைப்படுத்தும் துவாரங்கள் ஐந்தும் காணப்படுகின்றன. மேல்பாகத்தில் உலோகத்திலான ஒரு கூம்பு (கெண்டை) பொருத்தப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப உபயோகித்துக்கொள்ள நறுக்குகளும் (சீவாளி) ஒரு குச்சியும் உள்ளன.

**வாசிக்கும் முறை**

நாதஸ்வரத்தை இரண்டு கைகளாலும் நேராகப் பிடித்து சீவாளியை வாய்க்குள் வைத்து ஊதும் போது காற்று வாத்தியத்துள் செலுத்தப்படுகிறது. அதே சமயத்தில் இரண்டு கை விரல்களாலும் ஸ்வரத்துளைகளைத் தேவைக்கேற்ப மூடியும் திறந்தும் ஸ்வரங்களை எழுப்பி இசை உண்டாக்கப்படுகிறது.

நாதஸ்வரத்திற்குரிய சுருதி வாத்தியம் ஒத்து என்னும் கருவியாகும். இது உருவ அமைப்பில் நாதஸ்வரத்தைப் போன்றது. இக்கருவியிலிருந்து ஆதாரசுருதி மட்டும் தான் வெளிவரும். தற்போது இக்கருவிக்குப் பதிலாக சுருதிப்பெட்டி பயன்படுத்தப்படுவதும் உண்டு. நாதஸ்வரத்திற்கு தாளக் கருவியாக அமைவது தவில் எனும் தோற்க் கருவியாகும். நாதஸ்வரக் கலைஞர், ஒத்து இசைப்பவர், தவில் வித்துவான், தாளக் கலைஞர் (ஜால்ராக் கலைஞர்) ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்த இசைக்குழுவைப் பெரிய மேளம் என்று அழைப்பதுண்டு.

நாதஸ்வரத்தில் இரண்டு வகை காணப்படுகின்றது.

1. பாரி
2. திமிரி

'பாரி' நாதஸ்வரம் நீளம் அதிகமானதாயும், ஆதாரசுருதி குறைவானதாயும் இருக்கும்.
'திமிரி' நாதஸ்வரம் நீளம் குறைவானதாயும், ஆதாரசுருதி கூடியதாயும் இருக்கும்.


இன்று கையாளப்படும் நாதஸ்வரம் சாதாரணமாக 2 கட்டைச் சுருதிக்குச் செய்யப் படுகிறது. தற்காலத்தில் பாரி நாதஸ்வரமே கூடுதலாக பாவனையில் உள்ளது.

திறந்த வெளியில், இசைப்பதற்கு ஏற்றது. இவ்வாத்தியத்தின் நாதம் வெகுதூரத்திலிருந்து கேட்டாலும் தரவல்லது. இவ்வாத்தியத்தில் வாசிக்கப்படும் மல்லாரி இசையைக் கேட்டவுடனே இறைவன் வீதி உலாவிற்குப் புறப்படுகிறார் என்பது கோயிலைச் சுற்றியும், பக்கத்து ஊர்களுக்கும் தெரிந்துவிடும்.

கோவில் வெவ்வேறு நேரங்களில் நடைபெறும் பூசைகளுக்கேற்ப வெவ்வேறு இசைகளை இசைத்து வழிபட வருவோர்க்குச் சிறந்த பணியைச் செய்பவர்கள் நாதஸ்வரக் கலைஞர்கள் விடியற்காலையில் இசைக்கப்படும் பூபாளம், பௌளி இராகத்திலிருந்து அர்த்த ஜாமம் முடித்து பள்ளியறைக்கென இசைக்கப்படும் ஆனந்தபைரவி, நீலாம்பரி முதலிய இராகங்களையும் இசை வடிவங்களையும் வாசித்துப் பரவசமூட்டுவர்.

திருமண விழாக்களிலும் வேறுபல விழாக்களிலும் இவ்விசை மங்கல இசையாகக் கையாளப்படுகிறது.
மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிப்போன இசை நாதஸ்வர இசை என்றால் அது மிகையன்று.

நாதஸ்வர இசையில் பிரபல்யம் பெற்ற வித்துவான்களாக திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை, திருப்பாம்புரம் நடராஜ சுந்தரம்பிள்ளை, திருவிழிமிழலை சுப்பிரமணியபிள்ளை போன்றோரைக் குறப்பிட முடியும்.


நாதஸ்வரம்
நறுக்கு
(சீவாளி)
கெண்டை
குச்சி
சீவாளிகள்
துளைகள்
அணைசு

**தேர்ச்சி** : 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக, கலாசார, பாரம் பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.2 வாக்கேயகாரரின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத் தொண்டினையும் விளக்குவார்.

**செயற்பாடு** : 5.2.2 கோபாலகிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத்தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :**

- கோபாலகிருஷ்ண பாரதியாரின் உருவப் படம்
- இயற்றிய உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவுநாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம்

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 5.2.1.1 :**

- கோபாலகிருஷ்ணபாரதியாரின் வாழ்க்கைக் காலத்தைக் கூறுவார்.
- இவரது கல்வி, இசை கற்ற முறை பற்றிக் குறிப்பிடுவார்.
- இவரது இசைப்பணி பற்றி விளக்குவார்.
- இவர் இயற்றிய உருப்படிகளின் சிறப்புக்களைக் குறிப்பிடுவார்.
- இவர் இயற்றிய உருப்படிகளில் இவரது பெயர் முத்திரையாக அமைந்திருப்பதை விளங்கிக் கொள்வார்.
- ஏனைய வாக்கேயகாரர் பற்றிய விடயங்களையும் அறியும் ஆற்றலையும் பெறுவார்.

**படி 5.2.1.2 :**

- இசைக்குத் தொண்டாற்றிய வாக்கேயகாரர் பற்றி மாணவர்களிடம் கேட்டறிதல்.
- கோபால கிருஷ்ண பாரதியாரின் படத்தைக் காட்சிப்படுத்தி இவரின் உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவுநாடாவை ஒலிக்கச் செய்தோ, ஆசிரியர் பாடிக்காட்டி வாக்கேயகாரரை இனங்காணச் செய்தல்.
- கோபாலகிருஷ்ணபாரதியார் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துதல்.
- கோபால கிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கைக்காலம் (1810-1896)
- பிறந்த ஆண்டு, இடம்
- பெற்றோர், பெற்றோரால் இவருக்கு இடப்பட்ட பெயர், சிறப்புப் பெயர்
- இளமைக்கல்வி, இசை கற்றமுறை
- இசைப்பணி
- இயற்றிய உருப்படி வகைகள்
- முத்திரை - கோபாலகிருஷ்ண, பாலகிருஷ்ண
- வகுப்பிலுள்ள மாணவர்களது தொகைக்கேற்பக் குழுக்களாகவோ, தனியாகவோ உரிய செயற்பத்திரத்தினை வழங்குதல்.

- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் மாணவரை ஈடுபடச் செய்தல்.
- மாணவர்கள் செயற்படுகிறார்களா என்பதை உறுதிசெய்து முழுமைப் படுத்துதல்.

**படி 5.2.1.3 :**
- குழுக்களின் பேறுகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குதல்.
- விடுபட்ட விடயங்களை குறிப்பிட்டு மீள வலியுறுத்தல்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. கோபாலகிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கைக் காலத்தைக் குறிப்பிடுவார்.
2. இவரது வரலாற்றினைக் கூறுவார்.
3. இவரது இசைப் பணியினைக் விளக்குவார்
4. இவரது முத்திரையினைக் குறிப்பிடுவார்.
5. இவரது வரலாறு, இசைப்பணி என்பவற்றைக் கற்பதன் மூலம் இசைக் கலைஞர்களை மதிக்கும் மனப்பாங்கினைப் பெறுவார்.

**செயற்பத்திரம்**

- கோபாலகிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கைக் காலத்தைக் குறிப்பிட்டு அவரது வரலாற்றை எழுதுக.
- அவரது இசைப்பணி பற்றி எழுதுக.
- இவருடைய முத்திரையைக் குறிப்பிடுக.

**இணைப்பு**

## கோபாலகிருஷ்ண பாரதியார் (1810 - 1896)

"எந்நேரமும் உந்தன் சந்நிதியிலே - நான்
இருக்க வேணும் ஐயா"

என்று உள்ளமுருக தேவகாந்தாரியைப் பாடித் தமிழ் நாட்டில் ஆன்மீகத்தையும் தமிழிசையையும் வளர்த்த பெருந்தகை கோபாலகிருஷ்ண பாரதியார் அவர்கள்.

இவர் 1810ஆம் ஆண்டு நாகபட்டினத்தைச் சேர்ந்த நரிமணம் என்ற இடத்தில் இராமசாமி பாரதியாருக்கு மகனாக அவதரித்தார். இவருடைய முன்னோர்கள் இசையில் தேர்ச்சி பெற்றவர்கள் தந்தையும் பாட்டனாரும் வீணை வாசிப்பதில் விற்பன்னர்கள் "கோவிந்த சிவம்" என்பவர்தான் இருடைய முதல்குரு.இவரிடமிருந்து சாஸ்திரங்களையும், யோகம் முதலியவைகளையும் பயின்றார். இளமையிலேயே பல இசை அரங்குகளையும், ஹரிகதை நிகழ்ச்சிகளையும் கேட்டுப் பயன் அடைந்தார்.

இந்துஸ்தான் இசைவித்துவான் "இராமதாஸ்" என்பவரிடம் இந்துஸ்தானி இசை முறையைக் கற்றார். கனம் கிருஸ்ண ஐயரிடம் கர்நாடக இசைமுறையைக் கற்றார். ஆனந்த தாண்டவபுரத்தில் மிராசு தாரராக இருந்த அண்ணு ஐயர் கோபாலகிருஷ்ண பாரதியாரை மிகவும் ஆதரித்தார். அவருடைய உதவியால் பாரதியார் காலட்சேபம் செய்து பணம் சம்பாதித்தார்.

இவர் கர்நாடக இசையிலும், இந்துஸ்தானி இசையிலும் தேர்ச்சி பெற்றவராதலால் பல புதிய வர்ணமெட்டுக்களுடன் கூடிய அநேக பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார். "கோபாலகிருஷ்ண" என்ற முத்திரையுடன் அநேக கீர்த்தனைகளை தமிழில் இயற்றியுள்ளார். சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தில் இருக்கும் 37 செய்யுட்களில் அடங்கிய நந்தனார் சரித்திரத்தைக் கோபாலகிருஷ்ண பாரதியார் "நந்தனார் சரித்திரம்" என்னும் இசை நாடகமாக

எழுதினார். இந்த இசைநடகத்தில் அழகிய கீர்த்தனைகளுடன் நொண்டிச்சிந்து, ஆனந்தக்களிப்பு, இருசொல் அலங்காரம், லாவணி, தண்டகம் முதலிய இசைமுறைகளும் கையாளப்பட்டுள்ளன. இந்நாடகம் தியாராஜசுவாமிகளின் "பிரஹலாத பக்தி விஜயம்" "நௌகா சரித்திரம்" ஆகிய இசை நாடகங்களோடு சரிசமமாகக் கருதப்படும் தகுதி வாய்ந்தது.

தியாகராஜரின் தூண்டுதலால் "சபாபதிக்கு" என்னும் ஆபோகி ராக கிருதியொன்றை இயற்றினார். மற்றும் தியாஜராஜரின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பின்பற்றி தாமும் தமிழில்,

1. ஹரஹர சிவசங்கர - நாட்டை
2. சரணாகதமென்று - கௌளை
3. பிறவாத வரம் தாரும் - ஆரபி
4. ஆடிய பாதமே கதி - வராளி
5. மறவாமல் எப்படியும் - ஸ்ரீராகம்

என்ற பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றினார். இசைமேதைகளான மகா வைத்தியநாதஙய்ரும் அவருடைய சகோதரர் இராமசாமி ஐயரும் கோபாலகிருஷ்ண பாரதியார் வீட்டிற்குச் சென்று அவருடைய புதிய இசை உருப்படிகளை ஆவலுடன் கற்று வந்தனர். டாக்டர் உ. வே. சுவாமிநாதஐயரும் சிலகாலம் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இசை பயிலும் பேறு பெற்றார். மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களும், மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களும் கோபாலகிருஷ்ண பாரதியாரின் நெருங்கிய நண்பர்களாக இருந்து ஊக்கம் கொடுத்தனர்.

நாகப்பட்டினத்தில் "நந்தனார் சரித்திரம்" அரங்கேற்றம் நடைபெற்ற போது ஒரு பிரெஞ்சுக்காரர் (சீசய்யா துரை) இதனை ஒரு நூலாக வெளியிடுவதற்கு மிகவும் துணை புரிந்தார். ஒருமுறை இராமலிங்க அடிகளும் இச்சரித்திரத்தைக் கேட்டு மிகவும் பாராட்டினார்.

கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றியுள்ள ஏனைய இசைநாடகங்கள்

1. இயற்பகை நாயனார் சரித்திரம்
2. திருநீலகண்ட நாயனார் சரித்திரம்
3. காரைக்கால அம்மையார் சரித்திரம் என்பவையாகும்

மேலும் இவர் "ஞானச் சிந்து" "ஞானக் கும்மி" முதலியவைகளையும் இயற்றியுள்ளார். சிறுவர்கள் மனம் பண்படும் பொருட்டு கும்மி, கோலாட்டம், ஊஞ்சல், நலங்கு, லாலி முதலிய பாடல்களையும் பாடியுள்ளார். வேறுபல அரிய கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார்.

எடுத்துக்காட்டுகள்

1. திருவடி சரணம் - காம்போஜி
2. தில்லைத்தலம் - சாமா
3. நடனமாடினார் - வசந்தா
4. கனசபேசன் சேவடி - கமாஸ்
5. கண்ணாலே கண்டேன் - நாதநாமக்கரியை

மேலும் இவர் பெண்களுக்காகச் "சாந்துப்பொட்டு தளதளங்க" என்று தொடங்கும் "சிதம்பரக்கும்மி" என்ற பாடலை இயற்றினார். இது சிதம்பர ஆலயத்திலுள்ள விநாயகர் முதலியோருடைய சந்நிதிகளை முறையே தரிசித்து வரும்போது அம்மூர்த்திகளைப் பாடுவதாக அமைந்துள்ளது.

எப்படித் தியாகராஜர் தமது கிருதிகள் மூலம் தெலுங்கு மொழியை வளப்படுத்தனாரோ அதேபோல பாரதியாரும் தமது கீர்த்தனைகளால் தமிழிசையை வளப்படுத்தினார். எனவே தமிழிசைப் புலவர்களிலே இவரே முதலிடத்தை வகிக்கின்றார். இவரது பாடல்களிலே பல

வேதாந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றன. அவர்களும் விளங்கி இன்புறத்தக்க முறையிலே பாடல்களை இயற்றியுள்ளது பாராட்டத்தக்கதாகும். பாரதியாரின் சீடர்களில் முக்கியமானவர்கள்.

1. சிதம்பரம் பொன்னுச்சாமி தீட்சிதர்
2. சிதம்பரம் ஸ்ரீ ராஜரத்தின தீட்சிதர்
3. மாயூரம் இராமசாமி ஐயர்
4. மாயூரம் நடேச ஐயர்
5. மாயூரம் சுப்பிரமணிய ஐயர்

கோபாலகிருஷ்ண பாரதியார் தனது 86 ஆவது வயதில் 1896 ஆம் ஆண்டு மகாசிவராத்திரியன்று பூதவுடலை நீத்து புகழுடம்பெய்தினார்.

பிற்குறிப்பு - சிதம்பரக் கும்மியில் சில கண்ணிகள்

"சாந்துப் பொட்டுத் தளதளென்ன நல்ல
சந்தன வாடை குமுகுமென்ன
கூந்த லழகுக் காரியெல்லாங் காலைக்
குவித்துக் கும்மி யடியுங்கடி"

"தித்தியென் றீச னடனம் புரிய மெய்த
தேவர்கள் பூமழை தான் சொரிய
மத்தளங் கொட்டிய கோபாலகிருஷ்ணனை
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி"

**கணினி வடிவமைப்பு**

| | |
|---|---|
| திருமதி. என். நந்தினி | தேசிய கல்வி நிறுவகம் |
| திருமதி. நாதீயா ஹிஸான் | தேசிய கல்வி நிறுவகம் |

**ஏனைய உதவிகள்**

| | |
|---|---|
| திருமதி. மாலனி விக்ரமநாயக்க | அழகியற் கல்வித்துறை, தே.க.நி. |
| திரு. பிரேமரத்ன பெரேரா | அழகியற் கல்வித்துறை, தே.க.நி. |